# மதிமுகி

இனிய துப்பறியும் நாவல்.

நாகை - சொ - தண்டபாணி பிள்ளை

இயற்றியது.

தமிழ்ச் சங்கம்,

4188.

மூன்றாம் பதிப்பு.

S. ராதா அண்டு கம்பெனி,

புத்தக வியாபாரிகள்,

மிண்டு பில்டிங்ஸ், மதராஸ்.

1926

[காபிரைட்.]

[அணா 8.

மனோரஞ்சினி பிரஸ்,
சௌகார்பேட்டை, சென்னை.

PRESENTED BY
V. PR.-PL. M. KASIVISVANATHAN
CHETTIAR TO
THIRUVALLUVAR LIBRARY, PAGANERI.

# மதிமுகி.

4188.

## முதலாம் அத்தியாயம்.

### அரசகேசரி அரங்கமேறுதல்.

வாசுதேவர் ஒரு சிறந்த தமிழ்ப்புலவர். சென்னைச் சர்வ கலாசாலை ஒன்றில் தமிழ்ப் போதகாசிரியராக விருந்தார். ஒருநாள் கலாசாலை உத்தியோகம் முடிந்தபிறகு, அந்திக் கடையைப் பார்த்துவிட்டுப் போகலாமென்று சென்றார். பலவகைப்பட்ட பழைய சாமான்களைக் குவித்துவைத் திருந்த ஒரு கடையில் நின்று சிலபொருள்களை எடுத்தெடுத் துப் பார்த்தார். அந்தப் பொருள்களுள் மிகவும் வேலைப் பாடமைந்த தந்த நகைப்பெட்டி ஒன்றிருந்தது. புலவர் அதை விலைக்கு வாங்க மனங்கொண்டார். ஏனெனில், சமீ பத்தில் தீபாவளிபண்டிகை வருவதாயிருந்தது. அக்காலத் தில் அப்பெட்டியைத் தமது அருமை மகள் அம் பாலிகைக்குத் 'தீபாவளி வெகுமதி' யாகக் கொடுக்கலா மென்று கருதினார்.

புலவர்கள் வறுமை புதுமையல்ல. வாசுதேவர் புலவரே யன்றோ? அதிலும் தமிழ்ப்புலவர்! அவர் செல்வராயிருப் பது கூடுமோ? சரஸ்வதிதேவி கடாட்சம் அவருக்கு மிகு தியும் உண்டென்பதில் ஐயமில்லை. ஆனால் அவள் மாமியின்

அனுக்கிரகம் அவருக்கு இல்லை. இயல்பே. ஆதலால், தம் மகளுக்கு நல்ல வெகுமதியளிக்க விரும்பினாரேனும், அதைக் கூடிய வரையில் குறைந்த விலைக்குப் பெற முயன்றார். அந்திக்கடைக்காரன் அவ்வளவு எளிதில் அதை விற்றுவிடுபவனாகத் தோற்றவில்லை. இனி 'பேரம்' பேசிப் பயனில்லையென்று கண்டார் போதகாசிரியர். மூன்றரை ரூபா— மூன்று முழு ரூபாய்கள் ஓர் அரை ரூபா—எடுத்துக் கடைக்காரனிடம் கொடுத்துவிட்டுப் பெட்டியைக் கேட்டார். கடைக்காரன், "இனி என்ன தடை? சொத்து உங்களுடையதாய்விட்டது; எடுத்துக்கொள்ளுங்கள்" என்றான்.

அச்சமயம், அந்திக் கடைகளைப் பார்த்துக்கொண்டு வந்த ஒரு யௌவன புருஷர் இந்தக் கடைக்கு வந்து அந்நகைப்பெட்டியைச் சுட்டி "இது என்ன விலை?" என்று கடைக்காரனைக் கேட்டார்.

"அது விற்றுயிற்றையா" என்றான் கடைக்காரன்.

"ஓகோ......இவருக்கா?" என்று சொல்லி யௌவனர், புலவர் முகத்தை நோக்கினார். வாசுதேவர் ஆமெனத் தலையை அசைத்துவிட்டு 'நாம் வாங்கிய பொருளுக்கு நம் எதிரிலேயே 'கிராக்கி' வருகிறதே, என்றெண்ணி உள்ளுக்குள் மகிழ்ந்து, பெட்டியை எடுத்துக்கொண்டு போய்விட்டார்.

அவர் அந்திக்கடைகளைக் கடந்து ஒரு பத்தடி தூரங் கூடச் சென்றிருக்கமாட்டார். அந்த யௌவனர் அவரை வழிமறித்து மிகவும் மரியாதையாக "ஐயா, தயவுசெய்து மன்னியுங்கள். ஏதோ நான் கேட்கிறேனென்று கோபித்துக் கொள்ளக்கூடாது......இவ்விதமான பெட்டியொன்று வாங்கவேண்டியே அந்திக்கடைக்கு வந்தீர்களா...?" என்றார்.

"இல்லை, இல்லை. ஏதாவது நல்லபொருள் இருந்தால் வாங்கலாமென்று வந்தேன். இது அகப்பட்டது."

"ஆனால், இது தங்களுக்கு அவசியம் வேண்டியதல்லவே ?"

"ஏன், எனக்கு வேண்டியது தான்."

"பழம் பொருளாயிருக்கிறதே, அதனாலேயோ ?"

"உபயோகமுள்ளதாயிருக்கிறது, அதனால்."

"ஆனால், இதைப்போன்றதும் இதைவிட உபயோகமுள்ளதும், புதிதுமான வேறொரு பெட்டி கொடுத்தால் இதைக் கொடுத்து விடுவீர்களா ?"

"ஏன்? இது நன்றாய்த்தானிருக்கிறது. இதுவே எனக்குப் போதும். இதை மாற்ற வேண்டிய அவசியமில்லை."

"உண்மைதான்............"

வாசுதேவர் சிறிது முன்கோபமுள்ளவர். யௌவனரை நோக்கி "சரிதான், போமையா" என்று கூறிவிட்டு முன்செல்ல யத்தனித்தார். யௌவனர் அவருக்கு எதிரில் போய் நின்றுகொண்டு, "ஐயா, நீங்கள் இதை எவ்வளவுக்கு வாங்கினீரோ, எனக்குத் தெரியாது. ஆனால் நீர் வாங்கிய விலைக்கு இரண்டத்தனை தருகிறேன், இதை எனக்குக் கொடுத்துவிடும்" என்றார்.

"வேண்டியதில்லை. வழியை விடும்."

"மூன்றத்தனை விலை ?"

"ஏன் ஐயா, வம்புக்கு வருகிறீர் ? பெட்டி நான் வாங்கினது. ஆதலால் என்னுடையது. அதை நான் விற்கப் போகிறதில்லை."

யௌவனர், புலவரை ஒருவகையாய் நோக்கிவிட்டு, மறுவார்த்தை கூறாமல் திரும்பிச் சென்றுவிட்டார்.

ஆனல் அவர் பார்த்த பார்வை புலவர் மனத்திற் பதிந்திருந்தது.

ஒரு மணி நேரத்திற்கப்பால், வாசுதேவர் புரசை வேளாளர் வீதியிலுள்ள தமது சிறு வீட்டுக்குள் நுழைந்தார். தம் எதிரே ஓடிவந்த அம்பாலிகையிடம் தாம் கொண்டுவந்த நகைப்பெட்டியை நீட்டி "அம்மா, இந்தா உனக்குத்தான். நன்றாயிருக்கிறதா, பார்" என்றார்.

அம்பாலிகை கண்ணுக்கினிய பெண்மணி; நல்ல குணவதி; எதையும் திருப்தியோடு ஏற்றுக்கொள்கிறவள். ஆதலால், தன் தந்தை கொடுத்த வெகுமதியை ஆவலோடு ஏற்று, ஏதோ அது அரசியர்க்குரிய வெகுமதிபோல மதித்து உள்ளம் உவந்து, முகமலர்ந்து அப்பெட்டியைப் பன்முறை முத்தமிட்டாள்.

பிறகு அவள் அதை எடுத்துக்கொண்டு வீட்டுக்குள் ஓடி, அதை நன்றாய் நீரிற்கழுவித் துடைத்து, அதில் தனக்குப் பிரியமான சில பொருள்களை வைத்துப் பத்திரப் படுத்தினாள்.

அன்றிரவு கழிந்தது மறுநாள் காலை மணி பத்தாகவும் புலவர், தமது உத்தியோகத்துக்குச் சென்று விட்டார். மாலை மணி ஐந்தாயிற்று. அம்பாலிகை தன் அருமைத் தந்தையின் வரவை எதிர்பார்த்து வீட்டு வாசலில் வந்து நின்றாள். வாசுதேவர் தம் மகள் நிற்பதைக் களிப்போடு பார்த்துக்கொண்டு வந்தார்.

அவர் வாசற்படியேறித் தம் புதல்வியை நோக்கி, "குழந்தாய்! பெட்டி எப்படி யிருக்கிறது?" என்றார்.

"ஓ! அதற்கென்ன? அது என்ன அழகாயிருக்கிறது! நானும் சண்பகமும் அதன் பித்தளைப் பிடியை நன்றாய்த்

துலக்கினேம். இப்பொழுது அதைப் பார்த்தால் தங்கம் போலிருக்கிறது."

"பேஷ்! உனக்குத் திருப்திதானே?"

"திருப்தியில்லாமல் என்ன! இத்தனை நாள் அது இல்லாமல் எப்படி யிருந்தேனே தெரியவில்லை."

இருவரும் வீட்டுக்குள் சென்றனர். புலவர் அம்பாலி கையை நோக்கி, "எங்கே, அதைக்கொண்டு வா. எப்படி வைத்திருக்கிருய் பார்ப்போம்" என்ருர்.

"ஆம், அப்பா. நானே காட்ட வேண்டுமென்று நினைத்தேன். இதோ கொண்டுவருகிறேன்" என்று தன் அறைக்குள் ஓடினுள்.

அறைவாயிலை அடைந்ததும் அவள் 'ஐயையோ!' என்று அலறினுள்.

அவள் தந்தை அவளைத் தொடர்ந்து அறைக்குள் சென்ருர். பெட்டி காணுமற் போய்விட்டது.

* * * * * *

போலிஸாருக்கு மிகவும் ஆச்சரியத்தை விளைத்த தென்னவென்ருல், அந்தப் பெட்டி எவ்வளவு சுலபமாகக் களவாடப்பட்டுள்ளது என்பதே. அம்பாலிகை தோட்டத் தில் இருந்தாள். வேலைக்காரி ஏதோ சாமான் வாங்கக் கடைக்குப் போயிருந்தாள். வாசுதேவர் கலாசாலைக்குப் போயிருந்தார். வீட்டுக்கதவு சார்த்தப் பெற்றிருந்தது. ஆனல் தாழ்க்கோலிடப்படவில்லை. யாரோ ஒருவன் வீட் டுக்கதவைத் தட்டினன். கதவு தானே திறந்துகொண்டது. வீட்டில் ஒருவரும் இல்லாததால் யாதொரு அசௌகரியமு மின்றி வந்தவன் பெட்டியை எடுத்துக்கொண்டு போய் விட்டான். எவ்வளவு எளிதில் காரியம் முடிந்துவிட்டது!

ஆனால், இதில் மற்றொரு விஷயம் கவனிக்க வேண்டியது. வந்த கள்வன் வேறொன்றையும் தொடவில்லை. அம்பாலிகை, மேஜைமீது தனது பணப்பையை வைத்திருந்தாள். அதில் ஐந்தாறு ரூபாயும், சுமார் முப்பது நாற்பது ரூபா பெறுமானமுள்ள கல்லிழைத்த திருகாணி ஒன்றும், தங்க மோதிரம் ஒன்றும் இருந்தன. அந்தப் பை மேஜையினின்றும் எடுத்து ஒரு பிறையில் வைக்கப்பட்டிருந்தது. அதை யல்லாமல் வேறு பல பொருள்களும் அறையிலிருந்தன. ஆனால் அவற்றுள் ஒன்றேனும் களவு போகவில்லை. பெட்டியை எடுத்த கள்வன், எடுத்துப்போகக் கூடிய வேறு பல பொருள்களும் இருக்க, அவற்றுள் எதையும் எடுக்காமல் பெட்டியைமட்டும் களவாடக் காரணம் என்ன? அகப்பட்டுக்கொண்டால் தனக்கு நேரும் அவதியும் அவமானமும் கள்வனுக்கு நன்றாய்த் தெரியும். எதையும் பொருட்படுத்தாது திருடப்புகுந்த ஒரு திருடன், ஓர் அற்பப்பெட்டி, விற்றால் இரண்டு ரூபா கூடக் கிடைப்பதரிது, அதை மட்டும் எடுக்கக் காரணமென்ன? மேஜையிலிருந்த பணப்பையைக் கண்டும், அதை எடுத்தும் பிறையில் விட்டுப்போகக் காரணம் என்ன?. இவற்றை யெல்லாம் யோசிக்கும்பொழுது அவன் அந்தப்பெட்டி ஒன்றையே குறித்து வந்தவனாகத் தெளிவாய்த் தெரிகிறது. ஆனால் அந்தப் பெட்டியைக் களவாடக் கருதும்படியாக அவ்வளவு விசேஷம், அதில் என்ன இருக்கிறதென்பது சற்றும் விளங்கவில்லை.

வாசுதேவர் கூறக் கூடியதெல்லாம் முன்னாள் நிகழ்ந்த நிகழ்ச்சியே.

"அந்த இளைஞன் நேற்று என்னை அவ்வளவு பிடிவாதமாகப் பெட்டியைக் கொடுக்கும்படி கேட்டபொழுதே

எனக்குச் சந்தேகம். அவன் என்னைவிட்டுப் போகும் பொழுது பார்த்த பார்வையே, 'இருக்கட்டும்; அந்தப் பெட்டியை நான் எவ்விதத்திலாயினும் கொண்டுபோய் விடுகிறேன்' என்று கூறியதுபோலிருந்தது."

காரியம் முழுவதும் பயனற்றதாகத் தோற்றியது. அந்திக் கடைக்காரனை விசாரித்தார்கள். அவனுக்குப் புல வரையும் தெரியாது, இளைஞனையும் தெரியாது. எங்கேயோ ஓரிடத்தில் அவன் அந்தப் பெட்டியை இரண்டு ரூபாய்க்கு ஏலத்தில் எடுத்தான். நல்ல விலைவந்தது, விற்றுவிட்டான். அவ்வளவுதான் அவன் சொல்லியது. திருப்பித் திருப்பி என்ன விதமாய்க் கேட்டபோதிலும் அதற்குமேல் ஒன்றும் அவனிடமிருந்து வெளிவரவில்லை.

வாசுதேவர்க்குத் தாம் அடைந்த நஷ்டம் மிகப் பெரிதாகத் தோற்றியது. அந்தப்பெட்டியுள் ஏதாவது ஓர் அந்தரங்க அறை இருக்கலாம். அதில் ஏதேனும் மிக விலையுயர்ந்த பொருள் பத்திரப்படுத்தி வைக்கப் பெற்றிருந்திருக்கலாம். இல்லாவிட்டால் அவன் அந்தப் பெட்டிமீது அவ்வளவு நாட்டங் கொள்ளவேண்டிய காரணமென்ன?

"ஆம், அப்பா! அதில் என்ன விலை உயர்ந்த பொருள் இருந்துதான், என்ன பிரயோஜனம்?" என்றாள் அம்பாலிகை.

"அம்பாலிகா! என்ன இப்படிக் கேட்கிறாய்? அது இருந்தால் இந்த வருஷமே உனது விவாகத்தை நிறைவேற்றி விடமாட்டேனா?"

அம்பாலிகை 'விவாகம்' என்ற சொல்லைக் கேட்கவும் சற்று நாணித் தலை குனிந்தாள். தனது அம்மான் மகன் புண்ணிய கோடியையே புருஷனாகப் பெறவேண்டுமென்று

பிரார்த்தித்துக் கொண்டிருந்தாள். ஆனால் அவ்வம்மான் மகனுக்குப் பெயர் மட்டும் புண்ணியகோடியே யொழிய கையில் அரைக்காசுமில்லை. அதை நினைத்து அம்பாலிகை பெருமூச்செறிந்தாள். இது நிற்க நகைப் பெட்டி களவு போனதுமுதல் வாசுதேவர் வீடுஅழகிழந்தது, சந்தோஷம் நீங்கியது, கலகலப் பொழிந்தது. இவ்வாறு இரண்டு மாதங்கள் கடந்தன. பிறகு திடீரென்று ஒன்றன்பின் ஒன்ருக விசேஷமான பல சம்பவங்கள் தொடர்ந்து நிகழ்ந்தன.

பிப்ரவரி ஸ்ரீ முதல் தேதி மாலை ஐந்தரை மணிக்கு வாசுதேவர் ஒரு சமாசாரப் பத்திரிகையோடு தம் வீடு வந்து சேர்ந்தார். தம் உத்தியோக உடையை மாற்றி வேறு உடை தரித்துக்கொண்டு கூடத்திலிருந்த ஒரு சாய்வான நாற்காலியில் உட்கார்ந்தார். வாசுதேவருக்கு வயது அதிகமாகாவிட்டாலும், மூக்குக் கண்ணாடியின் உதவியின்றிப் படிப்பதென்றால் சிறிது வருத்தந்தான். அந்த வருத்தத்திற்கு இடங்கொடாதபடி அவர் மூக்குக்கண்ணாடி ஒன்றை எப்பொழுதும் தம்வசம் வைத்திருப்பார். இப்பொழுது அதன் உதவியைக்கொண்டு கையில் கொண்டுவந்த சமாசாரப் பத்திரிகையைப் பிரித்துப் பார்க்கத் தொடங்கினார். உடனே தடித்த எழுத்துக்களிற் பதித்திருந்த சில வார்த்தைகள் அவர் கண்ணைக் கவர்ந்தன.

# குதிரைப் பந்தய அதிர்ஷ்ட சீட்டு.

## முதற் பரிசு ஒரு லட்ச ரூபா
## சீட்டு, இலக்கம் 22/514.

பத்திரிகை வாசுதேவர் கரத்தினின்றும் நழுவிக் கீழ் விழுந்தது. வீடு முழுவதும் சுழல்வதுபோல் தோற்றியது. அவருடைய சீட்டின் இலக்கம் 22/514 என்பதே. வாசுதேவர்க்கு அதிர்ஷ்டத்தில் நம்பிக்கை சிறிதும் கிடையாது. ஆதலால் அதிர்ஷட சீட்டு வாங்குவதில் அவர்க்குச் சற்றும் விருப்பமில்லை. ஆயினும் தம் நண்பர் ஒருவர் வேண்டு கோளுக்கிணங்கி ஒரு சீட்டு வாங்கினர். இப்பொழுது அச்சீட்டு அதிர்ஷ்டமுடையதாய் விட்டது !

வாசுதேவர் அச்சீட்டை வாங்கியபொழுதே அதன் இலக்கத்தைத் தமது தினசரிக் குறிப்புப் புத்தகத்தில் குறித்து வைத்திருந்தார். இப்பொழுது, அதை எடுத்து நோக்கினர்' ஆம், பத்திரிகையில் குறித்த இலக்கம் தமது சீட்டின் இலக்கமே ! 22/514 என்னும் இலக்கம் தெளிவாகத் தினசரிப் புத்தகத்தில் குறிக்கப்பட்டிருந்தது. ஆனல் அச்சீட்டு எங்கே ?

அது ஒரு டப்பியில் வைக்கப்பட்டிருந்தது. வாசுதேவர் அந்த டப்பியிருந்த இடத்தை நாடி ஓடினர். டப்பியைக் காணுமல் திகைத்துப் பின் வாங்கினர். அவர் மனம் அடித்தது. டப்பி இருந்த இடத்திலில்லை. ஆ, என்ன துரதிர்ஷ்டம் ! அது வெகு நாட்களாக அவ்விடத்திலில்லையென்ற கொடிய உண்மை அவர் ஞாபகத்திற்கு வந்தது.

" அம்பாலிகா ! அம்பாலிகா !"

அவள் அப்பொழுதுதான் அங்கு ஓடிவந்தாள். வாசுதேவர் அவளை நோக்கிக் குழறிக் குழறிக் கூறுகின்றார் :

"அம்பாலிகா !........அந்த டப்பி............அந்தச் சிறு டப்பி............!"

"எந்தச் சிறு டப்பி, அப்பா ?"

"நான் முன் ஒரு நாள் தீபாவளிக்குப்பின் வாங்கி வந்தேனே, அது அந்த மேஜை மேலேயே இருந்ததல்லவா, அது."

"ஆம், ஆம் அதை நாம் தாமே அன்றைக்கு எடுத்து வைத்தோம்........ஞாபகமில்லையா !"

"என்றைக்கு ?"

"அன்றைக்கு........முன் ஒரு நாள்.........."

"எங்கே வைத்தாய்.........அதைச் சொல்...சீக்கிரம் சொல்........என்ன துரதிர்ஷ்டம் ! என்ன துரதிர்ஷ்டம் ! ......சீக்கிரம் சொல்."

"வைத்த இடமா ?........அந்தத் தந்தப் பெட்டியில் தான் வைத்தோம்."

"களவு போய்விட்ட தந்தப் பெட்டியிலா ?"

"ஆம்."

"களவு போய்விட்ட தந்தப் பெட்டியிலா !" வாசுதேவர் இந்த வார்த்தைகளை, அச்சம் மீறா மெல்லக் கூறினர். பிறகு அவர் அம்பாலிகையின் காதைப்பற்றி இன்னும் மெல்லிய குரலில் "அம்பாலிகா ! அதில் ஒரு லட்சம் இருந்தது......" என்றார்.

ஒன்றும் அறியாத அம்பாலிகை "ஆனல், ஏனப்பா அதை எனக்கு முன்னமேயே சொல்லவில்லை" என்றாள்.

வாசுதேவர் திரும்பவும் "ஒரு லட்சம் !" என்று கூறிக்

தொடர்ந்து, "அதிர்ஷ்ட சீட்டுக்களில் முன்வந்த சீட்டு அது" என்றார்.

இக் கொடுந்துயரம் அவர்களை ஒடுக்கியது. நெடு நேரம் அவர்கள் பேச மனமும் நாவும் எழாது மௌன முற்றிருந்தார்கள். பின்னர் அம்பாலிகை அம்மௌனத்தை நீக்கி, "ஆயினும், என்ன அப்பா! எப்படியும் நமக்குப் பணங்கொடுத்து விடுவார்களல்லவா?" என்றாள்.

"எப்படிக் கொடுப்பார்கள்? என்ன சாக்ஷி யிருக்கிறது?"

"சாக்ஷிகூடவா வேண்டும்?"

"அவசியம்."

"நமக்கு ஒன்றும் சாக்ஷி யில்லையா?"

"இருக்கிறது."

"ஆனால்—"

"அது தந்தப் பெட்டியிலிருந்தது."

"காணாமற்போயிற்றே, அந்தத் தந்தப் பெட்டியிலா?"

"ஆம், ஒரு லட்சமும் அந்தத் திருட்டுப் பயலுக்குப் போய்ச்சேரும்."

"ஆ, என்ன அநியாயம்! ஏனப்பா, தங்களையன்றி ஒருவர்க்கும் அப் பணத்தைச் செலுத்தக் கூடாதென்று தாங்கள் தடுத்துவிட முடியாதோ?"

"எப்படிச் சொல்லலாம்? எப்படிச் சொல்லலாம்? அந்தக் கள்ளன் மகா சமர்த்தனாகக் காணப்படுகிறான். என்ன தந்திரம் கற்றிருக்கிறான்...அதை நினைத்துப் பார் ......அந்தத் தந்தப் பேழையை எப்படி எடுத்துப் போனான்; அதை நினைத்துப்பார்........

வாசுதேவருக்குச் சிறிது மனவெழுச்சி உண்டாயிற்று.

எழுந்தார், நிலத்தைக் காலால் உதைத்தார்: "முடியாது முடியாது! ஒரு லட்சத்தையும் அவன் அடைய முடியாது. எப்படி அடைவான்? அவன் என்ன தான் சமர்த்தனுனு லும் அவனுல் என்ன செய்யக்கூடும்? பணங் கேட்கப் போவானேல் பிடித்துச் சிறையிட்டு விடுவார்கள்! ஆ, திருடா, பார்க்கிறேன் உன் சமர்த்தை!" என்று தமக்குத் தாமே கூறிக் கொண்டார்.

"ஏதாவது வழி தோன்றியதா, அப்பா?" என்ருள் அம்பாலிகை.

வாசுதேவர், திடங்கொண்ட மனத்துடன், "அவனைச் சும்மா விடுவேனே? என்னதான் வந்தபோதிலும் நம் முடைய உரிமையை முடிவுவரை வாதிட்டே தீர்வேன் நியாயம் நமது பக்கமே நிற்கும். லட்சமும் நமக்குச் சேர வேண்டியது. அதை அவசியம் பெறத் தீர்மானித் துள்ளேன்" என்ருர்.

சில நிமிஷங்கள் பொறுத்து அவர் பின் கண்டவாறு ஒரு தந்தி எழுதி அனுப்பினர்:

"காரியதரிசியாரவர்கள்,

குதிரைப்பந்தய ஸ்தலம்,

கல்கத்தா.

"22/514 இலக்கச் சீட்டுக்கு உரியவன் நான். அதற்கு விழுந்த பணத்தை வேறெவருக்கும் செலுத்தினல், சட்டத் துக்கு விரோதமாகும். கவனிக்கவும்.

வாசுதேவர்."

இந்தத் தந்தி கிடைத்த அதே சமயத்தில் மேற் கூறிய காரியதரிசியார்க்கு மற்ெருரு தந்தி வந்தது. அது வருமாறு:

"22/514 இலக்கமுடைய சீட்டு என்வசம் உள்ளது.
"அரசகேசரி"

இந்த இரண்டு தந்திகளும் பத்திரிகைகளிற் பிரசுரிக்கப் பட்டபோது பொது ஜனங்களுக் குண்டான பெரு நகைப்பு இன்னும் அநேகருக்கு ஞாபகமிருக்கலாம். அரசகேசரி என்ற பெயரொன்றே ஏதோ ஆச்சரியமான காரியங்கள் நிகழப்போகின்றன என்பதற்குப் போதுமான அத்தாட்சியாயிருந்தது. ஆதலால், ஜனங்கள் எல்லோரும் இவ்விஷயத்தின் வளர்ச்சியை ஆவலோடு எதிர்பார்த்திருந்தார்கள்.

குதிரைப் பந்தயக் காரியதரிசியார், மேற்கூறிய தந்திகள் தமக்கெட்டியவுடன் அந்த சீட்டைப்பற்றி விசாரிக்கலாயினர். அது சென்னையில் ராஜாங்க உத்தியோகஸ்தராயிருந்த பாலசுந்தரம் என்னும் ஒருவர்க்கு விற்கப்பட்டதெனவும், அவர் சில மாதங்களுக்கு முன்னே தற்செயலாய் வண்டியிலிருந்து விழுந்து இறந்து போயினரெனவும், இறப்பதற்கு முன் தாம் வாங்கிய சீட்டை தம் நண்பர் ஒருவருக்கு விற்றுவிட நேர்ந்து விற்றுவிட்டதாகத் தம்முடன் உத்தியோகம் செய்து வந்த சிலரிடம் சொல்லியிருந்திருக்கிறாரெனவும் விசாரணையில் விளங்கிற்று.

" அவர் விற்ற சீட்டை வாங்கிய நண்பன் நான் தான் என்றார் வசுதேவர்."

" ஆனால் அதை ருசுப்படுத்தும் " என்றார் குதிரைப் பந்தயக் காரியதரிசியார்.

" ருசுப்படுத்தவா ? அது ஒரு பெரியகாரியமா ? பாலசுந்தரருக்கும் எனக்கும் நெருங்கிய பழக்க முண்டென்

பதைப்பற்றி யாரைக்கேட்டாலும் சொல்லுவார். அவர் தம் சிட்டை வாங்கிக்கொண்டு பத்து ரூபா பணம் கொடுக்கும்படி என்னைக் கேட்டார். நான் அப்படியே கொடுத்து சிட்டைப் பெற்றுக்கொண்டேன்."

"இதற்கு ஏதாவது சாக்ஷி உண்டா ?"

"இல்லை."

"ஆனால் நீர் இப்பொழுது எந்த ஆதாரத்தைக் கொண்டு, வாதிடுகிறீர்?

"பாலசுந்தரம் அவ்விஷயமாக எனக்கெழுதியுள்ள ஒரு கடிதத்தை ஆதாரமாகக்கொண்டு."

"அதைக் கொண்டுவாரும்."

"அது அந்தச் சிட்டுடன் சேர்த்துக் குத்திவைக்கப் பட்டிருந்தது."

"அதைக கண்டு பிடியும்."

அந்தக் கடிதத்தைப்பற்றி அரசகேசரி பத்திரிகைக்கு எழுதினன், தினவர்த்தமானி என்னும் பத்திரிகையில், பாலசுந்தரம் அரசகேசரிக்கு நேரில் ஒரு கடித மெழுதியிருந்ததாகவும், அதை அவன் தனது வக்கீல் அருணசலர் என்பவரிடம் ஒப்புவித் திருப்பதாகவும் பிரசுரிக்கப்பட்டது.

ஜனங்கள் பேரானந்த முற்றூர்கள் : அரசகேசரியின் கட்சியை வாதிக்க ஒரு வக்கீல்! என்ன ஆச்சரியம் ! அரசகேசரியும் சாதாரண மனிதர்களைப் போல வக்கீல் வைத்துத் தன் கட்சியை வாதிக்க முன்வந்தானே !

பத்திரிகைக்குச் சமாசாரம் சேகரிப்போர் அருணசலரைக் காண விரைந்து சென்றனர், அருணசலர் தாம் அரசகேசரியை நேரிற் பார்த்ததில்லை யெனவும், ஆனால் அவன் தம்மைத் தனக்கு வக்கீலாகத் தெரிந்தெடுத்தது

தமக்கு ஒரு பெருங்கௌரவமே எனவும், அவன் கட்சியைச் சிரத்தையோடு வாதிடத் தாம் சித்தமாயிருப்பதாகவும் தெரிவித்ததுமன்றி அவன் தம்மிடம் அனுப்பி ஒப்புவித்த பாலசுந்தரத்தின் கடிதத்தையும் காட்டினர், அந்தக் கடிதம் சீட்டு விற்கப்பெற்றதென்பதை ருசுப்படுத்திற்றாயினும் அதை வாங்கியவர் இன்னாரென்று காட்டவில்லை. கடிதத்தின் தலைப்பில் "என் அன்பிற்குரிய நண்பீர்" என்று மட்டுமே எழுதப்பெற்றிருந்தது.

அந்தக் கடிதத்தோடு வக்கீலுக்கு அனுப்பிய ஒரு சிறு குறிப்பில் அரசகேசரி "என் அன்பார்ந்த நண்பீர், என்பது என்னைக் குறித்ததே கடிதம் என்வச மிருப்பது ஒன்றே அதற்குப் போதுமான சாட்சியாகும்" என்று எழுதியிருந்தான்.

எங்குப் பார்த்தாலும் அரசகேசரி, வாசுதேவர் இவர்களைப்பற்றிய பேச்சாகவே இருந்தது. பன்னிரண்டு நாட்களுக்குப் பிறகு வாசுதேவர்க்கு ஒரு கடிதம் வந்தது. அதன் உறையின் ஒரு மூலையில், 'தமது பார்வைக்கு; அந்தரங்கம்' என்று எழுதியிருந்தது. அதைக் காணவும் வாசுதேவர் மிகவும் மனேசஞ்சலத்துடன் கடிதத்தைத் திறந்து பார்த்தார். அது வருமாறு:—

"அன்பார்ந்த ஐயா,"

"ஊரெல்லாம் நம்முடைய பேச்சாயிருக்கிறது. நம் விஷயம் இப்படிச் சிரிப்புக்கிடமாயிருப்பது நன்றாமா? நம் விஷயத்தைப்பற்றி நால்வர் நால்வகையாய்ப் பேச நாம் இடங்கொடுப்பானேன்? என் மட்டில் நான் ஓர் உறுதி கொண்டிருக்கிறேன்.

"இருக்கும் நிலைமை தெளிவாயிருக்கிறது: என்னிடத்திலிருந்தால் செல்லாத ஒரு சீட்டு என்னிடமிருக்கிறது. உம்மிடத்திலிருந்தால் செல்லக்கூடிய ஒரு சீட்டு உம்மிடம் இல்லை. ஆதலால், நாம் இருவரும் ஒருவரையன்றி ஒருவர் ஒரு காரியமும் செய்ய முடியாது.

"இப்பொழுது உம்முடைய பாத்தியதையை எனக்குக் கொடுத்துவிட நீர் ஒப்பமாட்டீர்; என்னுடைய சீட்டை உமக்குக் கொடுத்துவிட நானும் ஒப்பமாட்டேன்.

"இப்பொழுது நாம் செய்யக்கூடியதென்ன?"

"இந்தக் கஷ்டத்தை நிவர்த்திக்க ஒரே ஒருவழிதான் எனக்குத் தோற்றுகிறது. அதாவது: நாம் இருவரும் பங்கிட்டுக் கொள்வோம். அரை லட்சம் உமக்கு, அரை லட்சம் எனக்கு. இது நியாயமான வழியல்லவா? இந்த மனு முறை தவறாத தீர்ப்பு நம் இருவர் மனத்துக்கும் திருப்தியைத் தருமன்றோ?

"இது நீதிக்கடுத்ததா யிருப்பதோடு, உடனே முடியத்தக்கதுமா யுள்ளது. இந்தச் சமாதானம் சாவகாசமாய் யோசித்து நிறைவேற்றக் கூடியதல்ல; சந்தர்ப்பத்துக்குத் தலை தாழ்த்து நீர் ஒப்புக்கொண்டாக வேண்டியதொன்று. இதைப்பற்றிச் சிறிது சிந்திப்பதற்கு உமக்கு மூன்று நாள் தவணை தருகிறேன். வெள்ளிக்கிழமை காலை தினவர்த்தமானிப் பத்திரிகையில் நான் காட்டிய வழியை ஒப்புக்கொண்டு எல்லோர்க்கும் விளங்காத மறைமொழிகளால் உமது சம்மதத்தைத் தெரிவித்து அதன் தலைப்பில் 'அ.கே' என்று குறித்துக்காட்டி ஒரு விளம்பரம் வெளியிடுவீரென்று எதிர் பார்க்கிறேன். அப்படிச் செய்வீரானால், சீட்டு உடனே உமது கைக்கு எட்டும். நீர் அதைக்கொண்டு அகற்றரிய ஒரு லட்சத்தையும் பெற்று, நான் பிறகு குறிப்

பிடும் மார்க்கமாக அரை லட்சத்தை என்னிடம் கொடுத்து விட்டு மற்ற அரை லட்சத்தை நீர் எடுத்துக்கொள்ளும்.

"இதற்கு நீர் மறுத்தீரானல், வேறு வகையால் நீர் மறுக்கும் காரியத்தைச் சித்தி செய்துகொள்ள ஏற்பாடு செய்திருக்கிறேன். அந்த வகையை அனுசரிப்பதால், உமக்கு உண்டாகும் துன்பம் ஒருபுறமிக்க, என் விருப்பத்திற்கிணங்கி வந்தால் உமக்குக் கிடைக்கும் தொகையில், உம்முடைய சம்மதமின்மையால் எனக்கு நேரிடக் கூடிய அதிகச் செலவுக்காக இருபத்தையாயிரம் கழித்துக் கொள்ள வேண்டியிருக்கும். இதை அறியவும்.

"முன் அறிக்கை செய்யாது ஒரு காரியத்தைச் செய்வது எனக்கு வழக்கமில்லை. ஆகலால் உமக்கு எனதபிப்பிராயத்தை முன்னதாகத் தெரிவித்துவிட்டேன். இனி, உம்முடய மனம் எவ்வாருே அவ்வாறே செய்யலாம். உமக்கு வருவது லாபமாயினும் நஷ்டமாயினும் உம்மைப் பொறுத்ததே.

"இங்ஙனம்

"அன்பார்ந்த ஐயா,

"தங்கள் பால் மிகுந்த மரியாதையுள்ள

"அரசகேசரி"

இக்கடிதத்தைப் பார்த்ததும் வாசுதேவர்க்குண்டான கோபம் கொஞ்சமல்ல. அந்தக் கோபாவேசத்தில் ஒரு பெரிய தவறிழைத்துவிட்டார். அதாவது அந்தக் கடிதத்தைப் பலரிடத்தும்காட்டியதுமன்றி, அதற்கு நகல் எடுத்துக்கொள்ளவும் அனுமதி கொடுத்துவிட்டார். "ஒரு செப்புக்காசு—அந்தத் திருட்டுப்பயலுக்கு ஒரு செப்புக் காசு—கொடுப்பேனு! எனக்குரியதில் அவனுக்குப்பங்காம், பாகமாம்! ஒரு காசு ஏன் கொடுப்பேன்? இவனுக்கு இஷ்

டமிருந்தால் அந்தச்சீட்டைக் கிழித்தெறிந்தாலும் எறிந்து விடட்டும்" என்று கூச்சலிட்டார்.

அதைக் கேட்டிருந்தவருள் ஒருவர், "ஏன் ஐயா, ஒன்றுமில்லாமற் போவதைவிட அரைலட்சம் கிடைப்பது எவ்வளவோ மேலல்லவா?" என்றார்.

அதற்கு உபாத்தியாயர் "அதைப்பற்றி எனக்கு அக்கறையில்லை. என்னுடைய பாத்தியதை எப்படி என்னை விட்டகலும்? நியாயஸ்தலத்தில் என் பாத்தியதையை நான் ஸ்தாபிக்கிறேன்" என்று ஆத்திரத்தோடு கூறினர்.

"அரசகேசரியோடு வழக்குக்குப் போகிறதா! வேடிக்கையா யிருக்கிறதே!"

"அவனோடு எனக்கென்ன வழக்கு? பந்தயச்சீட்டுக் காரியதரிசி எனக்குச் சேரவேண்டிய ஒரு லட்சத்தையும் என்னிடம் கொடுக்கக் கடமைப்பட்டவ ரன்றோ?"

"அதற்கு உம்மிடத்தில் சீட்டாவது இருக்கவேண்டும்; அல்லது அதற்குரியவர் நீர்தாம் என்பதற்குச் சாட்சியாவது வேண்டுமே?"

"சாட்சிக்கென்ன? அரசகேசரியேதான் அச்சீட்டை அபகரித்துள்ளதாக ஒப்புக்கொள்கிறானே."

"பேஷ்! எந்த நியாயாதிபதி அரசகேசரியின் வார்த்தையை நம்புவாரென்று கருதுகிறீர்?"

"அதைப்பற்றி எனக்கு அக்கறையில்லை. நியாயஸ்தலம் இருக்கிறது, பார்த்துக்கொள்ளுகிறேன்."

ஜனங்களுக்கு உண்டான ஆனந்தத்திற்கு அளவில்லை. அவர்கள் தமக்குள் பந்தயம் போட்டுக்கொண்டனர். சிலர் அரசகேசரி, வாசுதேவரைத் தன் வழிக்குக்கொண்டுவந்து விடுவானென்றனர். வேறு சிலர் அவன் மிரட்டிப் பார்த்து விட்டுவிடுவா னென்றனர்.

வெள்ளிக்கிழமை யன்றைய தினம் தினவர்த்தமானிப் பத்திரிகைக்கு மிகவும் கிராக்கி ஏற்பட்டு விட்டது. அதை வாங்கிப் புரட்டிப் புரட்டிப் பார்த்தார்கள்: 'அ. கே'. என்ற குறிப்பு அகப்படவில்லை. வாசுதேவர் அரசகேசரிக்கு மௌனத்தால் விடையளித்து விட்டார். அதாவது: இருவருக்கும் யுத்தம் ஆரம்பித்துவிட்டது.

அன்று மாலைப் பத்திரிகைகளில், அம்பாலிகையை யாரோ அபகரித்துக் கொண்டு போய் விட்டார்களென்ற சமாச்சாரம் வெளிவந்தது!

* * * *

அரசகேசரி சம்பந்தப்பட்டவிஷயங்களில் ஒருவேடிக்கையான விஷயமாவது: போலீஸ் அதிகாரிகளின் பரிதாபகரமான நிலைமையே. அவர்கள் அறிவிற்கு ஒன்றும் எட்டவில்லை. அரசகேசரியோ போலீஸ், அந்தரங்கப்போலீஸ், துப்பறியும் போலீஸ், நியாயம், நியாயஸ்தலம், நியாயாதிபதி, நியாயவாதிகள் முதலிய தடைகள் ஒன்றுமே இல்லாதது போலக் காரியங்களைச் செய்கிறான்; எழுதுகிறான் ஒன்றும் அவனுக்குஇடையூறாகத் தோற்றவில்லை. ஒருவரையும் அவன் லட்சியமாகக் கருதவில்லை.

ஆயினும், போலீஸார் அயர்ந்திருப்பதில்லை. அவர்களால் கூடியமட்டும் பார்க்கிறார்கள். அவன் பெயரைக் கேட்ட மாத்திரத்தில், போலீஸ் உத்தியோகஸ்தர்கள் அனைவருக்கும் உச்சிமுதல் உள்ளங்கால்வரையில் கோபாக்கினி பற்றி எரிகிறது. அவன அவர்களின் ஜன்மவிரோதி. அவர்களைப் பரிகாசம் செய்பவன்; அவர்களுக்குக்கோபமூட்டுகிறவன்; அவர்கள் இருக்கிறார்கள் என்பதை அறவே மறந்து விடுகிறவன். அப்படிப்பட்ட விரோதியோடு ஒருவன் என்னசெய்வது?

அம்பாலிகை காணாமற் போனதைக் குறித்துப் போலீஸ் அதிகாரிகள் மிகவும் சிரத்தையோடு விசாரித்தனர். அவள் காணாமற்போன நேரம், அவளைக் கடைசியாக பார்த்தவர்கள் இன்னார், அப்பொழுது அவள் இருந்த நிலைமை முதலிய பல விஷயங்கள் விசாரிக்கப்பட்டன. விசாரித்ததால் விளங்கிய விஷயங்கள் அம்பாலிகை இருக்குமிடத்தை விளக்க வல்லனவாயில்லை. விசாரிக்க விசாரிக்க காரியம் குழப்ப முற்றதேயன்றி விளக்கமுறவில்லை.

இவ்வளவு தொல்லைகளோடு தொடங்கும் வழக்கில் மனவுறுதியோடு நின்று முடிவுகாணவல்லவர் வாசுதேவரால்லர். தன் மகள் காணாமற்போனது குறித்து ஆறாத் துயரமெய்தி, மனஞ்சோர்ந்து, தன் எதிரிக்கு அடங்கி அமையத் தீர்மானித்துவிட்டார். கண்டோர் கண்டவாறு பேசக்காரணமான விளம்பரம் ஒன்று தினவர்த்தமானிப் பத்திரிகையிற் காணப்பட்டது. அதில் வாசுதேவர் தமது தோல்வியையும் எதிரி கூறியவாறு செய்யச் சித்தமா யிருப்பதையும் தெரிவித்திருந்தார். அவர் முனைந்த போர் முழுத்தோல்வியாய் முடிந்தது. நான்கு நாட்களில் யுத்தம் முடிந்துவிட்டது.

அதற்கப்பால் இரண்டு நாட்கள் கழித்து வாசுதேவர் மயிலாப்பூருக்குச் சென்று, குதிரைப் பந்தய முதலாளிகளின் சென்னைக் காரியதரிசியைக் கண்டு, அவரிடம் 22/514 இலக்கமுள்ள சீட்டைக் கொடுத்தார்.

காரியதரிசியார் திடுக்குற்று "ஆகா, கடைசியில் சீட்டு உம் கைக்கு வந்துவிட்டதா? அவர்கள் திருப்பிக்கொடுத்து விட்டார்களோ?"

"கைமறதியாய் எங்கேயோ வைத்துவிட்டேன்; இப்பொழுதுதான் அகப்பட்டது" என்றார் வாசுதேவர்.

"ஆனால் நீர் சொன்னது................ஏதோ ஒரு வழக்கிருந்த.........."

"அதெல்லாம் பொய்."

"எப்படியிருந்தாலும், எங்களுக்குச் சரியான சாக்ஷியம் வேண்டுமே?"

"என் நண்பர் கடிதம் போதாதோ?"

"போதுமானது."

"அது, இதோ இருக்கிறது."

"நல்லது. தயவுசெய்து இவைகளை இங்கே கொடுத்து விட்டுப் போம். இவைகளை ஒத்துப்பார்க்க எங்களுக்கு இரண்டுவாரகாலம் கொடுப்பதுண்டு. அதற்குள் நான்பார்க்க வேண்டுவனவற்றைப் பார்த்துக்கொண்டு உமக்குத் தெரிவிக்கிறேன். நீர்வந்து பணத்தைப் பெற்றுக்கொள்ளலாம். இதற்கிடையில், நீர் இதைப்பற்றி வெளியில் ஒன்றும் சொல்லாமல் காரியத்தைக் காதும் காதும் வைத்தாற்போல் முடித்துக் கொள்வது நல்லது."

"நானும் அப்படித்தான் உத்தேசித்திருக்கிறேன்."

வாசுதேவர் வீட்டுக்குத் திரும்பிவிட்டார். அவர் காரியதரிசியார்க்கு வாக்களித்ததுபோல விஷயத்தை வெகு அந்தரங்கமாகவே வைத்திருந்தார். காரியதரிசியாரும் அங்ஙனமே இதைப்பற்றி வாய்திறந்திலர். ஆனால், சில அந்தரங்கங்களை என்னதான் ஜாக்கிரதையாகப் போற்றிவந்தாலும், அவை எவ்வாறேனும் வெளிப்பட்டு விடுவது வழக்கம். இவ்வந்தரங்கமும் அவ்வாறேயாயிற்று. இருந்தாற்போலிருந்து, ஊரெல்லாம் ஒரு வதந்தி பரவியது. அதாவது, அரசகேசரி 22/514 இலக்கமுள்ள சீட்டை வாசுதேவர்க்கு அனுப்பி விட்டான் என்பதே. அவ்வளவு அருமையான சீட்டைக் கொடுத்துவிட அவன் எவ்வளவு மனத் துணியுடையவனாயிருக்கவேண்டும்! ஆனால் அச்சீட்டுக்குமேல் அருமையான

தொன்றை அதற்குப் பிரதியாக அபகரித்துக்கொண்ட பிறகே சீட்டைக் கொடுத்தானென்ப துண்மையே. ஆனால், அந்த அருமையான பொருள்—அம்பாலிகை—தன் கையை விட்டுத் தப்பித்துக் கொண்டு போய்விட்டாலோ? அம்பாலிகையை மீட்க முயல்பவர்களின் முயற்சி பயன்பட்டுவிட்டாலோ? அவன் எண்ணம் ஈடேறாதொழியும். அவ்வாறு தன் எண்ணம் ஈடேறாதொழியவிடக் கூடியவன் அரசகேசரியா? இது ஒரு பெருங்கேள்வி.

---

# இரண்டாம் அத்தியாயம்.

## தந்தையை அடைந்த தனயை.

அம்பாலிகையைக் கண்டுபிடிப்பது அவசியமாயிற்று. அதற்குப் போலீஸார் எவ்வளவோ முயன்றார்கள். ஆனால் பயன்படவில்லை. ஜனங்களோவெனில், "அம்பாலிகை இருப்பது அரசகேசரி வசத்தில்; அதிற் சிறிதும் சந்தேகமில்லை. தான் முதலிற்கேட்ட அரைலக்ஷத்தையும் பெற்றுக் கொள்ளாமல் அவன் அவளை விடப்போகிறதில்லை. இதுவும் நிச்சயம். ஆனால் இதற்குக் கேசரியும் புலவரும் சந்திக்காமல் முடியாது. இவர்கள் சந்திப்பது எங்கே? எப்பொழுது? எப்படி? அங்கே அப்பொழுது போலீஸாரை வரச்செய்து, அவனைச்சிறைபிடிக்கச்செய்வது வாசுதேவரால் ஆகக்கூடிய காரியமல்லவா? அப்படி அவர் செய்தால், பணமும் போகாது, பெண்ணும் கிடைத்துவிடுமே" என்றார்கள்.

வாசுதேவரைக்காண வருவோர் கணக்கில்லை. அவர், 'இதேது பெருந்தொல்லையாய் விட்டதே' என்று வருந்தி யார் என்ன கேட்டபோதிலும் ஒன்றும் சொல்வதில்லையெனத் தீர்மானித்திருந்தார். ஆனால் அந்தப்படி இருக்க முடியவில்லை. சிலர் அவரை அணுகி விசாரிக்கத் தொடங்கிய பொழுது அவர், "எனக்கு ஒன்றும் தெரியாது; நடக்கிறபடி நடக்கட்டும்" என்றார்.

"குழந்தை அம்பாலிகை?"

"தேடிக்கொண்டுதான் இருக்கிறார்கள்?"

"அரசகேசரி தங்களுக்கு எழுதவில்லையோ?"

"இல்லை."

"சத்தியமாய்ச் சொல்வீர்களா?"

"முடியாது."

"அதாவது: அரசகேசரி தங்களுக்கு எழுதி யிருக்கிறானென்பதை ஒப்புக்கொள்கிறீர்கள். நல்லது, அவன் என்ன சொல்லுகிறான்?"

"அதைப்பற்றி நான் சொல்வதற்கு ஒன்றுமில்லை."

வக்கீல் அருணாசலரும் இங்ஙனமே வினவப்பட்டார். ஆனால் அவர், யார் என்ன கேட்டபோதிலும் ஒரேபதிலாக "அரசகேசரி என்னுடைய கட்சிக்காரன். அப்படி யிருக்க அவன் அந்தரங்கங்களை நான் எப்படி வெளிப்படுத்தக் கூடும்" என்று கூறிவிடுவார்.

இந்த அந்தரங்கங்கள் எப்போது வெளிப்படுமோ என்று ஜனங்கள் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். அரசகேசரி தன் காரியத்திற்கு இடையூறாய் நிற்பவர்களை அகப்படுத்தத் திடமான வேலை ஏதோ அந்தரங்கத்திற் சித்தப்படுத்திக் கொண்டிருந்தான். போலீஸாரோ, வாசுதேவரை இராப்பகல் ஓயாது காத்துக் கவனித்து வந்தனர். ஜனங்கள் 'அரசகேசரி அகப்படுவானா? போலீஸார் இம்முறையும் அவனைப் பிடிக்கமுடியாமல் அவமானப்படுவார்களா?' என்று பலவாறாகப் பேசிக்கொண்டனர்.

ஆனால் அக்காலத்தில் இந்த விஷயத்தின் உண்மை முற்றும் வெளிவரவில்லை. இப்பொழுது நாம் அவ்வுண்மையினை நமது வாசகர்களறியக் கூறுகிறோம்.

மார்ச்சு மாதம் 12உ புதன்கிழமை மயிலாப்பூர் பந்தயச் சீட்டுக் காரியதரிசியாரிடமிருந்து வாசுதேவருக்கு ஒரு கடிதம் வந்தது. வெள்ளிக்கிழமை மத்தியானம் இரண்டு மணிக்கு ஆயிரம் ரூபா நோட்டுக்கள் நூறு அவர் கையிற் கொடுக்கப்பட்டன. அவர் அவைகளை எண்ணிக்கொண்டிருந்தார். எண்ணும்பொழுதே அவர் கைகள் நடுக்கமுற்றன. ஏனெனில், அந்தப் பணம் அம்பாலிகைக்குப் பிரதியாகக் கிடைத்தனவன்றோ? அப்பொழுது அவருக் கெதிரே தெருவோரத்தில் ஒரு வண்டி நின்றுகொண்டிருந்தது. அதனுள் இருவர் ஏதோ தம்முள் உரையாடிக் கொண்டிருந்தனர். அவர்களுள் ஒருவர் முகம் அதிமனோதிடமும் நட்பபுத்தியும் காட்டிற்று; அவர் உடையோ முகக்குறிக்கு முரணாகச் சாதாரணமாயிருந்தது. அவரே அந்தரங்கப் போலீஸ் உத்தியோகஸ்தர்; கோபாலர்-பழைய கோபாலர், அரசகேசரியின் ஜன்மவிரோதி.

கோபாலர் தம் எதிரேயிருந்த தமது கீழ் உத்தியோகஸ்தர் பங்காருவை நோக்கி, "ஐபா வந்து விடுவா... சிசை வில், எல்லாம் தயாரா யிருக்கிறதா?" என்றார்.

"இருக்கிறது."

"நாம் எத்தனை பேர்?"

"'எட்டு—பைஸிகல்களில்' வருபவர் இருவரையும் கூட்டி."

---

*அரசகேசரி என்ற நவீனகத்தில் இவ்விஷயம் விளங்கும்.

"மூவருக்குச் சமானமான என்னையும் ஒருவனுகச் சேர்த்தோ? சரிதான், போதும்; ஆனல் அதிகமென்று சொல்லமுடியாது. அந்த வாசுதேவர் நம்மைவிட்டுத் தப்பி விடக்கூடாது. என்ன வந்தாலுஞ் சரியே. அவர் தப்பிவிட்டால், நாம் ஏமாந்தோம். அவர் அவனைக் குறித்தவிடத்தில் சந்திப்பார். அவன் அரை லட்சத்தைப் பெற்றுக்கொண்டு அந்தப்பெண்ணை விட்டுவிடுவான். காரியம் முடிந்துவிடும்."

"இந்தப் புலவர் ஏன் நம்மோடு ஒத்து வேலை செய்யக் கூடாது? அப்படிச் செய்தால் காரியம் எவ்வளவு எளிதாய் விடும். தமக்கும் லாபந்தானே. இந்த அரைலட்சம் அவனுக்குக் கொடுக்கவேண்டிய அவசியமில்லையே."

"வாஸ்தவந்தான். அவர் பயப்படுகிருர் பாவம். அவனை ஏமாற்றப் போய்த் தம் பெண் போய்விடுமோ என்றஞ்சுகிருர்."

"எவனை?"

"அவனைத் தான்."

கோபாலர் இந்த 'அவனை' என்ற பதத்தை உச்சரித்த போது அவர் உள்ளம் கலங்கிற்று. ஏதோ தெய்வீக சக்தியுடைய ஒருவனைப்பற்றிப் பேசுவர்போல் காணப்பட்டார்.

"என்ன வேடிக்கை. அவருக்கு நன்மை செய்வதற்கு நாம் அவருக்கு எதிரியாகவிருந்து வேலை செய்ய வேண்டியிருக்கிறதே" என்ருர் பங்காரு.

"கேசரி சம்பந்தப்பட்டால், காரியங்கள் தலைகீழாகவே நடக்கும்" என்று பெருமூச்செறிந்தார் கோபாலர்.

ஒரு நிமிஷம் கழிந்தது.

"ஜாக்கிரதை!" என்று சொல்லிவிட்டுக் கோபாலர்

வண்டியைவிட்டிறங்கினர். பங்காருவும் இறங்கினர். இரு வரும் தெருவின் ஓரமாய், கடைகளில் வைத்திருக்கும் பொருள்களை வேடிக்கைபார்த்துக்கொண்டே மெல்ல நடந்தனர்.

"புலவர் மிகவும் அமைதியோ டிருக்கிறாரே. கையில், ஒருலட்சம் வைத்திருப்பவர் அவ்வளவு அமைதியாயிருப்பதுண்டோ?" என்றார் கோபாலர்.

"இருந்தா லென்ன?"

"ஒன்றுமில்லை......ஒன்றுமில்லை. அதைப்பற்றி யல்ல. எனக்குச் சந்தேகமா யிருக்கிறது. அது.....அது.....கேசரி......அது கேசரி".

அச்சமயத்தில் வாசுதேவர் ஒரு புஸ்தகக் கடைக்குச் சென்று சமாச்சாரப் பத்திரிகை ஒன்று விலைக்கு வாங்கி, அதைப் பிரித்துப் பார்த்துக்கொண்டு மெல்ல நடந்தார். சிறிது தூரம் செல்லவும் ஒரு மோட்டார் வண்டி நிற்குமிடத்தை அடைந்தார். உடனே பத்திரிகையை மடித்து வைத்துக்கொண்டு, சட்டென்று அவ்வண்டியில் ஏறி உட்கார்ந்தார். மறு நிமிஷம் வண்டி புறப்பட்டுவிட்டது. சற்று நேரத்தில் கண்ணுக்கும் மறைந்துவிட்டது.

"ஆ! மோசம்போனோமே. வண்டி புறப்படுவதற்குத் தயாராக நின்றுகொண்டிருந்தது போலிருக்கிறது. ஆயினும் குற்றமில்லை. வண்டியின் நம்பர் தெரியுமல்லவா?" என்றார் கோபாலர்.

பங்காரு, "ஆம், தெரியும். 526." என்றார்.

.....................................................................................................

மோட்டார் வண்டி பல வீதிகளைக் கடந்து, ஒரு மாடி வீட்டுவாயிலிற் சென்று நின்றது. வண்டியுள் இருந்தவர் வண்டியை விட்டிறங்கி, வண்டிக்காரனைப் போகும்படிக்கூறி

விட்டு, அவ்வீட்டு வாயிற் கதவருகே இருந்து ஒரு தந்தி முளையை அழுத்தினர். கதவு திறந்தது. ஒரு வேலைக்காரன் வெளியில் வந்தான். வண்டியிலிருந்து இறங்கி வந்தவர் அவனை நோக்கி, "புரசையிலிருந்து வந்த ஒரு வக்கீல் இங்கிருக்கிறாரா?" என்று கேட்டார்.

"இருக்கிறார். தயவு செய்து தாங்கள் இன்னாரென்று தெரிவிப்பீர்களா?"

"வாசுதேவர் வந்திருப்பதாகச் சொல்."

வேலைக்காரன் உள்ளேசென்று சற்று நேரத்தில் திரும்பிவந்து, வாசுதேவரை அழைத்துக்கொண்டு, மாடிக்குச் சென்றான். மாடியில் ஒரு விசாலமான அறையில், நாற்காலி ஒன்றின்மீது அருணாசலர் உட்கார்ந்திருந்தார். அவர் வாசுதேவரைக் கண்டதும், வாருங்கள். உங்களைத்தான் எதிர்பார்த்திருந்தேன். உட்காருங்கள்" என்று சொல்லிவிட்டு, வேலைக்காரனை நோக்கி, "நீ போகலாம்" என்றார்.

வேலைக்காரன் போய்விட்டான். வாசுதேவர், அருணாசலருக்கெதிரே ஒரு நாற்காலியில் அமர்ந்தார். சுவரில் மாட்டப்பெற்றிருந்த கடியாரம் ஒன்று மூன்றுமணி யடித்தது.

"இதுதானல்லவா குறித்த நேரம்? வந்துவிட்டானா?" என்றார் வாசுதேவர்.

"இன்னுமில்லை" என அருணாசலர் கூறினர்.

வாசுதேவர் முகத்தைத் துடைத்துக்கொண்டு, "அவன் வருவானா?" என்றார்.

"நீங்கள் கேட்பது போல, எனக்கும் அதைப்பற்றி அறிய ஆவலாய்த் தானிருக்கிறது. ஆனால் அவன் வந்தால், என்ன நேருமோ என்று அஞ்சுகிறேன். ஏனென்றால், நான் இங்கு வந்தது முதல் போலீஸ் சேவகர்கள் இந்த வீட்டில்

நோக்கமாக இருக்கிறதாகத் தெரிகிறது. என்னைப்பற்றி அவர்களுக்கு ஏதோ சந்தேகம் இருக்கும்போல் தோன்றுகிறது" என்றார் வக்கீல்.

"எனக்கு அதற்குமேல் சந்தேகமாயிருக்கிறது. என்னைத் தொடர்ந்த அந்தரங்கப் போலீஸார்கள் நான் இங்கு வந்திருப்பதை அறிந்திருக்கக்கூடும் என்றெண்ணுகிறேன்."

"ஆனால்......"

"அது என்னுடைய குற்றமா? என்மேல் அவன் ஏதும் குற்றஞ் சாட்ட முடியாது. அவன் கூறியபடி நடப்பதாக நான் வாக்களித்தேன். குறித்த நேரத்தில் பணத்தைப் பெற்றுக்கொண்டு, குறித்த விதமாக இங்குவந்து சேர்ந்தேன். என் அருமைமகள் க்ஷேமத்தைக் கருதி நான் சொன்ன சொல் தவறாது நடந்துவிட்டேன். அவன் தான் சொன்ன சொல் தவறாது நடப்பது அவனைப் பொறுத்தது. அவன் வரும்போது என் புத்திரியையும் கொண்டு வருவானல்லவா ?"

"கொண்டு வருவானென்று தான் நம்புகிறேன்."

"நல்லது, நீங்கள் அவனை இதற்குமுன் நேரில் பார்த்திருக்கிறீர்களல்லவா ?"

"இல்லை" என்றார் அருணாசலர்.

வாசுதேவர், "அப்படியா?" என்று கூறிவிட்டுத் தம் சட்டைப்பைக்குள் இருந்த ஆயிரம் ரூபா நோட்டுக்கள் நூறையும் எடுத்து ஐம்பது ஐம்பதாகப்பிரித்து மேஜைமீது வைத்தார். பிறகு இருவரும் மௌனமாயிருந்தார்கள். ஏதோ மணியடிப்பதுபோல் வாசுதேவருக்குத்தோற்றியது; காதுகொடுத்து கவனித்தார். அருணாசலரும் அதி ஆவலோடு கவனித்தார். ஒரு நிமிஷநேரம் வக்கீல் மிகவும் மனக்கலக்கமுற்றமுகத்தினராயிருந்தார்; திடீரென்று தம்

இருக்கையைவிட் டெழுந்து, "நாம் அவனைப் பார்க்கப் போகிறதில்லை. எப்படிப் பார்க்கமுடியும்?....அவன் பைத்தியக்காரன்! நம்மை நம்புகிறான் உண்மையே. நாம் அவனைக் காட்டிக் கொடுக்கக்கூடியவர்கள் அல்ல, உண்மையே. ஆனால், அவனுக்கு விரோதிகள் வேறிருக்கின்றனர்" என்றார்.

வாசுதேவர் மேஜைமீதிருந்த நோட்டுக்களை தொட்டுத் தொட்டுப் பார்த்துவிட்டு, "அவன் வந்துவிடுவானானால்--அவன் வந்துவிடுவானானால் போதும். அம்பாவிகையை மீட்டும் பெறுவதற்கு நான் இந்த ஒரு லக்ஷத்தையும் கொடுத்துவிடுவேன்" என்றார்.

கதவு திறந்தது.

"இது போதும், வாசுதேவரே."

யாரோ ஒருவர்—நல்லுடை யுடுத்த வாலிபர்—கதவண்டையில் நின்றுகொண்டிருந்தார். வாசுதேவர் அவர் இன்னாரென்பதை யறிந்துகொண்டு, அவரை நெருங்கி, "அம்பாவிகை! எனது மகள் அம்பாவிகை எங்கே!" என்றார்.

அரசகேசரி—வந்த வாலிபர் அரசகேசரியே-கதவைச் சாத்திவிட்டு அருணாசலரருகே சென்று "நண்பரே! நீர் செய்யும் உபகாரத்தை நான் மறவேன்" என்றான்.

அருணாசலர், "ஆனால் நீ மணியடிக்க வில்லையே...... கதவு திறந்த சத்தமும் கேட்கவில்லையே......................" என்றார்.

"மணிகளும் கதவுகளும் தம்தம் வேலைகளைச் சத்தப்படாமல் செய்யவேண்டியன அல்லவா! அது எப்படியானாலும் நானிங்கு வந்துவிட்டேன்; அது தான் பெரிய காரியம்" என்றான் கேசரி.

"எனது மகள்! அம்பாலிகை! அவளெங்கே?" என்று வாசுதேவர் பதைபதைப்புடன் கேட்டார்.

"ஆ, ஆ, என்ன அவசரம்! புலவரே சற்று அமைதியோடிரும். உமது மகள் இன்னும் ஒரு நிமிஷத்தில் உம்மண்டை வந்துசேருவாள்" என்று கூறிவிட்டு, அரசகேசரி அவ்வறையில் உலவினான். மேஜைமீதிருந்த நோட்டுகள் அவன் கண்களைக் கவர்ந்தன; "அதுதான் சரி! ஒரு லக்ஷமும் சரியாயிருக்கிறதா......ஏன் வீண்காலம் போக்கவேண்டும்......தயவு செய்யலாமா?" என்றான்.

அருணாசலர் அவனுக்கும் மேஜைக்கும் இடையே வந்து நின்றுகொண்டு "வாஸ்தவந்தான், அம்பாலிகை இன்னும் வரவில்லையே" என்றார்.

"அதனால் ?"

"அதனால்தான் தவக்கம். அவள் இருக்க வேண்டியது அவசியமல்லவா?"

"அப்படியா, அப்படியா! அரசகேசரியிடத்தில் இவ்வளவு அவநம்பிக்கையா. அவன் அரை லக்ஷத்தையும் பையில் போட்டுக்கொண்டு அதற்கீடான பொருளை ஒப்புவியாமல் போய்விடுவானே. நண்பரே, இவ்வளவு பழகியும் எனது குணம் உமக்கு விளங்கவில்லையே யென்று வருந்துகிறேன். ஏதோ விதிவசத்தால் நான் செய்யும் செயல்கள் சில ......ஒரு வகையாயிருந்தால், அதற்காக எனது குணத்தைப்பற்றி சந்தேகிப்பதா! ஆயினும் குற்றமில்லை. நண்பரே, உமக்கு பயமாயிருந்தால் அந்த ஜன்னலைத் திறந்து கூப்பிடும். துப்பறியும் போலீஸ் புலிகள் என்மேல் பாய்வதற்குக் காத்துக் கொண்டிருக்கின்றன."

"அப்படியா என்னுகிறாய் ?"

அரசகேசரி ஜன்னலின் இலைகளைத் திறந்தான்.

"வாசுதேவர் கோபாலரை ஏமாற்றி வருவதற்கு அவ்வளவு சமர்த்தரா.....நான் சொன்னதற்கென்ன? அதோ இருக்கிறார் பாரும்!"

"இல்லை இல்லை! தெய்வமறியச் சொல்லுகிறேன் நான்..." என்று வாசுதேவர் கூறிவரும்போது, அரசகேசரி அவரை இடைமறித்து, "நீரென்னைக் காட்டிக் கொடுக்கவில்லை என்று தானே சொல்ல வருகிறீர்?...அதைப்பற்றி யெனக்குச் சிறிதும் சந்தேகமில்லை. ஆனால் அந்த ஆசாமிகள் மிகவும்கைதேர்ந்தவர்கள். அதோ பாரும் பங்காரு! ...கோபாலர்!...என் பிரிய நண்பர்கள் எல்லோரும் வந்திருக்கின்றனர்" என்றான்.

அருணாசலர் அவனை ஆச்சரியத்தோடு உற்று நோக்கினார். என்ன அமைதி! அவன் ஏதோ இரு குழந்தைகளின் விளையாட்டைக் கண்டு களிப்புறுபவன் போல் புன்னகை செய்துகொண்டு நின்றானே யன்றி, ஆபத்தி லகப்பட்டுக் கொண்டவனாகத் தோன்றவில்லை. போலீஸாரைக் கண்டவுடன் அரசகேசரியின் அமைதியால் அருணாசலர்க்கு மனத்திடமுண்டாயிற்று நோட்டுகளிருந்த மேஜையை விட்டு அகன்று சென்றார்.

அரசகேசரி நோட்டுகற்றைகள் இரண்டையுமெடுத்து, ஒவ்வொன்றிலுமிருந்து ஐந்து ஐந்து நோட்டுகளை எண்ணியுருவி, அந்தப்பத்து நோட்டுகளையும் அருணாசலரிடம் கொடுத்து" நண்பரே! எங்களுக்கு வக்கீலா யிருந்ததற்காக இதைப் 'பீசாக' வைத்துக்கொள்ளும். என்னுடைய பங்கு ஐயாயிரமும் வாசுதேவருடைய பங்கு ஐயாயிரமுமாகவிருக்கட்டும்" என்றான்.

"எனக்கொன்றும்வேண்டாம்" என்ருர் அருணுசலர்.

"என்ன! எங்களுக்காக தாங்கள் எடுத்துக்கொண்ட சிரமம் எவ்வளவு?

"அதனுலென்ன, சிநேகத்தைக் குறித்து எவ்வளவும் செய்யலா மன்ரூே?"

"அரசகேசரியிடமிருந்து எதையும் பெற்றுக்கொள்வது கேவலமாகுமென்று கருதியோ இவ்வாறு மறுக்கிறீர். எல்லாம் கௌரவத்தைப் பொறுத்ததாக வன்ரூே விருக்கிறது" என்று கூறி பெருமூச் செறிந்து, வாசுதேவர் புறம் திரும்பி, அருணுசலர் பெற மறுத்த பத்து நோட்டுகளையும் அவரிடம் நீட்டி, "வாசுதேவரே இந்தாரும்; இதை வைத்துக்கொள்ளும். அம்பாலிகையின் விவாகத்திற்கு இது எனது நன்கொடையாகவிருக்கட்டும்" என்ருன்.

வாசுதேவர் அந்த நோட்டுகளைப் பெற்றுக்கொண்டு "அம்பாலிகைக்கு இன்னும் விவாகமாகவில்லையே?" என்ருர்.

"அதற்கென்ன, காலமும் நேரமும் வந்தால் ஆய்விடுகிறது."

அச்சமயத்தில் தெருக்கதவின் மின்சார மணி மூன்று முறை விட்டுவிட்டு அடித்தது.

"அவள் இதோ வந்துவிட்டாள் என்ருர் அருணுசலரே, தயவுசெயது—" என்று அரசகேசரி எடுத்த வாக்கியத்தை முடிப்பதற்குள், அருணுசலர் கதவைத் திறக்க விரைந்து சென்ருர்.

இரண்டு மங்கையர் உள் நுழைந்தனர். அவர்களில் ஒருத்தி ஓடிச்சென்று வாசுதேவனைக் கட்டிக்கொண்டாள். மற்றவள் அரசகேசரியிடம் சென்ருள். இவள் அழகிய

நெட்டையான உருவமும், பூரணச் சந்திரன்போன்ற முகமும் உடையவளாய், உச்சிமுதல் உள்ளங்கால்வரை மறைத்திருந்த ஒரு கரும் பட்டாடையினை உடுத்திருந்தாள்.

ஆபரணங்களொன்றும் அவள் தேகத்திற் காணப்படவில்லையேனும், அவளது நடை நொடிகளும் முகவசீகரமும் அவள் தோற்றத்திற்குமிகுந்ததோர் அழகினைக்கொடுத்தன.

அரசகேசரி அவளோடு சில வார்த்தைகள்பேசிவிட்டு அம்பாலிகையைநோக்கி "அம்மா, இந்தத் தொந்திரவுகளுக்கெல்லாம் உன்னை ஆளாக்கினதற்காக என்னை மன்னிக்க வேண்டுகிறேன் யோசித்து பார்க்கும்பொழுது நீ அவ்வளவாகக் கஷ்டப்படவில்லையென்று தோன்றுகிறது——" என்றான்.

கஷ்டமா! "எனது தந்தையைக் குறித்துக் சிறிது வருந்தினேனேயன்றி, வேறு எவ்வகைவருத்தமும் எனக்கு நேரவில்லை."

"ஆனால், "எல்லாம் ஒரு நன்மைக்கே" யென்பது மெய்யே. எனது தந்தையைப்பற்றிய வருத்தம் இப்பொழுது ஒழிந்துவிட்டதல்லவோ?"

அம்பாலிகை மீண்டும் தந்தையைத் தழுவிக் கட்டிக்கொண்டாள். தந்தையும் மகளையணைத்து அன்பின்பெருக்கால் கண்ணீர் ததும்ப நின்றார்.

அரசகேசரி, தந்தையையடைந்த தனயையும், தனயையை யடைந்த தந்தையையும் பரிவுடன்பார்த்து தனக்குள் ஆ! "நன்மை செய்வதால் நாமடையும் நலங்கள் எவ்வளவு! என்ன இன்பம்! மனங்களித்ததந்தை! உள்ளம் உவந்த மகள்! இவைகள் யாவும், அரசகேசரி! உனது செயலென்று எண்ணும்போது எவ்வளவு இன்பமாயிருக்

கிறது! இவர்களிருவரும் பின்னால் உன்னை வாழ்த்துவார்கள்.......பெயர் அவர்கள் பிள்ளை பிள்ளை தலைமுறைக்கும் மிகவும் அன்பார்ந்த பெயராக விளங்கும்......ஆ, இல்வாழ்க்கை!......இல்வாழ்க்கை......இல்வாழ்க்கையினின்பம் எதற்கிணையாகும்!" என்று கூறிக்கொண்டு ஜன்னல் புறமாகத் திருப்பி, "எனது அருமை நண்பர் கோபாலர் இன்னம் அங்கிருக்கிறாரோ...காணோமே, அவரிங்கில்லையே...ஒருவருமில்லையே.... ......எல்லாரும் போய்விட்டார்கள்......காரியம் முற்றி வருகிறது! இந்நேரம் வாசலடிக்கு வந்திருப்பார்கள் ....மெத்தைப் படிக்கட்டை அடைந்திருந்தாலுமிருக்கலாம்!" என்று சொல்லிக்கொண்டு வாயிற்கதவைநோக்கி நடந்தான்.

வாசுதேவருக்குத் தமது மகள் தம்மிடம்வந்து சேர்ந்த பிறகு காரியங்களனைத்தும் தத்தம் இயல்பான நிறத்தோடு விளங்கின. அவர் அரசகேசரியை கைதிசெய்வதால் தமக்குக்கிடைக்கும் லாபம் அரைலெக்ஷமென்பதையுணர்ந்தார்; உடனே தம்மையுமறியாமல் வெளியில் செல்ல எத்தனித்தார்.

அரசகேசரி வாசுதேவரை சைகையால் தடுத்து சற்று கடுத்த குரலில், "அப்படித்தானே நில்லும். வாசுதேவரே! உமது மகளைப்பற்றியேனும் எந்தக் காரியத்தையும் யோசித்துச்செய்யும்" என்று சொல்லிவிட்டு, அருணாசலரை நோக்கி "நண்பர் அருணாசலரே! போய் வருகிறேன். என்னால் உமக்கு ஆகவேண்டியது ஏதாவதிருந்தால் அதை அவ்வப்போதே எனக்குத் தெரிவியும். அம்பாலிகா! போய் வருகிறேன். கூடிய விரைவில் நீ நல்ல மணவாளனைப்பெற்று சுகமாக வாழ்வாயாக" என்னு கூறிவிட்டுத் தன் சட்டைபையிலிருந்த ஒரு கடியாரத்தை யெடுத்துப்

பார்த்து பிறகு வாசுதேவரை நோக்கி "வாசுதேவரே, இப்பொழுது நாலடிக்கப் பதினெட்டு நிமிஷமிருக்கிறது. நீர் இவ்வறையைவிட்டு வெளியே போவதென்றால் நாலடிக்கப் பதினான்கு நிமிஷத்திற்குப் பிறகுதான் போகலாம். அதற்கொரு நிமிஷத்திற்கு முன்னும் இவ்விடத்தைவிட்டு அகலக்கூடாது. ஜாக்கிரதை! சொல்கிறது விளங்குகிறதா?" என்று சொல்லிவிட்டுக் கதவைத் திறந்து தன் அருகேநின்ற பூரணசந்திரமுகத்தாளை நோக்கி. "என் அன்பே. நாம் போகலாமா?" என்றான்.

அவள் தலையையசைத்தாள். அரசசேகரி விலகிநின்று அவள் முன் செல்வதற்கு வழிவிட்டுப் பின் தான் கதவைச் சார்த்திக்கொண்டு நின்றான்.

நாலடிக்கப் பதினைந்து நிமிஷமிருக்கிறது" என்றார் வாசுதேவர். மறுநிமிஷம் அவர் கதவைத்திறந்துகொண்டு தைரியமாய் வெளியே பார்த்தார்.

"அப்பா!....போகாதீர்கள்...கொஞ்சம் பொறுங்கள்" என்று கூவினாள் அம்பாலிகை. "பொறுப்பதா? உனக்குப் பைத்தியமா என்ன!...அந்தப் போக்கிரிப் பயல் விஷயத்தில் பொறுப்பதுகூடவா?...அந்த அரைலக்ஷம் எப்படிப் போகிறது..." என்று கூறிக்கொண்டு வெளியே செல்ல அடியெடுத்து வைத்தார்.

கோபாலர் உள்ளே ஓடிவந்தார்.

"அந்த ஸ்திரீ எங்கே?...கேசரி எங்கே?"

"அவன் கீழேயிருந்தானே...இப்பொழுது தானேயிருந்தான்."

கோபாலர் ஆநந்தத்தோடு "அகப்பட்டுக் கொண்டான்! வீட்டைச்சுற்றி காவலிருக்கிறது. தப்பிச் செல்வது முடியாத காரியம்" என்றார்.

அப்பால் கோபாலரும் அவரைச் சார்ந்தவர்களும்கூடி வீடுமுழுவதும் தேடிப்பார்த்தனர். அரசகேசரி அகப்பட வில்லை. அவனோடுவந்த மங்கையும் அகப்படவில்லை. கோபாலர் சற்றுத் திகைத்தார். ஆயினும் மனம்சோரவில்லை. அவன் "வீட்டைவிட்டுபோக வழியில்லை. வீட்டைச் சுற்றி லும் காவலிருக்க, ஒருவர் கண்ணிலுமகப்படாமல் மறைந்து போவதற்கு மார்க்கமேது? சித்தனா, மாந்த்ரீகனா? ஆகாய மார்க்கமாகவா பறந்துபோயிருப்பான்? வீட்டில்தான் எங் கேயோவொரு மூலையில் பதுங்கிக்கொண்டிருக்கிறான், எப் படியாவது அவனை இம்முறை கண்டுபிடிக்காமல் போவ தில்லை" என்றார். அன்றிரவுமுழுவதும் அங்கேயேயிருந்து தேடினார்; அதற்கு மறுநாளும் தேடினார்; இப்படி மூன்று பகல்களும் மூன்று இரவுகளும் அவனைத்தேடியும். அவன் அகப்படவில்லை; அவனோடு வந்த மாயமங்கையும் அகப்பட வில்லை. அவர்களிருவரும் எப்படிப்போயிருப்பார்களென்று கூட விளங்கவில்லை.

கோபாலருக்கு இது போதிசயத்தைக் கொடுத்தது. மாமிச பிண்டத்தால் அமைக்கப்பட்ட ஒருபுருஷனும் ஒரு ஸ்திரீயும் அந்தர தேவதைகளைப்போலக் கண்ணிற் படாது காந்தோடி மறைவதுண்டோ! தைரியத்தை விடாமல், நெஞ்சுறுதி நெகிழாமல் கோபாலர் அரசகேசரியை அவ் வீட்டிலேயே மீட்டும் மீட்டும் தேடினார்.

## மூன்றாம் அத்தியாயம்.

### கருணாகரர்.

வீராகவ முதலித் தெரு 34-வது இலக்கமுடைய சமது வீட்டு மாடியில், மார்ச்சுமாதம் 27உ மாலை சுமார்

ஐந்து மணிக்கு கருணாகரர் ஒரு சாய்வான நாற்காலியில் படுத்துக்கொண்டிருந்தார். அவருக்கருகே தரையில் அவரது மனைவிமங்கையர்க்கரசி உட்கார்ந்து கையில் இராமலிங்க சுவாமிகள் அருளிச்செய்த திருவருட்பா நூலை வைத்துப் பார்த்துக்கொண்டிருந்தாள்.

"ஏன் நிறுத்திவிட்டாய்?" என்றார் கருணாகரர்.

"பொழுது போய்விட்டது. செல்லம் இன்னும் வரவில்லை. நானாவது சமையல் செய்து வைத்துவிட்டு ஜல்தியாய்ப் போகலாமென்று பார்க்கிறேன்" என்றாள் மங்கையர்க்கரசி.

"எங்கே?"

"அம்மாளைப் பார்க்க. நான் மத்தியானம் சொன்னதை மறந்துவிட்டீர்களா என்ன?"

"ஓகோ, ஆனால்சரி. இப்பொழுது கடைசியாய்ப்பாடினாயே, அந்தப் பாட்டை இன்னொருமுறை பாடிவிட்டுப் போ. செல்லம் வந்தால் சமைக்கிறாள். இப்பொழுது என்ன முழுகிப் போயிற்று?"

"சரி, அப்படியே பாடுகிறேன்.

"சதிக்குவழி காட்டுகின்ற கண்ணேஎன் கண்ணிற்
கலந்தமணி யேமணியிற் கலந்தகதி ரொளியே
விதிக்குமுல குயிர்க்குயிராய் விளங்குகின்ற சிவமே
மெய்யுணர்ந்தோர் கையகத்தே விளங்கியதீங் கனியே
மதிக்குமதிக் கப்புறம்போய் வயங்குதனி நிலையே
மறைமுடியா கமமுடிமேல் வயங்குமின்ப நிறைவே
துதிக்குமன்பர் தொழப்பொதுவில் நடம்புரியு மரசே
சொன்மாலை சூட்டுகின்றேன் றோளிலணிந் தருளே"

இப்பாட்டைப் பாடி முடிக்கவும் சமயற்காரி செல்லமும் வந்தாள். அவளைக்காணவும் மங்கையர்க்கரசி "ஏன்டி

யம்மா, செல்லம்! இன்றைக்கித்தனை நாழி கழித்துவந்தாய்? என்றைக்கு நீ சீக்கிரம் வரவேண்டுமென்று நினைக்கிறேனே, அன்றைக்குத்தான் நீ பொழுதெல்லாம் போனபிறகு வருகிறாய். சரி, இருக்கட்டும் நீ சீக்கிரம் சமையலை முடி. நான் மேலத்தெருவுக்குப் போகவேண்டும்" என்றாள்.

"நல்லதம்மா. இதோ ஒரு நொடியில் சமைத்துவிட்டேன்" என்று சொல்லிக்கொண்டு செல்லம் நேரே அடுமனையை நாடிச்சென்றாள்.

மங்கையர்க்கரசி அருட்பாவினைத் தொடர்ந்து பாடிக்கொண்டிருந்தாள்.

இதற்கிடையில், இவ்வத்தியாயத்திற் புகுத்தப்பெற்ற ஸ்திரீ புருஷர்கள் வாசகர்களுக்குப் பழக்கமில்லாதவர்களாகையால், அவர்களைப்பற்றிச் சிறிது கூறிவிட்டு நாம்மேற்செல்வோம்.

கருணாகரர் சுமார் ஐம்பது வயதுள்ள ஒரு - தற்கால யௌவன வயோதிகப் பருவ வரையறைப்படிப் பார்க்கும்பொழுது – வயோதிகர். மிக்க செல்வமுள்ள குடும்பத்தில் வந்தவர். மிகவும் கௌரவமான ஒரு ராஜாங்க உத்தியோகத்தில் தமது நாற்பத்தெட்டாவது வயதுவரையில் அமர்ந்திருந்து, பின்னர் தமது முதுமைப் பருவத்தால் அதனின்றும் ஒழிவு பெறலாயினர். மங்கையர்க்கரசி அவரது மனைவியே என்பதை வாசகர்கள் அறிவார்கள். இவ்வம்மைக்குச் சுமார் முப்பத்தெட்டு வயதிருக்கலாம். ஆயினும் பார்வைக்கு இருபத்தைந்து அல்லது இருபத்தாறு வயதுடையவளாகவே காணப்படுவாள். இந்த இளந்தோற்றம், என்றும் இளமையாய்த் தோற்றவேண்டுமென்னும் தமது விருப்பத்திற்கு விரோதமாகத் தளர்ந்துகொண்டுவரும் சரீரத்தைப்பட்டா

லும் பணியாலும் வேறு பல்வகையாலும் அலங்கரித்து விகார இளமை பெற்றுலாவும் சில சிங்கார நங்கையர்கள் தோற்றம்போலச் செயற்கையாலுண்டானதல்ல; கற்பொழுக்கம் குன்றாக் குணத்தாலும், கருணை நிறைந்த மனத்தாலும், தெய்வ சிந்தனையாலும் இயற்கையாகவே அமைந்ததாகும், கருணாகரர் இரண்டொரு வருஷ காலமாக சித்த நிலை பிறழ்ந்து திடீரென்று சில சமயங்களில் பைத்தியங்கொண்டவர்போல் உளறுவதும் கைகால்களை உதைத்துக்கொள்வதும் உண்டு. அச்சமயங்களில் மங்கையர்க்கரசியைத் தவிர வேறெவராலும் அவரை அடக்க முடியாது. இது நிற்க: செல்லம் என்பவள் வீட்டு சமையற்காரி. இவள் புதிதாக கருணாகரர் வீட்டுக்குவந்தவள். இவளுக்குமுன் ஒரு சமையற்காரியிருந்தாள். அவள் ஏதோ காரணத்தால் திடீரென்று வேலையை விட்டுவிட்டுத் தனக்குப் பிரதியாக இந்தச் செல்லத்தை வைத்துப்போயினள். செல்லம் வேலையை ஒப்புக்கொண்டு இரண்டு வாரங்கள் கூட ஆகவில்லை. அதற்குள்ளாகவே அவளிடத்தில் மங்கையர்கரசிக்கு மிகுந்த பிரியமுண்டாய்விட்டது. அவளை மிகவும் அருமையாக நடத்தி வந்தாள்.

வீட்டுக்கு உடையவள் சுகசரீரியாய் இருக்கும்பொழுதும் சமையற்காரர் வைத்துக்கொள்வது எதனால் என்று சிலர் கேட்கலாம், நவீன நாகரிக முதிர்ச்சியால் சமையல் வேலையைக் கேவலமாக மதித்துச் செய்யாதொழிவர் சிலர்; சிறிது எழுத்து வாசனையறிந்த வேறு சிலர் 'அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பேன்' என்ற பழமொழியைப் பறக்கடித்துப் படித்துவிட்ட பெருமையால், 'படிப்பறிந்த பெண்கள் அடுப்பூதல் அடுக்குமோ' என்றெண்ணி சமைத்

தால் சாப்பிடுவதேயொழியச் சாப்பிடச் சமைப்பதில்லை யென்றிருப்பார்; மற்றும் சிலர் செல்வம் மிகுந்தால் சமைப்பதாகாதென்றிருப்பார்; இன்னும் பலர், வேறுபல காரணங்களால் சமையற்றொழிலை மேற்கொள்ளாதிருப்பார். நமது மங்கையர்க்காசியோ தனது கணவற்களிக்கும் உணவு தன் கையாற் சமைத்தாலொழியத் திருப்தியுறாள். உத்தம மங்கையர்களுக்கு அடுத்ததும் அதுவே. செல்வ மிக்க குடியிற் பிறந்த மங்கையர்கள் இயற்கையில் மாந்தளிரினும் மெல்லியராய் அனலை அணுகினும் அங்கம் வாடுவாராதலால் அன்னார் பிறரைக்கொண்டு உணவு சமைத்தல் ஒருவாறு நியாயமேயாயினும், அவர்களும் கற்பிற் சிறந்தாராயின், தம் கணவர்க்கு அளிக்கும் உணவைத் தாமே பக்குவப்படுத்துவார்களல்லது பிறரை ஏவிவிட்டுச் சிந்தையற்றிரார். ஆயின், மங்கையர்க்காசி பிறரைக்கொண்டு சமையல் நடத்தக் காரண மென்னை யெனில், அவளது கணவர்க்குற்ற நோயே.

கருணாகரர்க்கு சித்த சுவாதீன மற்றதுமுதல் அவள் அவரைவிட்டு அகலாது காத்துக்கொண்டிருந்தாள். இதே காரணத்தால், தான் இருக்கும்தெருவுக்கடுத்த மேலைத்தெருவில் வசித்துவரும் தனது தந்தைதாயர் வீட்டுக்கும் அவள் அடிக்கடி செல்வதில்லை. ஆனால் பின்கூறப்படும் சம்பவங்கள் நிகழ்ந்த அன்றைய தினம், அதாவது மார்ச்சுமாதம் 17உ. தன் தாயார் கடுஞ்சுரத்தால் வருந்துவதாக செய்தி வந்ததால், அவளைப் பார்க்கச்சென்று மறுநாள் காலை வாலாமென்று கருதியிருந்தாள். கருணாகரரும் போய் வரும்படி உத்தரவளித்தார்.

மணி எழடித்தது. சமையல்முடிந்துவிட்டதாகச் செல்லம் வந்து கூறினாள். உடனே மங்கையர்க்காசி தன் கண

வனை அழைத்துச்சென்று உணவுபரிமாறி அவர் உண்டான பிறகு, செல்லத்தை அழைத்து, "செல்லம்! நான் மேலத் தெருவுக்குப் போகிறேன். நாளைக் காலையில்தான் வரு வேன். நீ சாப்பிட்டுவிட்டு இன்றிரவு இங்குதானே படுத்துக் கொள். ஐயாவுக்கு உடம்பு ஒருவகையாயிருந்தால், வேலைக் காரன் நாகமுத்து கீழே படுத்திருப்பான். அவனை உடனே எழுப்பி என்னை அழைத்து வரும்படி அனுப்பு" என்றுகூறி விட்டுக் கருணாகரரிடம்சென்று, "நான் போய் வருகிறேன். உங்களுக்கு அந்தநோய் வரும்போல் தோற்றினால், உடனே நாகமுத்தை அனுப்பி என்னை அழைத்து வரச் சொல்லுங் கள். அஜாக்கிரதையாய் இருந்து விடவேண்டாம்" என்றான்.

"நல்லது நேரமாகிறது. நீ போ" என்றார் கருணாகரர்.

மங்கையர்க்கரசிபோய்விட்டாள். வேலைக்காரன் நாக முத்து மாடிக்கு வந்து, கருணாகருடைய படுக்கையைத் தட்டித் திருத்திச் சீராய் அமைத்துவிட்டு எஜமானன் உத் தாவை எதிர்பார்த்து நின்றான். சிறிதுநேரஞ் சென்றபிறகு கருணாகரர் அவனை நோக்கி, "அடே நாகமுத்து, ஜாக்கிர தையாய்ப்படுத்துக்கொள்; பிணம்போல் தூங்கிவிடாதே. உன் அறையில் வைத்திருக்கும் மின்சார மணி எப்பொழுது அடித்தாலும் உடனே எழுந்து மேல் ஓடி வந்து என்னைப் பார்" என்றார்.

"அப்படியே" என்று சொல்லிவிட்டு நாகமுத்து மாடி யைவிட்டுக் கீழிறங்கித் தன் அறைபிற் போய்ப் படுத்துக் கொண்டான்.

நகரவாசிக ளெல்லாத பலருக்கு மின்சாரமணி என்றால் என்னவென்று ஐயுறலாம். ஆதலால் அவர்கள் ஐயத்தை ஒருவாறு அகற்றி மேற்செல்வோம். (செத்தவர்களை எழுப்பு

வதொன்றைத் தவிர வேறு செய்யமுடியாத காரியமென்று ஒன்று அந்த வெள்ளைக்காரப் பயலுக்குண்டோ) என்பது ஒரு பழமொழியாய்விட்டது. அது ஒருவகையில் உண்மையே. உணவுக்கு உழைப்பதும், உழைத்துண்டு உறங்குவதுந்தவிர வேறு சிந்தனையெதுவுமின்றி நம்மவர்களிற் பெரும்பாலார் அரிதிற்பெற்ற தம் வாணாளை அவமேகழித்து வருங்காலத்தில், சில நூற்றாண்டுகளுக்கு முன்னே தோலுந்தழையும் உடுத்து, உண்ணும் உணவையும் பக்குவப்படுத்தியுண்ண அறியாது அநாகரிகத்தில் ஆழ்ந்திருந்த மேனாட்டு நன்மக்கள், தமது விடாமுயற்சியாலும் மதி நுட்பத்தாலும் நாகரிக முதிர்ச்சியுற்று இஞ்ஞான்று நாமெல்லோருங் கண்டதிசயிக்கத்தக்க நிலையை அடைந்துவிட்டனர். ஆயிரக் கணக்கான ஆண்டுகளுக்கு முன் தொடங்கி நாகரிகத்தில் முதிர்ந்து விளங்கிய மதிவல்ல மகா புருஷர்கள் மரபில் வந்த நாமோ சோம்பற்கொண்டு தேம்பித்திரிகிறோம். இது நிற்க

இருண்ட மேகங்கள் பல திரண்டு நின்று பெருமழை பெய்யுங்காலத்தே பளிச்சென்று தோன்றி ஒளிர்ந்து ஒளிக்கும் மின்னலை அறியாதார் ஒருவருமிலர். அந்த மின்னல் நம்மவர்களுக்கு ஓர் இன்னலாகத்தோற்ற, மேனாட்டு மேதாவியர்க்கோ எனில், அதனால் விளையும் நலங்கள் கணக்கில. அவர்கள் அதைக்கொண்டு அறிதற்கரிய பல விஷயங்களை அறிந்தும் செய்தற்கரிய பல விஷயங்களைச் செய்தும் வருகிறார்கள். அவர்களால் பலவகையிற் பயன் படுத்தப் பெறுவது மின்னலுக்கு மூலகாரணமான சக்தி எதுவோ அதுவே. அதையே 'மின்சாரம்' (Electricity) என்று நாம் பெயர் கொடுத்து வழங்குகிறோம்.

பழைய காலத்துக் கதைகளில் ஸ்திரீகள் கலக்காத கதையொன்று இருப்பரிது என்று சொல்வதுண்டு. தற்

காலத்தில் மிகப் பல்கிவரும் நாவல்களில் 'துப்பறியும் நாவல்' என்று சொல்லப்படும் அவ்வகைக்கதைகளில், மின்சாரம் கலவாத கதை கிடைப்பதரிதென்று கூறத் தக்ககாலமும் ஒன்று கிட்டுமென்பதில் ஐயமில்லை. இந்த மின்சாரத்தின் இயல்பைப்பற்றி விரித்துக் கூறப்புகின், கதைமேற் கருத்தாய்ச் செல்லும் வாசகர்கள் சிலர்க்கு அருவருப்பைத் தாக்கூடுமென்று அஞ்சி அங்ஙனம் கூறாது விடுத்து, இந்த மின்சாரத்தால் செய்யக்கூடிய அற்புதச் செய்கைகளிற் சிலவற்றைமட்டும் கூறிக் கதையைத்தொடர்ந்து செல்வாம்.

மின்சாரம் என்ற ஒரு சக்தியின் சகாயத்தால், வெகு தொலையில் அமைக்கப்பட்டுள்ள ஒரு மணியை இருக்கும் இடத்தில் அமைக்கப்பட்ட ஒரு சிறு முளையை அழுத்துவதால் அடிக்கலாம்; பல மைல் தூரத்திலுள்ள ஒருவரோடு சம்பாஷிக்கலாம்; எண்ணெயும் திரியும் இன்றி விளக்கெரிக்கலாம்; இன்னும் பல அற்புதச் செய்கைகள் செய்யலாம். இது கிடக்க.

இரவு மணி பத்தாயிற்று. நாகமுத்து சற்றேகண்ணயர்ந்தான். கூப்பாட்டு மணி அடிக்கும் சப்தம் கேட்டது. கண்ணைக் கசக்கிக்கொண்டு விழித்து கவனித்தான். ஆம், அது அவனைக் கூப்பிடும் மணியின் சப்தமே. பின்னும் உற்றுக்கேட்டான். மணியொலி சுமார் இரண்டு நிமிஷநேரம் ஓயாது கேட்டது. நாகமுத்து திடீரென்று படுக்கையை விட்டு எழுந்து மாடிக்கு ஓடினான். மாடியில் விளக்கு வெளிச்சம் சிறிதும் இல்லை. கருணாகரர் படுக்கையறைக் கதவைத் தட்டினான். கதவு திறந்துகொண்டது. ஆனால் அங்கும் வெளிச்சம் இல்லை. நாகமுத்து மனங் கலங்கினான். "என்ன இது? எல்லா விளக்குகளையும் அணைத்து விட்டார்களே, ஏன்? சமையற்காரி செல்லம்

கூடத்திலேதானே படுத்திருப்பாள். அவளைக் கூப்பிட்டுப் பார்ப்போம்" என்று தனக்குள்ளாகவே சொல்லிக் கொண்டு, சற்று உரத்த குரலில் "செல்லம், செல்லம்? உன்னைத்தான், செல்லம்! எங்கே படுத்திருக்கிறாய்? ஏன் எல்லா விளக்குகளையும் அணைத்துவிட்டாய்?" என்றான்.

ஒன்றும் பதிலில்லை. பாந்த இருளில் நிறைந்த அமைதி ஒன்றே சிறந்து விளங்கி அவன் மனத்தை அச்சுறுத்தியது. இன்னது செய்வதென்று தோற்றாது நாகமுத்து அறைக்குள் இரண்டடி எடுத்து வைத்தான். ஒரு நாற்காலியில் அவன் கால் இடறியது. அதைக்கையால் தொட்டுப்பார்த்தான். அது தலைகீழாய்விழுந்து கிடப்பதையுணர்ந்தான். அச்சம் மிகுந்தான். மின்சார விளக்கைப் பொருத்தும் ஆணியைத்தேடிச் சுவரைத் தடவிப் பார்த்தான். ஆணி கையிற்றட்டியது. உடனே அவன் அதை அழித்தினான். அறையில் அமைக்கப்பட்டிருந்த மின்சாரவிளக்கு பளிச்செனப்பிரகாசித்து அறை முழுவதையும் விளக்கியது.

அறையின் நடுவே விழுந்து கிடந்த ஒரு மேஜையின் கீழ் கருணாகரர்கிடப்பதை நாகமுத்து கண்டான்! "ஐயோ, இதுவென்ன!" என்று உளறினான்.

அவனுக்கு ஒன்றும்விளங்கவில்லை. அறைமுற்றும் அலங்கோல முற்றிருந்தது. அவன் நின்றவிடத்தை விட்டு நகராது அறை முழுவதையும் நோக்கினான்; நாற்காலிகள்கவிழ்ந்துகிடந்தன; மேஜைஉருண்டுகிடந்தது; மேஜைமீது வைக்கப்பட்டிருந்த மெழுகுவர்த்திவிளக்கு கீழேவிழுந்து சுக்கல் சுக்கலாய்ப் போய்க்கிடந்தது. கருணாகரர் படுத்திருந்த கட்டிலின்பஞ்சணையும் அலங்கோலமா யிருந்தது. மேஜையின் கீழ் அகப்பட்டிருந்த கருணாகரர்க்கருகே ஒருசிறுகத்தி பள

பளவென்று பிரகாசித்துக் கொண்டிருந்தது. அந்தக் கத்தி ரத்தமயமாயிருந்தது. ரத்தக்கறையுற்ற கைத்துவாலை ஒன்று கீழே கிடந்தது.

இந்தக் கொடியகாட்சியைக் காணவும் நாகமுத்து மனங் கலங்கிமயங்கினான். திடீரென்று கருணாகரர் உடலும் விறைத்து மீட்டும் ஒடுங்கியது..........மீட்டும் இரண்டு மூன்று முறை அங்ஙனமே விறைத்துவிறைத்து ஒடுங்கியது; அவ்வளவு தான்.

நாகமுத்து குனிந்து நோக்கினான். கருணாகரர் கழுத்திலிருந்த ஒரு சிறுகாயத்தினின்றும் ரத்தம்ஒழிகிக் கீழேவிரிக்கப்பட்டிருந்த ரத்தினக் கம்பளத்தைக் கறைபடுத்திக் கொண்டிருந்தது. அவர் முகம் பயத்தால் விகாரப்பட்டவண்ணமேயிருந்தது. எவரோ தன் எஜமானனைக்கொன்று விட்டார்களென்றஎண்ணம் நாகமுத்தின் மனத்தில் தோற்றியது. அவன் உடல் நடுங்கினான். மற்றோர் எண்ணமும் அவன் உள்ளத்தில் உதித்தது. "சமைபற்காரி கூடத்தில் தானே படுத்திருந்தாள்? கருணாகரரைக் கொன்ற கொலை பாதகன் அவளையும் கொன்றிருப்பானோ? ஆ, கொடுமை கொடுமை! நினைத்தாலும் நெஞ்சம் பிளக்கிறது!"

சமையற்காரியும் கொலையுண்டிருப்பாள் என்ற எண்ணம் தோற்றியவுடன், நாகமுத்து அறையைவிட்டு வெளிச் சென்று கூடத்தைப் பார்த்தான். அங்கே சமையற்காரி இல்லை! நாகமுத்து மாடி முற்றும் சென்று பார்த்தான். அவள் இல்லை! உடனே அவன், "கருணாகரரைக் கொன்ற கொலைஞன் அவளைத் தூக்கிக்கொண்டு போயிருக்க வேண்டும். அல்லது கொலைஞனைக் கண்டதும் அவள் அஞ்சி

வீட்டை விட்டு ஓடிபோயிருக்க வேண்டும்" என்ற முடிவுக்கு வந்தான்.

பிறகு அவன் மீட்டும் தன் எஜமானன் கொலையுண்டு கிடக்கும் அறைக்கு வந்தான். கருணாகரர் படுக்கையின் தலைமாட்டில் சுவரையொட்டியிருந்த ஒரு சிறு மேஜைமட்டும், அறையிலிருந்த மற்றப் பொருள்களைப்போலக் கீழே தள்ளப்படாது, என்றும் இருக்கும் இடத்திலேயே இருப்பதைக் கவனித்து அதனருகே சென்றான். என்ன அதிசயம்! கருணாகாருடைய திருநீற்றுப்பையும் சாவிக்கொத்தும் அதன் மீதிருந்தன. கருணாகரர் அவைகளை எக்காலத்தும் தம்மடியில் வைத்திருப்பதும் படுக்கைக்குச் செல்லும் பொழுதுமட்டும் அவைகளை எடுத்து அம்மேஜைமீது வைத்துவிட்டுப் படுத்துக்கொள்வதும் வழக்கம். அந்தப்படியே அன்றிரவும் வைத்துவிட்டுப் படுத்துறங்கி யிருக்கிறார். பாவம்! நாகமுத்து திருநீற்றுப் பையைக் கையிலெடுத்தான். அது சிறிது கனமாயிருந்தது 'திருநீற்றுப்பை கனக்கவேண்டிய காரண மென்ன? என்று ஐயுற்று, அவன் அதைத்திறந்து கையைவிட்டுப் பார்த்தான். கையில் பணம் தட்டுப்பட்டதால், விரலால் துழாவி அதிலிருந்த பணத்தையெல்லாம் எடுத்தான். ஏதோ கடிதமும் தட்டுப்பட்டதால் அதையும் வெளியில் எடுத்தான். பணத்தை எண்ணிப் பார்த்தபொழுது, ஐந்தரை ரூபா யிருந்தது. கடிதம் என்னவென்று பார்க்கப் பிரித்தலும் அது சாதாரண கடிதமல்ல நோட்டென்பது தெரிந்தது. நோட்டும் ஒன்றல்ல. பல நோட்டுகளிருந்தன.

நாகமுத்து அந்த நோட்களையும் எண்ணிப் பார்த்தான். பத்துரூபாய் நோட்டுகளாக பதின்மூன்று நோட்

டுகளிருக்கக் கண்டான். ஆகக்கூடி திருநீற்றுப் பையிலிருந் தெடுத்தபொருள் நூற்று முப்பத்தைந்தரை ரூபாயாக விருந்தது

நூற்று முப்பத்தைந்தரை ரூபாய்! நாகமுத்தின் மனம் அவனையும் அறியாமல் அந்தப் பணத்தில் இச்சை கொண்டது. அவன் தன் உணர்வு சிறிதுமின்றி தன் எண்ணமெல்லாம் வேறெங்கோ சென்றிருக்க, தன் கைசெய்வது இன்னதென்று அறியாமல் அந்தப்பணத்தையெல்லாம் எடுத்துத் தன் மடியில் வைத்து பத்திரப்படுத்திக்கொண்டு, அறையைவிட்டு வெளிச்சென்றான்; மாடியைவிட்டு விரைந்துகீழிறங்கினான்; ஓடிவந்து தெருக்கதவைத் திறந்தான்; வெளியே வந்து மீட்டும் தெருக் கதவைச் சார்த்தி வெளியிருந்தபடியே உட்புறத்தைத் தாளிட்டான்; தோட்டத்திற் புகுந்து ஓடினான்.

நாகமுத்து உள்ளபடி யோக்கியன். தெருக்கதவைத் தாளிட்டுவிட்டுத் தோட்டத்திற் புகுந்தோடியபோது, குளிர்ந்து வீசியகாற்றின் ஸ்பரிசத்தால் சிறிது மனந்தெளியவும் மேற்செல்ல மனமின்றி நின்றான். தான் செய்த திருட்டு வேலையின் உண்மைத் தன்மை அவனுக்குத் தெற்றென விளங்கவும், பெரிதும் மனங் கலங்கினான்.

தெருவழியே ஜட்காவண்டி ஒன்று சென்றது. நாகமுத்து அவ்வண்டிக்காரனைக் கூவியழைத்தான். "ஏய், ஏய், ஜட்கா! வழியில் யாராவது போலீஸ் உத்தியோகஸ்தரைக் கண்டால், உடனே கருணாகரர் வீட்டுக்கு வரச்சொல். இங்கே ஒரு கொலை நடந்திருக்கிறது" என்றான்.

ஜட்காவண்டிக்காரன் "நல்லது, சாமி என்று சொல்லிப் போய்விட்டான். நாகமுத்து திரும்பவும் வீட்டுக்குள்

செல்ல முயன்றான். ஆனால் முடியவில்லை. தெருக்கதவை உட்புறம்தாளிட்டது அவனேயன்றோ? அக்கதவை வெளிப் புறத்திலிருந்தபடி உட்புறந் தாளிடமுடியுமேயன்றி, தாளி ட்டபிறகு அதைத் திறக்க முடியாது. வெளியிலிருந்தபடி உள்ளேயிருக்கும் கூப்பாட்டு மணியை அடிப்பதற்கு மின் சார சம்பந்தமுள்ள மூளைவாயிற்கதவின் நிலையருகே அமை க்கப்பட்டிருந்தது. அதை அழுத்தினால் உள்ளேமணியடி க்கும். ஆனால், அழுத்தி என்ன பயன்? உள்ளே மணியடி த்து என்ன பயன்? எவரேனும் உள்ளிருந்தா லன்றோ மணிச்சத்தம் கேட்டு வந்து கதவைத் திறப்பார்கள்?

ஆதலால், நாகமுத்து போலீஸார்வரும்வரையில் வீட் டைக் காத்துக்கொண்டிருப்பதைத் தவிற வேறெதுவும் செய்ய இயலாதவனானான். என்செய்வான் பாவம்! தோட் டத்தின் முகப்பிலேயே உலாவிக்கொண்டிருந்தான். ஒரு மணி நேரம் நடந்தது. அதற்குமேல் போலீஸார் வந்தனர். நாகமுத்து அவர்களிடம் நடந்த சங்கதிகளை யெல்லாம் கூறி தான் வைத்திருந்த நூற்றுமுப்பத்தைந்தரை ரூபாயையும் அவர்களிடமே ஒப்புவித்தான்.

இதற்கிடையில் போலீஸார் தச்சன் ஒருவனை அழைத் துவர ஆளனுப்பியிருந்தார்கள். தச்சன் வரவும் அவனைக் கொண்டு கதவைத்திறந்து அவர்கள் உள் நுழைந்தனர். போலீஸ்தலைவர் நாகமுத்தை உடனே அழைத்துக்கொண்டு நேரே மாடிக்குச் சென்றார். கருணாகரர் பிரேதங்கிடக்கும் அறைக்குள் அடியெடுத்துவைக்கவும், அவர் நாகமுத்தை நோக்கிக் கூறியதாவது: "அறை அலங்கோலமாகக் கிடப்ப தாகக் கூறினாயே!'' என்பதே.

நாகமுத்து அறையை நோக்கினான்; நின்ற விடத்தில் மயங்கி அசைவற்று நின்றான். அறையில் அலங்கோலமாய்க் கிடந்த பொருள்களெல்லாம் ஒருங்குற்று தத்தமக்குரிய இடங்களில் இருந்தன. மேஜை நிமிர்ந்து நிறக்கவேண்டிய இடத்தில் நின்றது. நாற்காலிகள்கால்கள் நிலத்திலூன்றி

தத்தம் இடத்தில்சென்று நின்றன: சுக்கல் சுக்கலாய்க் கிடந்த மெழுகுவர்த்தி விளக்கு கண்ணிற்படாது மறைந்து விட்டது.

நாகமுத்து திக்பிரமை கொண்டு, நாக்குழற, உடல் நடுங்க அவர்...எஜமானர்....சரீரம்...." என்றார்.

"ஆம், கொலையுண்டவர் எங்கே;" என்றார் போலீஸ் தலைவர்.

நாகமுத்து மௌனமுற்றிருந்தான்.

போலீஸ் தலைவர் கட்டிலை நாடிச்சென்று, பஞ்சணையிலிருந்த போர்வையை நீக்கினார். போர்வைக்குக் கீழே தமது உத்தியோக உடையுடன் படுக்கையிற் கிடந்தார். அவர முகம் அமைதியுற்றிருந்தது; கண்கள் மூடப்பெற்றிருந்தன.

நாகமுத்து "யாரோ இங்கு வந்துவிட்டுப்போயிருக்கிறார்கள்" என்றான்.

"எந்த வழியால்?"

"எனக்குத் தெரியவில்லை! ஆனால் நான் வெளியிலிருந்தசமயத்தில் யாரோ இங்குவந்திருக்கிறார்கள் என்பது மட்டும் நிச்சயம்....அதோபாருங்கள் அங்கேதரையில் ஒரு சிறு கத்தி கிடந்தது....அங்கே ரத்தக் கறையுற்ற கைத்துவாலையொன்று கிடந்தது...அவைகளெல்லாம் போய்விட்டன... அவர்கள் எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள்.......அலங்கோலமாய்க் கிடந்தவற்றை யெல்லாம் சீர்ப்படுத்தி வைத்துவிட்டுப் போய்விட்டார்கள்......"

"அவர்கள் யார், அல்லது அவன் யார்?"

"கொலை செய்தவன்"

எல்லாக் கதவுகளும் நாங்கள் வரும்போது சாத்தப்பட்டிருந்தனவே?"

"அவன் வீட்டுக்குள்ளேயே ஒளிந்திருக்கவேண்டும்."

"ஆனால், அவன் இப்பொழுதும் வீட்டுக்குள்ளேயே தான் இருக்கவேண்டும்."

காகமுதது சிறிது சிந்தித்துத் தயங்கித் தயங்கிக் கூற லாயினன்.

"ஆம் அப்படித்தான் இருக்கவேண்டும்.........அப் படித்தான் இருக்கவேண்டும்....நான் தோட்டத்திலேயே தானே இருந்தேன்....இருந்தாலும்..."

"நல்லது, இருக்கட்டும், நீ கடைசி முறையாகக் கரு ணாகாரைப் பார்த்தபோது அவரோடு இருந்தவர் யார்?"

"சமையற்காரிதான் இருந்தாள்."

"அவள் எங்கே?"

"நான் படுக்கப்போகும் வரையில் வீட்டிலேயேதான் இருந்தாள்."

"அப்படியானல் இப்பொழுதெங்கே?"

"நான் படுக்கைக்குப்போன பிறகு வெளியே போயி ருப்பாளென்றெண்ணுகிறேன்."

"நீதான் கதவைத் தாளிட்டுவிட்டாயே"

"அதற்கு முன்னமேயே போயிருக்கவேண்டும்."

"ஆனல், அவள் வெளியே போனபிறகே கொலைநடந் திருக்கவேண்டுமென்மென்று கருதுகிருயோ?"

"அப்படித்தானிருக்கவேண்டும்."

போலீசார் வீடு முழுவதையும் துருவித் துருவித்தே டிப்பார்த்தனர். கொலைகாரன் அகப்படவில்லை; எங்கோ ஓடிப்போய்விட்டான் எப்படி? எப்பொழுது? அவனைக் காட்டிக் கொடுத்துவிடக் கூடிய அடையாளங்கள் ஒன்று மில்லாதபடி, பிறகு வந்து ஏற்பாடுகள் செய்துவிட்டுப் போனவன் அவனேயா? அல்லது அவனுக்குத் துணையா யிருந்து வேலைசெய்யும் எவரேனுமா? இந்தக்கேள்விகளே போலீஸார் மனத்தி லுதித்தன.

மறுநாள் காலை எழுமணிக்குக் கருணாகார்கொலையுண் டஇடத்துக்கு ராஜாங்க ரணவைத்தியர் வந்தார். எட்டுமணி க்கு சென்னை அந்தரங்கப்போலீஸ் தலைவர் வந்தார். அதன் பின் ராஜாங்க உத்தியோகஸ்தர்கள்பலர் ஒருவர்பின் ஒருவ

ராய் வந்தனர். பத்திரிகைகளுக்குச் சமாச்சாரம் சேகரிப்போர் பலர்வந்து கூடினர். புண்ணில் ஈ மொய்ப்பதுபோலப் போலீஸ் சேவகர்கள் கூட்டமும் சேர்ந்தது. போதாக்குறைக்கு கருணாகாருக்குப் பின் வார்சு பாத்தியதையுள்ளவர்கள் தாமேயெனச் சொல்லிக்கொண்டு கருணாகாரது நெருங்கிய சுற்றத்தாரும் எட்டிய சுற்றத்தாருமாய்ப் பலர் ஒருங்குவந்து பிரேதத்தை நெருங்கிச் சுற்றி நின்று சுற்றம் பாராட்டினர்.

கருணாகாரின் காதல் மனைவி மங்கையர்க்கரசி, கணவன் கொலையுண்ட செய்திகேட்டதும் ஓடோடியும் வந்து, சுடரவிந்த தீபம்போல உயிரிழந்த தன் கணவரின் அருமைத் திருமுகம் வெறு முகமா யிருக்கக்கண்டு. கனலிற்பட்ட புழுப்போல் உள்ளந்துடித்து ஓவென்றலறி உணர்வு தடுமாறி வேரற்ற மரம்போல் விழ்ந்து மீட்டும் எழுந்து,

"காதற் கணவா! கருணா கரா ! நீ
சாதற் கமைந்த சதிதான் விதியோ !
என்னுருயிரே ! அருளா ரிறையே !
மன்னு ! நீதான் மறலிக் கிரையோ !
ஆண்டா யென்னை ; வேண்டாய் வாழ்க்கை;
மாண்டாய், பழிநீ பூண்டாய்; என்னே !
வழுவாய் ஒழுக்கம் ; ஒழியாய் கருணை ;
தொழுவாய் தெய்வம் ; விழியாய் நயனம்?
ஒழுகுறு தேனின் உரைனல முடையாய் !
அழுதயர் வேற்கொரு மொழியுரை யாயோ !"

என்று பலவாறு புலம்பி மீட்டும் விழுந்து மூர்ச்சையானாள்.

அவள் மூர்ச்சைதெளிந்தெழுந்ததும் போலீஸார் அவளுடைய 'வாக்குமூலத்தைக்' கேட்டனர். அவள் தான்செல்லத்தை வீட்டில் வைத்துவிட்டுத் தன் அன்னையைக்காணச் சென்றதைக் கூறி, "செல்லம் காணாமற் போனது எனக்கு ஆச்சரியமாயிருக்கிறது. அவள் மிகவும் நல்லவள். வீட்டிலிருப்பதாகக் கூறிவிட்டுப் பிறகு நான் இல்லாத சமயத்தில் தன் இஷ்டம்போல் வெளியே போகக் கூடியவளல்ல" என்றாள்.

இதைக்கேட்ட ஒரு போலீஸ் உத்தியோகஸ்தர், "ஆனால் அவள் எப்படித்தான் போனாள்?" என்றார்.

அருகே நின்ற நாகமுத்து "எனக்குத் தோற்றுவது, எஜமானரைக் கொன்றவனே அவளைத் தூக்கிக்கொண்டு போயிருக்கவேண்டும் என்பதே" என்றான்.

"தூக்கிக்கொண்டா? அப்படித்தான் இருக்க வேண்டும்" என்றார் போலீஸ் உத்தியோகஸ்தர்.

"அப்படியிருக்க முடியாது" என்று யாரோ ஒருவர் மிகவும் அழுத்தமானகுரலில் கூறுவதைக்கேட்டு 'அப்படித் தான் இருக்க வேண்டு'மென்றவர் திரும்பிப் பார்த்தார்; கோபாலனைக்கண்டார்; ஓகோ நீங்களா! நான் இதுவரை யிற் பார்க்கவேயில்லையே" என்றார்.

"நான் இரண்டு மணி நேரமாய் இங்குதான் இருக்கி றேன்."

"அப்படியா! அதிர்ஷ்ட சீட்டு அரசகேசரி, அவ னோடு வந்த பூரணச் சந்திரனைப்போன்ற முகத்தையுடைய மங்கை—"

"என்ன ஐயா, ஒரு முழம் நீட்டுகிறீர்? அந்த மாய மங்கைக்கு நான் ஒரு சுருக்கப்பெயர் வைத்திருக்கிறேனே, தெரியாதா?"

"அவளைக் கண்டு பிடிக்க முடியாவிட்டாலும் அவள் பெயரை யாவது கண்டு பிடிப்பதைவிட்டு, நீரே ஒருபெயர் வைத்துவிட்டீரோ? பேஷ்! அந்தப்பெயரைத்தான் சொல் லும் பார்ப்போம்."

"நான் ஒன்றும் புதிதாகவைத்துவிடவில்லை. எல்லோ ரும் அவள் 'சந்திரனைப்போன்ற முகமுடையவள்' என்றே சொல்கிறார்கள், ஆகலால் நான் அதையே குறுக்கி மதிமுகி என்று சொல்லுகிறேன்."

"சபாஷ்! நல்ல பெயர்கொடுத்தீர். சரி, இப்பொழுது அந்த அதிர்ஷ்டி சீட்டு விஷயத்தை மறந்துவிட்டீர் போலி ருக்கிறது?"

"மறந்து விடுவதா ? நன்ருய்ச் சொன்னீர். அது ஒரு புறத்திலிருக்கிறது. இருக்கட்டும். இப்பொழுது நாம்வந்த காரியத்தைப் பார்ப்போம், இதில் அரசகேசரி கலக்க வில்லையென்று நினைக்கிறீர் ? சற்றுப்பொறும். விசாரித்துப் பார்த்தால் விஷயம் விளங்குகிறது" என்று கூறி கோபாலர் நாகமுத்தை அழைத்து விசாரிக்கலாயினர்.

"நாகமுத்து, நான் கேட்கும் கேள்விகளுக்கு ஒழுங் காய் பதில் சொல்லிவா. நீ முதன்முதல் அறைக்குள் சென்ற போது அங்கிருந்தசாமான்களெல்லாம் அலங்கோலமாய்க் கிடந்தனவென்று கூறினை யல்லவா ?"

"ஆம்." "ஆம்".

"மறுமுறை எங்களோடு வந்தபொழுது, யாவும்ஒழுங் காய் வைக்கப்பட்டிருந்தன வல்லவா ?"

"நல்லது இப்படி ஒழுங்குபடுத்தப் பெற்றதில், எங் கெந்த சாமான் எங்கெந்தஇடத்தில் எப்பொழுதும் வழக்க மாய் இருக்குமோ அந்தந்த இடத்திலேயே வைத்திருக்கி றதா அல்லது இடம் மாறி வைக்கப்பட்டிருக்கிறதா ?"

"இல்லை, வழக்கமாய் வைக்கப்பட்டிருக்கும் முறைப் படியே வைக்கப்பட்டிருக்கிறது."

"அப்படியாளுல், அறையை ஒழுங்கு படுத்தியவர் யாராயிருந்தாலும், அவர் அதற்கு முன் அந்த சாமான்கள் இருக்கும் முறையை நன்ருய் அறிந்திருப்பவராக வேண் டும்."

கோபாலர் கூறுவது நியாயமேயென எல்லோர்க்கும் புலப்பட்டது. "இதற்கு முன் இந்த யோசனை நம் ஒருவர்க் கும் எட்டவில்லையே' என்று யாவரும் அதிசயமுற்றனர்.

கோபாலர் விசாரணையைத் தொடர்ந்து, "இருக்கட் டும், நாகமுத்து !....நீ மணிசத்தம் கேட்டல்லவா எழுந் தாய் ?" என்று கேட்டார்.

"ஆம்" என்ருன் நாகமுத்து.

"அப்படி மணியடித்து உன்னைக் கூப்பிட்டது யாரா யிருக்குமென்று நினைக்கிருய் ?

"என் எஜமானராய்த் தானிருக்கவேண்டும்."

"நல்லது, அவர் எப்பொழுது மணி அடித்திருக்கக் கூடும்?"

"கத்தியாற் குத்தப்பட்டபொழுது."

"அப்படியிருக்க முடியாது. ஏனென்றால், அவர் எந்த இடத்தில் குத்தப்பட்டுக்கிடந்ததை நீ முதன்முதல் கண்டாயோ, அந்தஇடத்திற்கும் மணியடிப்பதற்கு அழுத்தவேண்டிய மூளையிருக்கு மிடத்திற்கும் நாலு கஜ தூர மிருக்கும். அவ்வளவு தொலையிலிருந்து அவர் எவ்வாறு மின்சார மூளையை அழுத்தக் கூடும்?"

"ஆனால், தம்மைக் கொல்ல வந்தவனைக் கண்டதும் அடித்திருக்க வேண்டுமென்று நினைக்கிறேன்."

"அப்படியும் இருக்க முடியாது. ஏனென்றால், மணி இரண்டொருநிமிஷம் ஓயாது அடித்ததாக நீ முன்னம்கூறினாய். அவர் அவ்வளவுநேரம் மூளையை அழுத்தி யிருக்கும்படி வந்தவன் விடுவானோ?"

"அப்படியானால், யாரோ அறையை நாடிவரும் அரவத்தைக் கேட்டவுடனேயே எஜமானர் மணியடித்திருக்க வேண்டும்."

"அப்படியும் இருக்கமுடியாது ஏனென்றால், மணியடித்து ஒய்ந்ததற்கும் நீஇங்குவந்ததற்கும்இடையே மூன்று நிமிஷநேரத்திற் கதிகம் சென்றிராதென்று நீமுன்னம்சொல்லியிருக்கிறாய். யாரோ வரும் காலடிசத்தத்தைக் கேட்டவுடனே கருணாகரர், மணி யடித்திருக்கிறாரென்று கொண்டால், அடுத்த மூன்று நிமிஷத்திற்குள், வந்தவன் உள் நுழைந்து அவரைக் குத்த முயல, அவர் அவன்கையினின்றும் தப்ப இங்குமங்கும் ஓட, பிறகு முடியாது அவனாற் குத்துண்டுவிழ, அவர் வீழ்ந்தபிறகு கொலைஞன் விளக்குகளையெல்லாம் அவித்துவிட்டு ஓடித் தப்பி யிருக்க வேண்டும். இவ்வளவு சம்பவங்கள் மூன்றுநிமிஷத்திற்குள் நிகழ்ந்திருக்க முடியுமா? ஒருகாலும் முடியாது."

அருகே யிருந்த மற்றொரு போலீஸ் உத்தியோகஸ்தர் கோபாலரை நோக்கி, "நல்லது, மணியடித்தது கருணாகர ரல்லாவிட்டால் வேறு யார்?" என்று கேட்டார்.

"கொலை செய்தது யாரோ, அவரே!" என்றார் கோபாலர்.

"என்ன கருத்தைக் கொண்டு?"

"என்ன கருத்தைக் கொண்டோ? என்றால் சொல்ல முடியாது. வீட்டில் இருந்தவர்களுள் ஒருவரே கொலைசெய்திருக்க வேண்டுமென்பது மட்டும் நிச்சயம்."

"நீர் சொல்வதைப் பார்த்தால்...சமையற்காரி செல்லத்தின்மேல் உமக்குச் சந்தேகம் இருப்பதுபோலல்லவோ தோன்றுகிறது?"

"சந்தேகமல்ல, மணி யடித்தது அவளே."

"ஆனால், கொலைசெய்தவனுக்கு அவள் உதவியாயிருந்தாளென்கிறீரோ?"

"இல்லை' கருணாகரரைக் கொன்றவள் அவளே!"

"ஆ, ஆ! என்ன இப்படிச் சொல்கிறீர்? உத்தேசமேயொழிய அத்தாட்சி ஒன்றுமில்லையே?"

"அத்தாட்சி இதோ இருக்கிறது. இந்த மெல்லிய கருமயிர், கருணாகரர் கைக்குள் அவர் நகத்தாலேயே அழுத்தப்பட்டிருந்தது" என்று கூறி கோபாலர் நாலைந்து மயிரைக் காட்டினார்.

நாகமுத்து அதைப் பார்த்துவிட்டு "ஆம், இது செல்லத்தின் தலை மயிராகவே இருக்கவேண்டும். அவள் கூந்தல் தான் இவ்வளவு கறுப்பாயும் பளபளப்பாயும் மெல்லிதாயும் இருக்கக் கண்டிருக்கிறேன்" என்றான்.

# நான்காம் அத்தியாயம்.

---

## கல்லிழைத்த கணையாழி.

கோபாலர் கொள்கையை நாகமுத்து உறுதிப்படுத்தவும், எல்லோரும் ஆச்சரியமேலீட்டால் அமைதியுற்றிருந்தார்கள். கொலை என்ற கொடுஞ் செயல், ஒரு ஸ்திரீயால் செய்யப்பெற்றதால் பின்னும் கொடிதாகக் காணப்பட்டது.

கோபாலரோடு உரையாடிக்கொண்டிருந்த போலீஸ் உத்தியோகஸ்தர் கோபாலரை நோக்கி, "நல்லது, தற்சமயம் கருணாகரரைக் கொன்றது சமையற்காரி யென்றே வைத்துக்கொள்வோம். அப்பொழுதுகூட, 'கொலை செய்தவுடன் அவள் எவ்வழியாய்த் தப்பிச்சென்றாள்; நாகமுத்து வெளியே போனபிறகு எவ்வழியாய்வந்து எல்லாவற்றையும் சீர்ப்படுத்தி விட்டுத் திரும்பவும் சென்றாள் என்பவை விளங்கவில்லையே. இவைகளைப்பற்றி உமக்கு ஏதாவது விளங்குகிறதா ?" என்று கேட்டார்.

"இல்லை."

"ஆனால்......?"

கோபாலர் முகம் ஒருவகை மாறுதலுற்றது. அவர் சிறிது தாழ்ந்த குரலில் "என்னால் சொல்லக்கூடியதெல்லாம் ஒன்றே. அதாவது, இந்தக் குற்றத்தைக் கண்டுபிடிப்பதற்கு நாம் 22/514 இலக்கமுள்ள அதிர்ஷ்ட சீட்டு விஷயத்தில் எவ்வாறு வேலைசெய்து வருகிறோமோ அவ்வாறே வேலை செய்யவேண்டும். அந்த விஷயத்திற்கும் இதற்கும் உள்ள ஒற்றுமை யென்னவென்னில், இரண்டிலும் அபூர்வமாகக் காணப்படும் காணுமற்போகும் வித்தையே. முன்

அங்கே அரசகேசரியும் மதிமுகியும், எல்லோரும் சூழ்ந்திருக்கும்போது எப்படி மாயமாய் மறைந்துபோயினரோ, அவ்விதமே இப்பொழுது இங்கே சமையற்காரி செல்லம் மாயமாய் மறைந்துபோயிருக்கிறாள்" என்றார்.

"ஆதலால்........?"

"ஆதலால், இந்த இரண்டு விஷயங்களும் எவ்வாறு அதிசயமானவைகளா யிருக்கின்றனவோ அவ்வாறே ஒன்றுக்கொன்று சம்பந்தமுள்ளனவா யிருக்கவேண்டுமென்று உறுதியாய் நம்புகிறேன். மற்றொரு விஷயம் கவனிக்கத்தக்கது. மங்கையர்கரசியாரை விசாரித்தால், செல்லம்என்பவள்—கருணாகரரைக் கொன்றவள்—பன்னிரண்டு நாட்களுக்கு முன், மதிமுகி என் கைக்குத் தப்பிய மறுநாள்—இங்கு சமையற்காரியாய் வந்திருக்கிறாள். மற்றொன்று: மதிமுகியின் கூந்தலும் செல்லத்தின் கூந்தலைப்போலவே மிகக் கறுப்பாயும், பளபளப்பாயும், மெல்லியதாயும் இருப்பதை நான் கவனித்திருக்கிறேன்."

"ஆதலால்........?"

"ஆதலால், இந்தச் சமையற்காரியே மதிமுகி என்ற முடிவுக்கு வருகிறேன்."

"ஆதலால், இவ்விரண்டு சம்பவங்களுக்கும் மூலகாரணன்........"

"மூலகாரணன்....அரசகேசரியோ?"

"ஆம், என தப்பபிப்பிராயம் அதுவே."

"என்ன அதிசயம்! எங்குபோனாலும் அரசகேசரி! எப்பொழுதும் அரசகேசரி! அவன் என்ன, 'அங்கிங்கெனாதபடி எங்கும் நிறைந்த' ஏக பரிபூரணனோ?"

"அது கிடக்கட்டும். அந்தக் கல்லிழைத்த கணையாழியைப் பற்றி மறந்துவிட்டேனே" என்றார் கோபாலர்.

"எந்தக் கல்லிழைத்த கணையாழி?"

"கருணாகரர், தமது இடதுகை பௌத்திர விரலில்நீலக் கல்லிழைத்த மோதிரம் ஒன்று அணிந்திருந்தார். அந்த நீலக் கல் மிகவும் அபூர்வமானது. எத்தனையோ ஆயிரவராகன் மதிப்புள்ளது. அதைக் கருணாகரர் எப்பொழுதும் தம் விரலை விட்டுக் கழற்றுவதில்லை."

"அப்படியா? ஆனால் அவர் கையைப்பார்த்தால் விஷயம் விளங்கிவிடுகிறது. அரசகேசரி காரியமில்லாமல் ஒரு காரியத்தைச் செய்யமாட்டானே என்றுநான் முன்னமேயே ஐயுற்றேன். அவ்வையம் இப்பொழுது தெளிந்து விட்டது. வாருங்கள், கருணாகரர் கையைப்பார்த்துவிட்டு வருவோம்."

எல்லோரும் கருணாகரர் பிரேதத்தண்டை சென்றனர். நாகமுத்து கருணாகரர் கரத்தை விரித்தான். கையினுட் புறத்தில் நீலக்கல் மோதிரம் பிரகாசித்தது.

"என்ன அதிசயம். காரியம் கருத்துக் கெட்டாததாயிருக்கிறதே!" என்றார் கோபாலர்.

அவரோடு உரையாடி வந்த போலீஸ் உத்தியோகஸ்தர் "இப்பொழுதாவது அரசகேசரி மீது கொண்ட சந்தேகத்தை ஒழியும்" என்றார்.

கோபாலர் சற்று நேரம் சிந்தனையில் ஆழ்ந்திருந்து பிறகு, "ஒரு காரியம் என் கருத்துக் கெட்டாது போகும் பொழுதுதான், அதில் அரசகேசரி சம்பந்தப்பட்டிருப்பது நிச்சயம் என்றார்.

பின்னால் நடந்த விசாரணைகளொன்றும் பயன்படவில்லை. கருணாகரரைக் கொன்று அவர் கையிலணிந்திருந்த

அபூர்வக் கணையாழியை அபகரியாது சென்றவர் யாவ ரென்று தெரியவில்லை. சமையற்காரி செல்லமும் அப்பால் அகப்படவில்லை. இது நிற்க.

கருணாகரர் திரண்ட செல்வமுடையவர். ஆனால் சந்ததி யில்லாதவர். ஆதலால் அவருக்கு வார்சுதாரராகப் பல ரெழுந்தனர். அவர் மனைவி மங்கையர்க்கரசி சந்ததியில் லாத தனக்கு அவ்வளவு திரண்ட செல்வம் வேண்டுவதில்லை யென்று, அவர் உடமைகளையெல்லாம் விற்றுப் பணமாக்கிச் சுற்றத்தார்க்குப் பங்கிட்டுக் கொடுத்துத் தன் பிற்கால வாழ்க்கைக்கு ஒரு பங்கு தான் எடுத்துக் கொள்வதெனத் தீர்மானித்தாள்.

அவ்வாறே உடைமைகளை ஏலங் கூறுவதற்கு ஒரு நாள் குறிக்கப்பட்டது. அன்றையதினம், கருணாகரர் வீட்டில் பலர் செல்வரும், செல்வரெனப் பிறர் தமமைக் கருத வேண்டுமென்று விரும்பியவர்களும வந்துகூடினர். பொருள்களெல்லாம் அலங்காரமாய் வைக்கப்பட்டிருந்தன. கூடத்தின் மத்தியில் பட்டு விரித்த மேஜை ஒன்றின் நடுவே கண்ணாடிக் கிண்ணத்தால் மூடப்பெற்று நீலக்கல்மோதிரம் வைக்கப்பட்டிருந்தது.

முதன் முதல் நீலக்கல் மோதிரமே ஏலங் கூறப்பெற்றது எத்தனையோ ஜமீன்தாரர்கள் அம்மோதிரத்தின்மீது கண்ணாயிருந்ததால், ஏலம் பரபரவென்று ஏறியது. சேற்றுப்பட்டி ஜமீன்தாரர் ஏலத்தைப் பதினாயிர வராகன்வரையில் ஏறிவிட்டார். அப்பால் மெல்ல மெல்ல இருபதினாயிரம் வராகன் வரையில் ஏறியது. அதற்குமேல் போட்டி அதிகமா யில்லை. இருபத்தையாயிர வராகனுக்குமேல் ஏலம்

கேட்க முன் வந்தவர்கள் இருவரே. அவருள் ஒருவர் ரத்தின வியாபாரம் நாராயண செட்டியார். மற்றவர் நாட்டுப்பட்டி ஜமீன்தாரர் நல்லதம்பி தேவர்.

"இருபத்தாறுயிர வாரகன்...இருபத்தேழாயிர வாராகன்...இருபத் தெண்பதினாயிரம்...இருபத் தெண்பதி னாயிரத் தைந்நூறு..."

ஏலங் கூறுபவன் போட்டியாய்க் கேட்டுவந்த இருவரையும் திரும்பித் திரும்பிப் பார்த்தான்.

"முப்பதினாயிரம்" என்றார் நல்லதம்பித் தேவர்.

சற்றுநேரம் அமைதி பரவியிருந்தது. எல்லோரும் நாராயண செட்டியாரைப் பார்த்தார்கள். செட்டியார் புன்னகை செய்துகொண்டு நின்றார். அவர் முகத்தில் சிந்தனைக் குறிதோற்றியது. செட்டியார் வியாபாரத்தை உத்தேசித்து மோதிரம் வாங்க வந்தவர். அவர் போட்டியால் விலையை அதிகப்படுத்தி எடுக்கத் துணிவாரோ என்று எல்லோரும் ஐயமுற்றனர்.

"முப்பத்தையாயிரம்!" என்றார் செட்டியார். எல்லோரும் ஜமீன்தாரர் முகத்தை நோக்கினார்கள்.

ஏலங் கூறுவோன் "முப்பத்தையாயிரம்! முப்பத்தையாயிர வாராகன்!...ஒருதரம் முப்பத்தையாயிரம்!...இரண்டுதரம் முப்பத்தையாயிரம்!....மூன்று....விட்டு விடப்படும்....கடைசி முறை..." என்று கூறி ஜமீன்தாரரைப் பார்த்தான். யாவரும் மௌனமுற் றிருந்தனர்.

"கடைசி முறை விட்டாயிற்று" என்றான் ஏலங் கூறுவோன்.

ஒரு நீண்ட அமைதி...“ நாற்பதினுயிரம்!” என்ருர் ஜமீன்தாரர்.

பயனில்லை. மோதிரம் விற்ருயிற்று.

ஜமீன்தாரரது நண்பர்கள் அவரை சுற்றி நெருங்கி “என்ன சங்கதி? ஏன்சமயத்தை விட்டுவிட்டீர்கள்?” என்று உசாவினர்.

ஜமீன்தாரர் சிரித்துக்கொண்டு “சங்கதி என்ன? ஒரு நிமிஷம் வேறு விஷயத்தில் கவனமா யிருந்து விட்டேன்” என்ருர்.

“வேறு விஷயம் என்ன வந்தது இப்பொழுது?”

“யாரோ ஒருவர் என்னிடம் ஒரு கடிதம் கொண்டு வந்து கொடுத்தனர். ஒரு நிமிஷகாலம் அதில் கவனமா யிருந்து விட்டேன்.”

கோபாலர் அங்கே இருந்தார். மோதிரம் ஏலங் கூறப் பெற்றதைக் கவனித்துக் கொண்டிருந்தார். மோதிரம் விற் கப் பெற்ற பிறகு அவர் வாயிற் காவற்காரனிடம் சென்று “நீ நாட்டுப்பட்டி ஜமீன்தாரிடம் ஒரு கடிதம் கொண்டு போய்க் கொடுத்தா யல்லவா?’! என்று வினவினுர்.

“ஆம்” என்ருன் காவற்காரன்.

“அந்தக் கடிதத்தை உன்னிடம் கொடுத்தது யார்?”

“யாரோ ஒரு ஸ்திரீ.”

“அவள் எங்கே?”

“இதோ இப்பொழுது தான் வெளியே போகிருள். அதோ....அதோ....முக்காடிட்டுப் போகிருளே அவள் தான்.”

கோபாலர் அவன் காட்டிய ஸ்திரீயைக் கண்டார். ஆனால் அவள் முகத்தைக் காண முடியவில்லை. கரும் பட்டாடை ஒன்றை நலம்பெற உடுத்துச்சென்ற அவள் நடையே, கண்டாருள்ளத்தைக் கவரத்தக்கதாக விருந்தது.

கோபாலர் அவளைப் பின் தொடர்ந்து ஓடினார். ஜனங்கள் கூட்டமாய் வந்ததால் கோபாலர் அவர்களை விலக்கிக் கொண்டு செல்லவேண்டியிருந்தது. கூட்டத்தைக் கடந்ததும் கரும் பட்டாடை யுடுத்துச்சென்ற காரிகையைத் தேடினார். அவள் அவர் கண்ணில் அகப்படவில்லை. எங்கோ சென்று மறைந்து விட்டாள்.

இனி அவளை எங்கு தேடுவது? ஜமீன்தாரரைக் கண்டு அவன் கொடுத்த கடிதத்தையாவது பார்க்கலாம் என்று கருதித் திரும்பிக் கருணாகரர் வீட்டுக்கு வந்தார்; நல்லதம்பித் தேவரைக் கண்டார். கடிதத்தைப்பற்றிக் கேட்டார். தேவர் தமக்குக் கிடைத்த கடிதத்தை கோபாலர் கரத்திற் கொடுத்தார். அதில் பின்வருமாறு எழுதப்பெற்றிருந்தது.

"நீலக்கல் மோதிரம் தீமையைத் தருவது; கருணாகரர் கதி கருத்தி லிருக்கட்டும்."

The Manoranjini Press, Madras.

# மதிமுகி

## இரண்டாம் பாகம்.

### ஐந்தாம் அத்தியாயம்.

#### சரஸ்வதி பூஜை.

"மடிமடிக் கொண்டொழுகும் பேதை பிறந்த
குடிமடியுந் தன்னினு முந்து." *

என்று தெய்வப்புலமைத் திருவள்ளுவ நாயனர் திருவாய் மலர்ந்தருளிய உண்மையினை மறந்து, ஞாலம்வரினும் சென்ற காலம் வாராதென்பதைச் சிறிதும் சிந்தியாது, மெய்ஞ்ஞான முற்ற மேதாவியர்போல் நடித்துப் போலிஞானம் பிதற்றத் தொடங்கி, "உலகம் எவ்வாருயினுமென் ? நம் உழைப்பை எதிர் நோக்கிதானே உலகம் இயங்குகிறது? ஓடியோடி உழைத்தவரெல்லாம் என்ன பலனைக்கண்டார்? எல்லோரும் ஒருநாள் மடிந்து சுடுகாட்டிற் பிடிசாம்பலாய்ப் போகிறவர் கள்தாமே? ஆதலால், " * * * மனம் விரும்புணவுண்டு நல்வத்திரமணிந்து மடமாதர்தமை நாடி நறுமலர்சூடி விளை யாடி * * * வாழ்ந்தவரொடு கலந்து மகிழுகின்ற சுகமே கண்கண்ட சுகமிதே கைகண்ட பலன்' எனுங் கயவர்" தம் மையும் தம்மையொத்த இருகால்மாக்களையும் ஒழிந்த, ஏனைய மிருகங்களும் பறவைகளும்—நுணுகி நோக்குமிடத்துப் புல் பூண்டு முதலிய ஓரறிவுயிர்களும்—அருட்கடலாகிய இறை

---

*திருக்குறள்:—இதன் பொருள்:—சோம்பர் கொண்ட மூடன் தான் அழிவதற்கு முன்னே, அவன் பிறந்த குடி அழியும்.

வன் திருவுளக்குறிப்பின் வழிநின்று சோம்பலின்றி உழைத்துவரும் இயல்பினையும் உணராமல், உடல்வருந்த உழைக்கப் பின்வாங்கிச் சோம்பர்கொண்டு தேம்பித் திரிவதுபோலாகாது, தன்னிடத்தே வாழுங் கணக்கிறந்த உயிர்கள் நிலைபெறுதல் வேண்டித் தன் பேருருவின் பெரும் பகுதியில் ஆதித்தனது அமுத செங்கிரணங்கள் தோயுமாறு ஓயாது சுழன்று கொண்டிருக்கும் நிலமடந்தை நலம்பெற உடுத்த, நித்திலங் கோத்த, நீலப்பட்டாடையின் ஒரு முனை காற்றிடைப்பட்டுச் சுருங்கி விரிந்து, சுருங்கி விரிந்து அசைவது போலச் சென்னை கடற்கரையில் விரிகடல் எறியும் தெளிநீர் அலைகள், ஓங்கி யெழுந்து விரைந்தோடிப் பின் தவழ்ந்து வந்து மென்மணற் கரையில் மெல்லென மோதின. மாலை ஐந்தரைமணியிருக்கும். அன்றையதினம் ஆகஸ்டு மாதம் 20-ஆம் தேதி—அதாவது நீலக்கல் மோதிரம் விற்கப்பெற்று நான்கு மாதங்கட் கதிகமான பிறகு.

நல்லதம்பித் தேவர், தமது மனைக்கிழத்தியோடு கடற்கரையில் உலவிக்கொண்டிருந்தார். அஸ்தமிக்கும் அமையமாயிற்று. ஆதித்தனது செங்கிரணங்களால் வான்விளிம்பு செம்பொன் முலாம் பூசப்பெற்றதுபோலத் திகழ்ந்தது.

"பொழுதாய் விட்டதே" என்றாள் சுந்தரவல்லி—நல்ல தம்பித் தேவர் மனையாட்டி.

தேவர் தம் சட்டைப்பையிலிருந்து தங்கக் கடியாரத்தை எடுத்துப் பார்த்துவிட்டு, "ஆம், மணி ஆறாகப்போகிறது. நாம் நாராயண செட்டியார் வீட்டுக்குப் போகவேண்டுமல்லவா?" என்றார்.

"அதற்காகத்தான் ஞாபகமூட்டினேன்."

"ஆனால் சரி, வா போகலாம். அதோ நிற்கிறது, நமது

வண்டி" என்று கூறி கடற்கரைச் சாலையோரத்தில் பல வண்டிகளோடு நின்று கொண்டிருந்த ஓர் இரட்டைக் குதிரை வண்டியைச் சுட்டிக்காட்டிச் சென்றார் நல்லதம்பி தேவர். அவரோடு சுந்திரவல்லியும் சென்றாள்.

நல்லதம்பித் தேவர், நாராயண செட்டியார் வீட்டுக்கு வண்டியைச் செலுத்தும்படிக் குதிரைக்காரனுக்குக் கட்டளையிட்டுவிட்டுத் தம் மனைவியை முன்னதாக வண்டியிலேறச் செய்து பிறகு தாமும் ஏறிக்கொண்டார். குறித்த இடத்தைநாடி வண்டி செல்லட்டும். நாம் நமது நல்லதம்பித் தேவர் தம் இல்லாளோடும் நாராயண செட்டியார் இல்லத்தை நாடிச் செல்ல எழுந்த காரணத்தைக் கவனிப்போம்.

ஔவையார், காரைக்காலம்மையார் ஆண்டாள், மங்கையர்க்கரசியார் முதலிய கல்வியிற் சிறந்த பெண்மக்கள் இருந்து விளங்கிய நமது தமிழ் நாட்டில் தாய்மாராகிய பெண்மக்கள் வயிற்றிற் பிறந்து, உடன் பிறந்த சகோதரிகளாகிய பெண்மக்களோடு வளர்ந்து, மனைவியராகிய பெண்மக்களோடு இருந்து நல்லறமாகிய இல்லறத்தை நடத்திவரும் ஆண்மக்கள், நம் நாட்டுப் பண்டை வழக்கத்தையும், பெண்மக்களும் மக்களே என்பதையும் மறந்து அவர்களுக்குக் கல்வி கற்பியாது அறியாமையில் ஆழ்த்தி வைத்திருக்கும் கொடிய பாவத்திற்கு ஒரு பிராயச்சித்தம்போல, கல்விக் குறைவிடமாம் சரஸ்வதி என்னும் பெண்மக்களைப் போற்றி வருஷத்திற் கொருமுறை பயபக்தியோடு அவள் திருவடிகளைப் பூஜித்து வருகின்றனர். இதுவே சரஸ்வதிபூஜையாகும். சரஸ்வதிபூஜை யன்றய தினமும் அதற்கு முந்திய ஒன்பது நாட்களும் மாலைப்பொழுதில் தமது இல்லத்தில் சரஸ்வதி உருவச் சிலையையோ அல்லது படத்தையோ அலங்கரித்து வைத்து அதனைச்சூழப் பல

வகைப்பட்ட பாவைகள், படங்கள் முதலியவற்றையும் அழகுற அலங்கரித்து வைத்து விழாக் கொண்டாடுவதுண்டு. நல்லதம்பித் தேவரை நாம் சென்னைக் கடற்கரையிற் கண்ட அன்றையதினம்—ஆகஸ்டுமீ 20உ—சரஸ்வதி பூஜைக்கு முந்திய நாள். நாராயணசெட்டியார், தனவந்தராயும், ரத்தின வியாபாரியாயுமிருந்ததால், தமதில்லத்தில் மிகவும் சிறப்பாக, சரஸ்வதி 'கொலு' ஜோடித்து, அதை வந்து கண்டு களிக்கும்படித் தம் நண்பர் பலர்க்கும் 'அழைப்புப் பத்திரம்' அனுப்பியிருந்தார்.

அவ்விதமான 'அழைப்புப் பத்திரம்' ஒன்று நம் நல்லதம்பித்தேவருக்கும் வந்தது. ஆதலால் அவர் தமது மனைவியோடு அன்றையதினம் கடற்கரை யுலாவிற்குச் சென்று விட்டு வீட்டிற்குத் திரும்பு காலையில் நாராயண செட்டியார் அகத்திற்குச் சென்றுவரக்கருதிச் சென்றார்.

*  *  *  *

நாராயண செட்டியார்வீடு கலியாண வீடுபோல் விளங்கியது. அவ்வீட்டின் நடுக்கட்டில், ஒரு புறத்து ஆடை நலக்க உடுத்த ஆண்மக்கள் பலரும், வேறொரு புறத்துப் பட்டுடுத்துப் பலபணிகள் பொலிவுறப் பூண்ட பெண்மக்கள் பலரும், தரைமீது விரித்திருந்த ரத்தினக்கம்பலத்திலமர்ந்து, மின்சார விசிறியின் சுழற்சியால் எழும் காற்று மேய் குளிர, வீர, ஏலம் முதலிய வாசனைப் பொருள்கள் கூட்டிய பாக்கோடு காம்பு கருகாக் கொழுந்து வெற்றிலையினைச் சுண்ணந் தடவி மென்னரம்பு கிழித்துக் கூட்டி வாய் கமழ மென்று கொண்டு, செய்யுருவோ மெய்யுருவோ என்று கண்டோர் மயங்கும் வண்ணம் கைத்திறங்காட்டி மெய்பெற வகுத்த சரஸ்வதி தேவியின் திருவுருவப் பிரதிமையின் பொலிவு

நோக்கிக் களிப்பு, மல்லிகை, முல்லை, ரோஜா முதலிய பல மலர்களும், பனிநீரும், சந்தனமும் சேர்ந்துவீசும் வாசங்கொண்டு நாசி யின்புற, கூடத்தின் ஒரு புறத்திலிருந்த 'கிராமபோன்' (Gramaphone) என்னும் அற்புத இயந்திரம் இயக்கப்பெற்றுப் பாடும் பல்லிசை வாணர் பாட்டுக்களைச் செவியின்புறக் கேட்டுக் கொண்டிருந்தனர்.

அச்சமயம் நல்லதம்பித் தேவரும் அவர் மனைவியாரும் அங்கு வருவதைக்கண்ட செட்டியார் எழுந்து எதிர்சென்று அவர்களை வரவேற்றனர். சுந்தரவல்லியைக் கண்டதும், நாராயண செட்டியார் மனைவி விரைந்து வந்து அவளை அழைத்துக்கொண்டு அரிவைய ரமர்ந்துள்ள இடத்துச் சென்று உபசரித்து உட்காரச்செய்தாள். நல்லதம்பித் தேவரும் செட்டியாரால் உபசரிக்கப்பெற்று ஓரிடத்தில் அமர்ந்தனர்.

அப்பொழுது கிராமபோன் இயந்திரம்,

" வான் வளர்த்த மலர்க்கொடியே மலைவளர்த்த
மடப்பிடியே மணியே வாசக்
கான்வளர்த்த மலர்க்கோதைக் கனியேமுக்
கனியேபைங் கரும்பே செங்கை
மான்வளர்த்துச் சடையிலிள மதிவளர்த்த
வொருவிழவன் மகிழ் வாய்த்த
தேன்வளர்த்த மொழிக்குமரி கௌரியென
மறைபுகழ்மா தேவி போற்றி.''

என்ற கொழுஞ்சுவை நிரம்பிய செழுந்தமிழ்ப் பாட்டைக் கேட்டோருள்ளம் கனலிற்பட்ட மெழுகெனக் கரைந்துருகுமாறு பாடியது. அதை ஆர்வத்தோடு கேட்டிருந்த தேவர் அது முடியவும் கவனம் சிதறித் தம் அருகே யிருந்தவர்கள்

அப்பாட்டா லடைந்த முகமலர்ச்சியைக் காண விழைந்தவர் போல் ஒருபுறம் திரும்பினர். அங்கு அமர்ந்திருந்த பலருள் ஒருவர் முகம்மட்டும் இயல்பு மாறுதிருக்கக் கண்டார். அவர் முகத்தைச் சிறிது உற்றுநோக்கத் தமக்கறிமுகமா யிருப்பது கண்டு, புன்னகையோடு அம்முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தார். இங்ஙனம் நமது தேவர் கவனத்துக் காளாயிருந்தவர் நமக்கும் அறிமுகமான கோபாலரே. சரஸ்வதி தேவியின் உருவத்வதயே கூர்ந்து நோக்கிக்கொண் டிருந்த கோபாலர் நல்லதம்பித் தேவர் தம்மைநோக்கிப் புன்னகை செய்துக்கொண் டிருப்பதை உணர்ந்தவர் போல் பொருக்கெனத் திரும்பித் தேவரை நோக்கினர்; தாமும் புன்னகை செய்தார்; பிறகு தேவரை நெருங்கி நகர்ந்து வந்தமர்ந்தார்; "தாங்கள் வந்ததை நான் கவனிக்கவில்லையே" என்றார்.

"இப்பொழுதுதான் வந்தேன்" என்றார் நல்லதம்பித் தேவர்.

"சரஸ்வதி உருவத்தைப் பார்த்தீர்களா? என்ன தற்சொரூபமா யிருக்கிறது!"

"ஆம், மிகவும் கைதேர்ந்த சிற்பியின் வேலை."

"சரஸ்வதியின் வலக்கரத்திற் பிரகாசிக்கிறதே, என்ன தெரிகிறதா?"

நல்லத்தம்பித் தேவர் சரஸ்வதி உருவத்தின் வலக்கரத்தை உற்று நோக்கினர். அக்கரத்தின் பௌத்திர விரலில் அணிந்திருந்த ஒரு தங்கக் கணையாழியின் நடுவே நீலக்கல் ஒன்று நிலவொளியில் நெடுங்கடல் மிளிர்வது போற் பிரகாசித்தது.

"அந்த மோதிரத்தைச் சொல்கிறீர்களோ?" என்று தேவர் கோபாலரை நோக்கிக் கேட்டார்.

"ஆம், ஒரு ஸ்திரீசெய்த சூழ்ச்சியல்லவா அது இப்பொழுது தங்கள் கரத்தில் இல்லை"

"ஆனல், இது அந்த மோதிரந்தானே? கருணாகரர் அணிந்திருந்ததா?"

"ஆம். செட்டியார் அதை நல்ல லாபத்தோடு விற்று விடலாமென்று வாங்கினர். இன்னம் 'கிராக்கி' ஒன்றும் வரவில்லை போலிருக்கிறது. இப்பொழுது அதைச் சரஸ்வதி கையில் அணிந்ததுகூட பலர் பார்த்தால் 'கிராக்கி' ஏற்படும் என்ற கருத்தினுல்தான் போலிருக்கிறது."

"இருக்கலாம்."

"தாங்கள் என் அதை வாங்கப் பிறகு முயலவில்லை? கல் மிகவும் அருமையான தாயிற்றே?

"உண்மைதான். அதை ஏலத்தில் எடுக்கக் கருதிய பொழுதே அவசகுனமாக ஒரு செய்தி வந்ததே, மறுபடியும் அதை வாங்குவது நல்லதல்ல என்றிருந்து விட்டேன்."

"என்ன அவசகுனம்? அந்தக்கடிதம் ஒன்றுவந்ததே அதுவோ?"

"ஆம்."

"பேஷ்! என்ன நீங்கள் கூட இவ்வளவு கர்னாடகமாயிருக்கிறீர்கள்? எவளோ ஒரு ஸ்திரீ ஏதோ மோசக் கருத்தோடு ஒரு கடிதம் எழுதிவிட்டால் அதில் தாங்கள் மயங்கிவிடுகிறதா? அந்த ஸ்திரீ இன்னுள் என்பது எனக்குத் தெரியும். அவளைக் கண்டு பிடிப்பதற்காக நான் அதுமுதல் பல முயற்சிகள் செய்துகொண்டிருக்கிறேன். அவள் இன்னமும் என் கண்ணில் அகப்படவில்லை. ஆனல் இன்றைக் கில்லா

விட்டால் வேறென்றைக்காவது ஒருநாள் அவளைக் கண்டு பிடியாமல் விடமாட்டேன். அது மட்டும் நிச்சயம்"

"ஆம் அவளைக் கண்டுபிடிக்க வேண்டியது அவசியந் தான். எனக்கு முன்னிருந்த பயம்கூட இப்பொழுது அவ் வளவாக இல்லை. மோதிரத்தை வாங்கிவிடலாமென்ற எண் ணமும் தோன்றுகிறது" என்று சற்று இழுத்தாற்போல் சொன்னார் நல்லதம்பித் தேவர்.

"எண்ணம் தோன்றுகிறதென்ன? தங்களுக்கு மோதி ரத்தில் விருப்பமிருக்குமானல் சற்றும் யோசியாமல் இப் பொழுதே வாங்கி விடுங்கள். நான் இன்னும் பத்து நாட் களில் தங்களைப் பயமுறுத்திய ஸ்திரீயைத் தங்களெதிரே கொண்டுவந்து நிறுத்தி அவள் அக்கடிதம் எழுதியனுப்பிய தன் உண்மைக்கருத்து இன்னதென அவள் வாயாலேயே கூறச் செய்கிறேன்" என்றார் கோபாலர்.

"ஆனல் சரி, நாளைக்காலையில் தாங்களும் வாருங்கள், செட்டியாரிடம் பேசி விலையை முடிவுசெய்து வாங்கிவிடு கிறேன்."

"நல்லது, அப்படியே செய்யுங்கள்" என்றார் கோபாலர்.

செட்டியார் வீட்டுக் கூடத்தின் சுவரில் மாட்டப் பெற் றிருந்த கடியாரம் ஒன்று, எட்டுமணி அடித்தது. செட்டி யார் 'கிராமபோனை' நிறுத்திவிட்டு, சரஸ்வதி தேவிக்கு நிவேதனை, தீபாராதனைகள் செய்து எல்லோர்க்கும் தாம் பூலம் கொடுப்பித்தார். எல்லோரும் பெற்றுக் கொண்டு எழுந்து செட்டியாரிடம் விடைபெற்று வெளியேறினர்.

நல்லதம்பித் தேவர், செட்டியாரிடம் உத்தரவு பெற் றுக் கொள்ளும்போது தாம் மறுநாட்காலை அவரைப் பார்ப்

பதாகத் தெரிவித்தனர். அச்சமயம் செட்டியார் மனைவி சுந்தரவல்லியைக் கைப்பற்றி வந்தனள். தன் நாயகனைக் காணவும் சுந்தரவல்லி செட்டியார் மனைவியிடம் விடைபெற்றுக்கொண்டு நாயகனண்டை வந்தாள். தேவர் நாயகியோடு வெளிவந்து வாயிலிற் காத்திருந்த தமது வண்டியிலேறினர். வண்டி தேவர் மனை நோக்கிச் சென்றது

வண்டியில் செல்லும்போது சுந்தரவல்லி தன் நாயகனை நோக்கி, "சரஸ்வதியின் கரத்தில் ஒரு நீலக்கல் மோதிரம் அணிந்திருந்ததே பார்த்தீர்களா?" என்றாள்.

"ஆம், பார்த்தேன்" என்றார் தேவர்.

"என்ன பிரகாசமாயிருக்கிறது! நீங்கள் வீணாய்ப் பணத்தைப் போட்டு ஏதேதோ வாங்குகிறீர்களே ஒழிய அது போல 'நறுக்காய்' ஒரு நகை வாங்குகிறதில்லையே."

"அதற்கென்ன, வேண்மோனால் அதையே வாங்கி விடுகிறேன்."

"விலைக்குக் கிடைக்குமானால் கட்டாயம் அதை வாங்க வேண்டியதுதான். அவ்விதமான கல் நமக்கு வேறெங்கும் கிடைக்காது."

"விலைக்குக் கிடைக்கும். கட்டாயம் வாங்கிவிடுவோம்."

"என்றைக்கு?—"

"நாளைக்கே" என்றார் நல்லதம்பித் தேவர்,

# ஆறும் அத்தியாயம்.

## அற்புதக் காட்சிகள்.

சரஸ்வதி பூஜை அன்றையதினம் காலே சுமார் எட்டு மணியிருக்கும். நாராயணசெட்டியார் வீட்டு வாயிலில் ஒரு மோட்டார் வண்டி வந்து நின்றது. அதிலிருந்து இருவர் இறங்கினர்—கோபாலரும், நல்லத்தம்பித்தேவரும். செட்டியார் உள்ளிருந்து வந்து அவர்களிருவரையும் கண்டு வந்தனம் செய்து “வாருங்கள், வாருங்கள்” என்று சொல்லி அழைத்துக்கொண்டு சென்று, கூடத்தில் உட்காரச்செய்து தாமும் உட்கார்ந்தார்.

கோபாலர், நாராயணசெட்டியாரை நோக்கி, “என்ன செட்டியாரே, இன்றையதினம் சரஸ்வதி பூஜை. அதிக நேரம் தாமதிப்பது தங்களுக்கும் அசௌகரியமாயிருக்கும், எங்களுக்கும் அசௌகரியமா யிருக்கும். ஆதலால், வந்த காரியத்தைச் சொல்லிவிடுகிறேன். தாங்கள் நீலக்கல் மோதிரத்தை ஏலத்தில் எடுத்தது சொந்த உபயோகத்துக்கோ, அல்லது விற்பனைக்கோ? தயவுசெய்து தெரிவிக்கவேண்டும்” என்றார்.

“அது ஒரு கணக்கா? நல்ல விலை வந்தால் விற்றுவிடுகிறது. இல்லாவிட்டால் சொந்த உபயோகத்துக்குத்தான் இருக்கட்டுமே என்பது கருத்து”

“அதாவது விற்பனைக்குத்தான். நல்லது, தேவரவாள் ஏலத்திலேயே அதை வாங்க விரும்பியது தங்களுக்கு நன்றாய்த்தெரியும். இப்பொழுது அதை அவர்களுக்கே ஒரு விலையைச்சொல்லிக் கொடுத்து விடுகிறதுதானே?”

"சித்தப்படியே."

"என்ன விலை? ஒரு முடிவாகச் சொல்லி விடுங்கள். பேரம் வேண்டாம். நான் தரகுபேச வரவில்லை. நட்புரிமை பற்றி இடை நின்று பேசுகிறேன்."

"பின்னை என்ன, அவ்வளவு தெரியாதா? இப்பொழுது அந்தக் கல்மட்டும் அரைலக்ஷம் வரையில் மதிப்போடுகிறது........"

"அந்த பேரமெல்லாம் வேண்டாமென்றுதான் நான் முன்னமேயே சொன்னேனே. நான் ஒரே பேச்சு சொல்கிறேன் கேளும். நீர் முப்பத்தைந்துக்கு அதை எடுத்தது எனக்கும் தெரியும், தேவரவாளுக்கும் தெரியும். கூட ஒரு ஐந்து வைத்து, நாற்பதினாயிரத்தைப் பெற்றுக் கொண்டு மோதிரத்தைத் தேவரவாளிடம் கொடுத்துவிடும். வேறு பேரம் ஒன்றும் வேண்டாம். பணத்தை எடுக்கச் சொல்லட்டுமா?"

செட்டியார் முகங்குழைந்து. "தாங்கள் அப்படிச் சொல்லிவிடக்கூடாது. தேவரவாள் ஏலத்திலேயே நாற்பதாயிரத்துக்குக் கேட்டார்கள்" என்றார்.

"அதைப்பற்றியென்ன?" என்றார் கோபாலர்.

"எனக்கு ஏலம்விழும் முன் அவாள் நாற்பதாயிரத்துக்குக் கேட்டிருந்தால் நான் விட்டிருக்கமாட்டேன். நாற்பத்தைந்து கேட்டிருப்பேன். அதற்குமேல் செல்ல எனக்கு எண்ணமில்லை."

"சரி, நாற்பத்தையாயிரம் தான் வைத்துக் கொள்ளும்" என்று கூறிக் கோபாலர் தேவரை நோக்கி "செட்டியார் பேருக்கு நாற்பத்தையாயிரத்துக்கு ஒரு 'செக்' (Cheque) எழுதிக் கொடுத்து விடுங்கள்" என்றார்.

"ரொக்கமாகவே இருந்தால் நல்லது. எல்லாவற்றிற்கும் நாளைக் காலையில் நான் மோதிரத்தை எடுத்துக்கொண்டு தேவரவாள் வீட்டுக்கே வந்துவிடுகிறேனே" என்றார் செட்டியார்.

நல்லத்தம்பித்தேவர் செட்டியாரை நோக்கி, "ஏன், ரொக்கம்கொடுத்தால் இன்றையதினமே மோதிரம் கொடுக்க முடியாதோ!?" என்றார்.

செட்டியார், பரபரப்புடன் "இல்லை, இல்லை, இல்லை", என்று கூறித் தொடர்ந்து "ரொக்கத்தைப்பற்றி ஒன்றுமில்லை. அதற்கென்ன, இன்றைக்கில்லாவிட்டால் நாளைக்கு வருகிறது. கருத்து வேறே. சரஸ்வதி கையில் போட்டிருக்கிறதே. இன்றோடு பூஜையும் முடிந்து விடுகிறதே. பூஜை முடிந்த பிறகு கழற்றலாமென்பது. அப்படி இன்றைக்கே அவசியமானல் இரவு ஒன்பது மணிக்குமேல் தருகிறேன்" என்றார்.

"ஆனல் சரி, அப்படியே ஆகட்டும், நான் இரவு ஒன்பது மணிக்கு இங்கு வருகிறேன்."

"அப்படியே."

"சரி, உத்தரவு பெற்றுக்கொள்கிறோம்" என்று தேவர் எழுந்தார் கோபாலரும் எழுந்தார். செட்டியார் இருவரையும் வீட்டு வாயில்வரைத் தொடர்ந்துசென்று அவர்கள் மோட்டார் வண்டியில் ஏறியபிறகு தாம் தமது வீட்டுக்குள் திரும்பிச் சென்றார்.

* * * * *

இரவு மணி பத்து! நல்லதம்பித்தேவர் நாராயண செட்டியாரிடம், நாற்பத்தையாயிரம் ரூபாயையும் ரொக்கமாகக் கொடுத்துவிட்டு, அவர் சரஸ்வதி கரத்தினின்றும்

சுழற்றிக்கொடுத்த நீலக்கல் மோதிரத்தை—காலஞ்சென்ற கருணாகரர் அணிந்திருந்த நீலக்கல் மோதிரத்தை வாங்கித் தமது இடதுகை சிறு விரலில் அணிந்து கொண்டு வெளிப் புறப்பட்டார். செட்டியார் வீட்டு வாயலில் மோட்டார் வண்டி தயாராகக் காத்துக்கொண்டிருந்தது.

தேவர் செட்டியாரிடம் விடைபெற்று வெளியில் வந்து வண்டியேறும்போது, எவனோ ஒருவன் தேவரிடம் ஒரு கடிதத்தைக் கொண்டுவந்து கொடுத்தான். தேவர் வண்டிப்படியில் ஒரு காலை வைத்தபடியே, கடிதத்தைப்பிரித்து விளக்கு வெளிச்சத்தில் பார்த்தார். அதில் பின்வருமாறு எழுதப் பெற்றிருந்தது.

"தாங்கள் செட்டியாரிடம் மோதிரத்தைப் பெற்றுக் கொண்டுவீட்டுக்குத் திரும்பும்போது தயவுசெய்து என்னை அவசியம் பார்த்துவிட்டுப் போகக் கோருகிறேன். நான் கருணாகரர் வீட்டில் இருக்கிறேன். தங்கள் வரவை எதிர் நோக்கியே இங்கிருக்கின்றேன். வரத் தவறவேண்டாம்.

தங்கள் உண்மையுள்ள,

கோபாலர்."

தேவர் இக்கடிதத்தைப் பார்த்துவிட்டு வண்டியிலேறி அமர்ந்து வண்டிக்காரனை நோக்கி "கருணாகரர் வீட்டண்டை வண்டியை நிறுத்து" என்று கட்டளையிட்டார்.

* * * * *

மோட்டார்வண்டி கருணாகரர் வீட்டுவாயிலில் வந்துநின்றது. நல்லதம்பித் தேவர் வண்டியை விட்டிறங்கிச்சென்று வீட்டுக்கதவைத் தட்டினார். கதவு தாழ்க்கோலிடப் பெறு

திருந்ததால் திறந்துகொண்டது. நடையில் மின்சார விளக்கொன்று பிரகாசித்துக்கொண்டிருந்தது. நடைக்கதவு சார்த்தப்பெற்றிருந்தது. வீட்டுள் அரவம் சிறிது மில்லாதிருந்தமையால் தேவர் நடைக் கதவைத் தாமாகத் திறப்பது தகாதென்று "கோபாலர் இருக்கிறாரா?" என்று கேட்பது போலக் கேட்டுத் தமது வரவைக் குறிப்பித்தார்

"இருக்கிறார், வாருங்கள்" என்று யாரோ உள்ளிருந்து கூறினர்.

உடனே தேவர் நடைக் கதவின் பித்தளைப் பிடியைத் திருப்பிக் கதவைத் திறந்துகொண்டு உட்சென்றார். உடனே கதவு தானே மூடிக்கொண்டது. வீட்டினுள் வெளிச்சம் சிறிதும் இன்றி இருண்டிருந்தது. மனிதர் அரவமும் இல்லை. அமைதியும் இருளும் கூடி தேவரை அச்சுறுத்தின. தேவர் மனங்கலங்கி வெளியே செல்லக்கருதித் திரும்பி, நடைக்கதவைத் திறக்க அதனுட்புறம் அமைக்கப் பெற்றிருந்த பித்தளைப் பிடியைத் திருப்ப எண்ணித் தொட்டார். உடனே கையில் தேள் கொட்டியது போலச் சுறீரென்று கை நரம்புகள்நொந்தன. தேவர்க்கு அச்சம் மிகுதியாயிற்று. தமது வண்டிக்காரனைப் பெயரிட்டுக் கூவினர். அச்சத்தங் கேட்டு வண்டிக்காரன் ஓடிவந்து நடைக்கதவைத் திறக்க வெளிப்புற மிருந்த பித்தளைப் பிடியைத் தொட்டான். அவனுக்கும் அதைத் தொட்ட மாத்திரையில் தேவர்க்குண்டானதுபோல் கையில் வருத்த முண்டாகவே, கையை உதறிக்கொண்டு 'அப்பா' என்று அலறினன்.

தேவர் உள்ளிருந்தபடி வண்டிக்காரனை விளித்து, "கதவைத்திற" என்றார்

" முடியவில்லையே " என்றான் வண்டிக்காரன்.

"சீக்கிரம் வண்டியைச் செலுத்திக்கொண்டு கோபாலர் வீட்டுக்குப்போய் அவர் வீட்டிலிருந்தால் உடனே இங்கு அழைத்துவா. இல்லாவிட்டால் வேறு போலீஸ் உத்தியோகஸ்தர்கள் சிலரை அழைத்துக்கொண்டுவா. சீக்கிரம்!" என்றார் தேவர்.

" இதோ வந்துவிட்டேன் " என்று கூறி வண்டிக்காரன் சென்று விட்டான்.

மோட்டார் வண்டி புறப்பட்ட சத்தத்தைக் கேட்ட பிறகு தேவர் தமது நிலையைக் கருதத் தொடங்கினர். திடீரென்று அவர் நின்ற இடம் வெளிச்சமுற்றது. தேவர் மேல் நோக்கினர். மின்சார விளக்கு ஒன்று பிரகாசித்தது. சற்று மனத்துணிவுடன் தேவர் தம்மைச் சுற்றிலும் நோக்கினர். அவருக்கெதிரே ஒரு வெள்ளைத் திரை காணப்பட்டது. அதன் நடுவே ஒரு சித்திரம் சித்திரிக்கப்பட்டிருந்தது. தேவர் அதை உற்று நோக்கினர். அச்சித்திரம் கருணாகரரின் உருவமாயிருந்தது ? கருணாகரர் கொலையுண்டு கிடந்த நிலையினைக் காட்டிச் சித்தரிக்கப் பெற்றிருந்தது ! தேவர் உடல் நடுங்கினர். அச்சித்திரத்தைப் பார்க்கவும் கூசி நிற்கும்போது, அத்திரை சிறிது சிறிதாய்ச் சுருங்கி ஒரு புறத்தொதுங்கியது. திரையைச் சுருக்குவார் யாவரென்றறிய வொண்ணாது தேவர் திகைத்து நிற்கையில், அவர்கண்களுக்கெதிரே அத்திரைக்குச் சிறிது தூரத்திற்குப் பின்னே மற்றொருதிரை காணப்பட்டது. அத்திரைச் சருகே உச்சியில் மற்றொரு மின்சாரவிளக்குப் பிரகாசித்தது. இவ்விரண்டாவது திரையில் சித்திரம் ஒன்றுமில்லை. ஆனல் அதன் நடுவே பெரிய எழுத்துக்களில்,

நீலக்கல் மோதிரம் தீமையைத் தருவது
கருணாகரர் கதி கருத்திலிருக்கட்டும்.

என்று எழுதியிருந்தது. இதைக் காணவும் தேவர் மனங்கலங்கி மூர்ச்சையுற்றுக் கீழ் விழுந்துவிட்டார். அந் நிலையில், விளக்கு வெளிச்சம் செந்நிறமாய் மாறியதுபோல் அவருக்கு ஒரு தோற்றம் உண்டாகக் கண்விழித்துப் பார்த்தார். ஆம். வீடெங்கும் செந்நிறமாகவே தோற்றியது! இது நமது மனோபயத்தின் தோற்றமா அன்றி வேறு காரணமேதும் உண்டா என்று அறியவேண்டித் தேவர் தலையைக் கரத்தாற் பிடித்துக்கொண்டு எழுந்தார். தாம் சற்று முன் பார்த்ததிரை முதல் திரையைப்போலவே ஒரு புறமாய்ச் சுருங்கியிருப்பதையும் அதற்குப் பின் சிறிது தூரத்தில் மற்றொரு திரையும் அதற்கருகே உச்சியில் சிகப்புக்கண்ணாடியாலாகிய மற்றொரு மின்சார விளக்கு பிரகாசித்துக் கொண்டிருப்பதையும் கண்டார். ஆ! என்ன அதிசயம்! இம் மூன்றாவது திரையின் நடுவே சரஸ்வதி தேவியின் திருவுருவம் சித்தரிக்கப் பெற்றிருந்தது! இவ்வோவியம், நாராயண செட்டியார் வீட்டில் வைத்திருந்த சரஸ்வதி உருவப் பிரதிமைப்போலவே—சிறிதும் வேறுபாடின்றி அமைந்திருந்தது. அச்சிலையின் வலக்கர விரல்களொன்றில் அணிந்திருந்த நீலக் கல்மோதிரம் இவ்வோவியத்தின் வலகரவிரலிலும் சித்திரித் திருந்தது.

தேவர் மனம் சுழல் காற்றில் அகப்பட்ட துரும்பு போற் சுழன்றது! ஒரு பொருளின் இயல்பு இடத்தாலும் காலத்தாலும் வேறுபடுவது போல சரஸ்வதி தேவியின் இனிய திருவுருவமும் அவ்விடத்தில், அக்காலத்தில், அவர் மனத்தில் அச்சத்தை விளைத்தது. மனோ மயக்கத்தால்

சோர்ந்த கண்களை விழித்து மீட்டும் அவ்வோவியத் திரையை நோக்கினர் திரை மெல்ல மெல்லச் சுருங்கி ஒருபுறத்தில் ஒதுங்கியது. அத்திரைக்குப் பின்னே சிறிது தூரத்தில் மற்றொருதிரை காணப்பட்டது. அதனருகே உச்சியில் மற்றொரு மின்சாரவிளக்குப் பிரகாசித்தது இந் நான்காவது திரையின் நடுவே பின்வருமாறு எழுதப்பெற்றிருந்தது.

நீலக்கல் மோதிரம் சரஸ்வதி தேவியின்
திருவிரலைவிட்டு நீங்குதல் தகாது.
அவள் கரத்தில் அம்மோதிரம் உற்றால்
அதைப் பெற்றார் துன்பம் ஒழியும்.

இதைப்படித்துணர்ந்ததும், தேவர், உணர்வொழிந்து மூர்ச்சையாகிக் கீழ் விழுந்துவிட்டார்!

சுமார் ஐந்து நிமிஷம் சென்றது. யாரோ வீணை மீட்டுவதுபோல, ஓர் இனிய ஒலி தேவர் காதிற்கேட்டது. கனவு கண்டு கண்விழிப்பவர்போற் கண்விழித்தார். வீணையின் ஒலி கேட்கப்படவில்லை. தாம் யரோ ஒருவர் காலடியிற் கிடப்பதுபோல் தேவருக்குத் தோற்றியது; நிமிர்ந்து பார்த்தார். அதிசயம்! அதிசயம்! சரஸ்வதிதேவி வீணை தாங்கித் தம் எதிரே வீற்றிருக்கக்கண்டார்! எழ முயன்றார். உள்ளச்சோர்வால் எழுவதும் வருத்தமாயிருந்தது. என் செய்வார், பாவம்! மெல்லத் தலைதூக்கி உட்கார்ந்தார். முன் தாம் கண்ட திரை மற்ற மூன்று திரைகளைப் போலவே திரைந்து ஒரு புறத்து ஒதுங்கியிருந்தது. அதற்குச் சிறிது தூரத்தே, நாராயணசெட்டியார் வீட்டிலிருந்த சரஸ்வதிப் பிரதிமையைப் போலவே, சரஸ்வதி தேவியின் உருவம் ஒன்று ஒரு பீடத்தில் அமர்ந்திருந்தது. அதற்கு

மேலே உச்சியில் மின்சாரச் சரவிளக்கு ஒன்று பிரகாசித்துக்கொண்டிருந்தது.

இச் சரஸ்வதி யுருவத்திற்கும், நாராயண செட்டியார் வீட்டில் கொலுவைத்திருந்த சரஸ்வதி உருவத்திற்கும் சிறிதும் வேறுபாடு காணப்படவில்லை. இரண்டும் தற்சொரூபமாயிருந்தன. இரண்டும் ஒரே அளவுடையனவா யிருந்தன. இரண்டும் ஒரே வகையாய் அமர்ந்திருந்தன. இரண்டும் ஒரே வகையான ஆபரணங்கள் அணிந்திருந்தன. ஆனால் ஒரு வேற்றுமை—ஒரே ஒரு வேற்றுமை—காணப்பட்டது. அஃதாவது: செட்டியார் வீட்டிலிருந்த சரஸ்வதியின் வலக்கரத்தில் திகழ்ந்த நீலக்கல் மோதிரம் இச்சரஸ்வதியினிடம் இல்லை! இதை நல்லதம்பித் தேவரும் கவனித்தார். 'அந்தநீலக்கல் மோதிரத்தால் அல்லவா நாம் இப்பொழுது அவஸ்தைப் படுகிறோம்' என்று கருதினர். 'அவள் கரத்தில் அம்மோதிரம் உற்றால், அதைப் பெற்றார் துன்பம் ஒழியும்' என்று திரையில் எழுதியிருந்ததையும் நினைவு கூர்ந்தார். உடனே எழுந்து தம் கையில் அணிந்திருந்த நீலக்கல் மோதிரத்தைக் கழற்றிச் சரஸ்வதியின் வலக்கர விரலில் அணியச் சென்றார். உருவத்தை நெருங்கவும், அது வரையில் இமையாதிருந்த அவ்வுருவத்தின் கண்கள் இமைத்தன! மோதிரத்தை அணிய நீட்டிய தேவர்கை நடுங்கிற்று! வீட்டு வாயிலருகே மோட்டார் வண்டி வரும் சத்தம் கேட்டது. தேவர் முகம் தெளிவுற்றது. அவர் நீட்டிய கரத்தைப் பின் வாங்க எத்தனித்தார். அக்கணமே அசைவற்றிருந்த உருவம் அசைவுற்று, வலக்கரத்தைநீட்டித் தேவர்கையிலிருந்த மோதிரத்தைப் பறித்துக்கொண்டது!! உடனே அங்குப் பிரகாசித்த விளக்குகள் யாவும் அணைந்து போயின!

———

# ஏழாம் அத்தியாயம்.

## கோபாலர் யோசனை.

கருணாகரர் வீட்டு வாயலில் மோட்டார்வண்டி வந்து நின்றது அதிலிருந்து கோபாலர் கீழே குதித்து வண்டிக் காரனை நோக்கி, "கைவிளக்கை எடுத்துக் கொண்டுவா" என்று கூறிவிட்டு வீட்டினுள் விரைந்து சென்றார். நடைக் கதவு சார்த்தப்பெற்றிருந்ததால், பித்தளைப்பிடியை திருகப் பிடித்தார். கையில் சுறீரென்றது. உடனே அவர்கையை உதறிவிட்டுத் தம் உடம்பிற் போர்த்திருந்த கம்பளிப் போர் வையால் கையை மூடிக்கொண்டு கதவின் பிடியைத் தொட் டார். இச்சமயம் முன் உண்டான வருத்தம் உண்டாக வில்லை. பிடியைப் பிடித்துக் திருகிக் கதவைத் திறந்தார். வீடு முற்றும் இருளுற்றிருந்தது. கோபாலர் வண்டிக்கா ரன் கொண்டுவந்த விவக்கைத் தாம் வாங்கிக் கொண்டு உள் ளே நுழைந்தார்.

விளக்கு வெளிச்சத்தில் கோபாலரைக்கண்ட நல்ல தம்பித்தேவர் ஓடிவந்து அவரைக் கட்டிக் கொண்டார். தேவர் உடல் நடுங்கியது; உள்ளம் துடித்தது; கோபாலர் தேவரை நோக்கி, 'அஞ்சவேண்டாம்' என்று தைரியங் கூறித் தமது உடம்பில் அணைத்தவண்ணம் அவரை மெல்ல நடத்திக்கொண்டு போயக் கூடத்தில் உட்காரவைத்துத் தாமும அவர் அருகே உட்கார்ந்தார்

தேவர் அச்சம் நீங்கச் சிறிது தைரியங்கொண்டார்.

கோபாலர் அவரை நோக்கி, "என்ன நடந்தது ? தாங்கள் இங்கு வரவேண்டிய காரணம் என்ன?" என்று வினவினர்.

தேவர், நாராயண செட்டியார் வீட்டிலிருந்து புறப் பட்டபோது தமக்குக் கிடைத்த கடிதத்தைத் தம் சட் டைப் பையினின்றும் எடுத்துக் கோபாலரிடம் கொடுத்தார். கோபாலர் அதை வாங்கிப் பார்த்துவிட்டு "ஆ, இதைநம்பி யாமோசம் போனீர்கள் ! இது என்னுடைய கையெழுத் தல்லவே ! இதற்குமுன் தாங்கள் என் கையெழுத்தைப் பார்த்ததில்லையா ?" என்றார்.

"இல்லை" என்றார் தேவர்.

"நல்லது, நடந்தது நடந்துவிட்டது. இனித் தாங் கள் இங்கு வந்த பிறகு நடந்ததென்ன ? அதை விவரமாய்க் கூறுங்கள்" என்று கோபாலர் கேட்க, தேவர் தாம் கருணா கரர் வீட்டுள் நுழைந்தது முதல் கோபாலர் வந்த வரையில், கண்ட காட்சிகளையும் நிகழ்ந்த நிகழ்ச்சிகளையும் ஒன்று விடாது கூறினர்.

கோபாலர் அவைகளை யெல்லாம் கவனமாய்க் கேட்டி ருந்து பிறகு தேவரை நோக்கி, "தாங்கள் பார்த்த திரை களையும், சரஸ்வதி உருவத்தையும் காட்டுங்கள் பார்க்க லாம்" என்று சொல்லி எழுந்தார். தேவரும் எழுந்து தாம் பார்த்த திரைகளை அவர்க்குக் காட்டச் சென்றார். ஆனல், முன் தாம் பார்த்த திரைகளில் ஒன்றேனும் அவர் கண் ணுக்கு அகப்படவில்லை. தேவர் அதிசயமுற்றார். "இதென் ன மாயம் ! சற்று முன்—நீங்கள் மோட்டார் வண்டியில் இங்குவந்து இறங்கியபொழுது—இருந்த திரைகளெல்லாம் இப்பொழுது காணப்பட வில்லையே. திரைகள் யாவும் சுருங்கி ஒரு புறமாய் ஒதுங்கி யிருந்தனவே ! அவை இப்

பொழுது எங்கே போயின! இது பேரதிசயமாக வன்றோ இருக்கிறது!" என்றார்.

"சரி, திரைகள் போகட்டும். தாங்கள் பார்த்த சரஸ்வதி உருவம் எங்கே? அல்லது அது காணப்பட்ட இடமெங்கே!" என்று கேட்டார் கோபாலர்.

நல்லதம்பித் தேவர் கோபாலரை அழைத்துக்கொண்டு தாம் கண்ட சரஸ்வதி உருவம் இருந்த இடத்திற்குச் சென்றார். அவ்வுருவம் அங்கில்லை! ஆயினும் உருவம் அமர்ந்திருந்த பீடம்மட்டும் இருந்தது. தேவர் அதைக் கோபாலர்க்குக்காட்டி "இதோ, இங்குதான் நான் சரஸ்வதி யுருவத்தைக் கண்டேன். இந்தப் பீடம் அதன் பீடமாய்த்தானிருக்க வேண்டும்" என்றார்.

கோபாலர் அப்பீடத்தை உற்று நோக்கினர். அதன் மீது சுண்ணத்தினல் ஏதோ எழுதியிருக்கக்கண்டு அதை மீட்டும் உற்றுநோக்கி வாசித்தார்:

'அரசகேசரியின் ஆருயிர்க் காதலி'

என்றிருந்தது. கோபாலர் பெருமூச்சுவிட்டார்; "எல்லாம் அவன் செயல்கள்தாம்! எனக்கு அப்பொழுதே தெரியும். அவனுடைய துஷ்டசெயல்களை இனி வளரவிடமாட்டேன். அடா, துஷ்டா! இன்னும் ஒரு வாரத்திற்குள் உன் கொடுங்கைகளைச் சேர்த்துக் கடுவிலங்கு பூட்ட என்னல் ஏலாவிட்டால், இந்தப் போலீஸ் உத்தியோகம் எனக்கு வேண்டாம்" என்று தமக்குத்தாமே கூறிக்கொண்டு பிறகு தேவரை நோக்கி "என்னேடு வருகிறீர்களா, வீடு முழுவதும் ஒருமுறை பார்த்துவிட்டு வந்து விடுவோம்?" என்று கேட்டார்.

தேவர் அதற்குடன்பட்டார். இருவருமாக வீடு முற்

றும் துருவித்துருவித் தேடினார்கள். ஒருவரும்—ஒன்றும்—அகப்படவில்லை. பிறகு கோபாலர் தேவரை நோக்கி, "சரி, நேரமாகிறது. வாருங்கள் வீட்டுக்குப் போகலாம். மோதிரம் போனதைக் குறித்து வருந்தவேண்டாம். இன்றைய எட்டாநாள் நான் அதைத் தங்கள் கையிற் சேர்க்கிறேன்" என்றுகூறி அவரை அழைத்துக்கொண்டு வெளியே போகக்கருதி நடைக்கதவின் பித்தளைப்பிடியை முன்போலவே கம்பளியாற் பிடித்துத் திறந்து, முன்னதாகத் தேவரைச் செல்லச்செய்து பிறகு தாமும் சென்றார்.

மோட்டார் வண்டிக்காரன் வண்டியைச் செலுத்தற்குச் சித்தமாக வைத்துக்கொண்டிருந்தான். கோபாலரும் நல்லதம்பித்தேவரும் அதில் ஏறினார்கள். உடனே வண்டி புறப்பட்டுச் சென்று தேவர் பங்களாவாயிலில் நின்றது. தேவர் வண்டியைவிட்டிறங்கி, வண்டிக்காரனிடம், கோபாலரை அவர் வீட்டிற் கொண்டுபோய் இறக்கிவிட்டு வரும்படிக் கூறி, கோபாலரை நோக்கி, "நல்லது, நீங்கள் போய் வருகிறீர்களா?" என்றார்.

"ஆம், போய் வருகிறேன்" என்றார் கோபாலர்.

வண்டி புறப்பட்டுவிட்டது.

*     *     *

மறுநாள் காலை சுமார் எட்டுமணியிருக்கும். நல்லதம்பித்தேவர் மாளிகையில் நல்லதம்பித் தேவரும் கோபாலரும் எதிர்முகமாய் இரு நாற்காலிகளில் அமர்ந்து உரையாடிக் கொண்டிருந்தனர்.

"கருணாகரர் மனைவியார் வீட்டில் இல்லா காரணமென்ன?" என்றார் தேவர்.

"அவ்வம்மை இப்பொழுது அங்கில்லை. வேறோர் சிறு வீட்டில் குடியிருக்கிறார்கள். தம் கணவர் இறந்த பிறகு தம் ஒருவர்க்குமட்டும் அவ்வளவு பெரிய வீடு வேண்டுவதில்லை யென்று அதை வாடகைக்கு விடுவதாகக்கூறி இரண்டு நாட்களுக்கு முன்தான் அதைவிட்டுச் சென்றார்கள்" என்றார் கோபாலர்.

"அப்படியா? அது தெரியாமற் போயல்லவா அவதிப் பட்டேன். அதிருக்கட்டும், நீங்கள் நடைக்கதவை எப்படித் திறந்துகொண்டு உள் வந்தீர்கள்? பித்தளைப் பிடியைத் தொட்டால் உயிர் போய்விடும் போலிருந்ததே?"

"அந்தப் பித்தளைப்பிடிக்கெல்லாம் அஞ்சினால் காரியமாகுமா? பித்தளைப்பிடியில் மின்சாரம் (Electricity) புகட்டப்பெற்றிருந்தது. அதனால்தான் அதைத் தொட்டதும் நரம்புகள் நொந்தன. பித்தளையைத் தொட்டால் தானே மின்சாரம் நமது கையிலேறும்? ஆதலால், அதைத்தொடாமலே அதைப் பிடித்துத் திருகினேன்."

"அதெப்படி!"

"என் கையில் கம்பளியைச் சுற்றிக்கொண்டேன். கம்பளி, மின்சாரப்பகை (Non-Conductor of Electricity) என்பது தங்களுக்குத் தெரியாதா?"

"ஓகோ! இந்த யோசனை எனக்கு முன்னமேயே தோன்றாமற் போய்விட்டதே! அது கிடக்கட்டும். அந்தத் திரைகள் எப்படித் தோன்றின, எப்படி மறைந்தன? சரஸ்வதியுருவம் எப்படி வந்தது, எப்படிப் போயிற்று? இவை ஒன்றும் விளங்கவில்லையே!"

"சரஸ்வதி உருவம் பொய்யுருவமல்ல, மெய் சரஸ்வதியுமல்ல. சரஸ்வதி வேடந்தரித்த ஒரு மானுடப்பெண். அவ்வாறு மானுடப்பெண்ணா யிருந்தமையால் தான் திரை

கள் தாமே தோன்றவும் மறையவும் வல்லவாயின. தாங்கள் 'கோபாலர் இருக்கிறாரா' என்று கேட்டதற்கு யாரோ உள்ளிருந்து விடையளித்ததாகக் கூறினீர்களே, அப்படி விடையளித்தது அந்த மானிடப் பெண்ணே. தாங்கள் பித்தளைப்பிடியைத் திருகிக் கதவைத் திறந்துகொண்டு உட் சென்ற பிறகு அக்கதவு வில்லமைத்த கீலுடையதாதலால் தானே மூடிக்கொண்டது. அது ஓர் ஆச்சரியமல்ல. தங்கள் வீட்டிலும் அவ்விதமான கதவுகள் இருக்கின்றன வல்லவா? தாங்கள் உள்ளே செல்லும்போது பித்தளைப்பிடியில் மின்சாரம் புகட்டப்பெறவில்லை. பிறகே புகட்டப் பெற்றது. அதைப் புகட்டுவதிலும் அபூர்வமொன்றுமில்லை. சரஸ்வதி யுருவங்கொண்ட அம்மானுடப் பெண்வீற்றிருந்த பீடத்திற் கருகே உள்ள ஓர் ஆணியைத் திருப்புவதால், நடைக்கதவின் பித்தளைப்பிடியில் மின்சாரம் புகட்ட ஏற்ற மார்க்கம் முன்னமேயே செய்து வைத்திருக்கிறது. திரைகள் தோன்றி மறைந்ததும் அதிசயமல்ல, அந்தப் பெண் தான் வீற்றிருந்த இடத்திலிருந்தே, சூழ்ச்சியோடு கட்டப் பெற்ற சில கயிறுகளை இயக்கித் திரைகளைத் தன் மனம் போல இயங்கச்செய்தாள். திரைகளுக்கு மேலே தோற்றிய விளக்குகள் மின்சார விளக்குகளானபடியால் அவைகளை அவள் இருந்த விடத்திலிருந்தே பொருத்துவதும் அணைப்பதும் ஒரு பெரிய காரியமல்ல."

"தாங்கள் சொல்வனவெல்லாம் யுக்திக்குப் பொருந்துவனவாகவே யிருக்கின்றன. சரஸ்வதியுருவம், ஒரு மானுடப்பெண் என்ற முடிவை வைத்துக்கொண்டு பார்த்தால் யாவும் தெளிவாகத் தோன்றுகின்றன, ஆயினும் ஒரு விஷயம் மட்டும் புத்திக்கு எட்டாமலிருக்கிறது....."

"அதாவது, அந்தப்பெண் எப்படி, எங்கே போனாள் என்பது அல்லவா?"

"ஆம்."

"ஆம். அதுதான் எனக்கும் நன்றாக விளங்கவில்லை. அவள் அவ்வீட்டைவிட்டுப் போகவில்லையென்பது மட்டும் நிச்சயம். ஆனால் இரவு நாம் இருவரும் வீடு முழுவதும் தேடிப்பார்த்தோம்; அகப்படவில்லை. இன்று காலை நான் மட்டும் அங்கேபோய் நாம்பார்க்கத் தவறிய மறைவிடம் ஏதேனும் எங்கேனும் இருக்கிறதா என்று மிகவும் கவனமாய்ப் பார்த்தேன். ஒன்றுமில்லை. பிறர் கண்ணுக்குப் புலப்படா வகையில் அந்தரங்க அறை ஏதேனும் இருக்கக் கூடுமோ என்றும் கவனித்தேன். ஒன்றும் அகப்படவில்லை. அவ்வீட்டிற் குரியவராய் நெடுநாளாய் அதில் வசித்து வந்த கருணாகரர் மனைவியாரையும் அதைப்பற்றி விசாரித்துப் பார்த்தேன். அவர் அவ்விதமான அறை எதுவும் அங்கிருப்பதாகத் தாம் கேட்டதுமில்லை, கண்டதுமில்லை என்று கூறிவிட்டனர். ஆனால் அந்தப் பெண் அவ்வீட்டில்தானிருக்கிறாள் என்பது இன்னமும் எனது பூரணநம்பிக்கை."

"அது எவ்வாறாவதிருக்கட்டும். மோதிரத்தை என்னிடமிருந்து பறிக்க விரும்பியவர்கள், நான் அவ்வீட்டில் தனியாக அகப்பட்டுக்கொண்டவுடன் பலவந்தமாய் அதை என்னிடமிருந்து பறித்துக் கொள்ளலாமே? அவ்வாறு செய்தால் காரியம் எளிதாகவும் விரைவாகவும் முடிந்திருக்குமே? அதைவிட்டு இந்தத் திரைகள் ஏன்? சரஸ்வதி உருவம் ஏன்?"

"தாங்கள் கூறுவது நியாயமே. இந்த ஆடம்பரங்களெல்லாம் முற்றும் அநாவசியமானவையே. சாதாரண

கள்வர்கள் இவ்வாறு செய்யார்கள். ஆதலால் இதற்கு மூலகாரணமான கள்வன், ஒரு நூதனக் கள்வன். அவன் இன்னானென்பதை நானறிவேன். அவன் கொட்டத்தை அடக்குவதற்கே நான் போலீஸ் உத்தியோகம் வகித்திருக்கிறேன். அவன் காதலியே சரஸ்வதி வேடம்பூண்டு அங்கமர்ந்திருந்தவள். அவளைப் பிடித்துவிட்டால் அவன் தானே வந்து சிக்கிக்கொள்வான். அவனுக்கு உயிர் நிலை எப்பொழுதும் ஒரு மங்கையிடத்தில்தான் நிற்கும். அந்த மங்கையைப் பிடிப்பது ஒரு பெரிய காரியமன்று. அவன் யார் தெரியுமோ?"

"அரசகேசரியோ?"

"ஆம்."

"நல்லது, அந்த மங்கையைக் கண்டு பிடிப்பதெப்படி?"

அதைப்பற்றிதான் இனி முயலவேண்டியது. இருக்கட்டும். நாம், செட்டியார் வீட்டில் பார்த்தோமே, சரஸ்வதிப் பிரதிமை, அதற்கும் நேற்றிரவு தாங்கள் கருணாகரர் வீட்டில்கண்ட உருவத்திற்கும் ஏதேனும் வேறுபாடு காணப்பட்டதா?"

"சிறிதும் இல்லை. அதுதான் எனக்கு ஆச்சரியமாயிருக்கிறது."

"நல்லது. அது ஆச்சரியமல்ல. செட்டியார் வீட்டுச் சரஸ்வதிப் பிரதிமையை வகுத்த சிற்பி, அந்த மங்கையை எப்பொழுதாவது நேரில் பார்த்திருப்பான். பார்த்த மெய்யுருவப்படியே அப்பொய்யுருவம் செய்திருப்பான். அது எவ்வாறாயினும் அந்தச் சிற்பியைக்கண்டு பிடித்தால், சில

விஷயங்கள் வெளியாகும். ஆதலால், அதற்கான முயற்சிகளைச் செய்யவேண்டும். தாங்கள் ஒன்று செய்வீர்களா ?"

"என்ன அது ?"

"நாராயண செட்டியாரிடமிருந்து அந்தச் சரஸ்வதிப் பிரதிமையை, ஏதாவது ஒரு காரணங்கூறி ஒரு நாளைக்கு இரவலாக வாங்கி வரவேண்டும்."

"அதற்கென்ன, இன்றயதினமே வாங்கி வருகிறேன். நான் கேட்டால் செட்டியார் மறுத்துவிடுவாரா என்ன ?"

"மறுக்கமாட்டார். அதனுல்தான் தங்களைக் கேட்கச் சொல்லுகிறேன். தாங்கள் கேட்பதில் ஒரு விஷயம் ஞாபகமிருக்கட்டும். நம்முடைய உண்மைக் கருத்து அவருக்குத் தெரியக்கூடாது. மோதிரம் பறிபோன விஷயத்தைப்பற்றியும் அவர்க்குக் கூறவேண்டாம்."

"அப்படியே."

"மற்றொன்று. மோதிரம் பறிபோன விஷயத்தைப் பற்றி அவர்க்கு ஏதேனும் தெரிந்திருக்கக்கூடுமா என்று அறிந்துகொள்ள முயலவும்."

"நல்லது." :

"தாங்கள் சரஸ்வதி வேடத்தோடுகண்ட மங்கை யார் தெரியுமோ ?"

"அதை அறிந்துகொள்ளத்தானே நாம் இனி முயல வேண்டுவது ?"

"ஆம். ஆனல் அவளை நான் முற்றும் அறிந்துகொள்வதற்கு முன்னமேயே, அவளுக்கு ஒரு பெயர் கொடுத்திருக்கிறேன்."

"அப்பெயர் ?"

"மதிமுகி. வாசுதேவர் மகளைக் கொண்டு போனவள் அவளே; அரசகேசரி வாசுதேவர்க் களித்த வாக்கின்படி அவர் மகளை அவரிடம் கொண்டுவந்து சேர்த்ததும் அவளே. மங்கையர்க்கரசியாரிடம் சமையல் வேலைக்சமர்ந்த செல்வம் என்பவளும் அவளே. மங்கையர்க்கரசியார் கணவர் கருணா கரரைக் கொன்றவளும் அவளே, மோதிரம் ஏலங்கூறப் பெற்றபொழுது தங்கள் புத்தியை மருட்டும் வகையில் எழுதிய கடிதத்தை வாயிற் காப்போனிடத்திற் கொடுத்துச் சென்றவளும், சரஸ்வதி வடிவாயிருந்து தங்கள் மோதிரத்தைப் பறித்தவளும் அவளே அரசகேசரிக்கு உயிர் நிலையாயிருப்பவளும் அவளே!"

"ஆ! என்ன துணிவுள்ள ஸ்திரீ!" என்றார் தேவர்.

துணிவென்ன? அரசகேசரியின் பலத்தால்—அவன் மீதுகொண்ட குருட்டுக்காதலால்—வந்த துணிவு. வஞ்சமறியா வனிதயரைப் பஞ்சமா பாதகமும் செய்யச் செய்பவன் அவன். அவன் ஒழிந்தால் அறியாப்பெண்கள் இவ்வாறு அடாதசெயல்களுக்கு முன்வரும் கொடுமை மறைந்துவிடும். அவனைத் தொலைக்கவே நான் கங்கணங் கட்டியுள்ளேன். ஆனால் அவனைத் தொலைப்பதற்கு அவளைப் பற்ற வேண்டும்; பார்த்துக் கொள்கிறேன், எனக்குச் செலவு கொடுங்கள்" என்று கூறிக் கோபாலர் இருக்கைவிட்டெழுந்தார்.

நல்லதம்பித்தேவரும் எழுந்து அவரை வாயில் வரை வழிகூட்டி அனுப்பினார்.

---

# எட்டாம் அத்தியாயம்.

## பழைய கோபாலர் படவர்த்தகரானது.

---

" மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்துஞ்சார்
எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார்—செவ்வி
யருமையும் பாரார் அவமதிப்புங் கொள்ளார்
கருமமே கண்ணாயி னார் "

என்ற ஆன்றோருரைக்கு இலக்கியமாயிருப்பவர் கோபாலர். நல்லதம்பித் தேவரைக்கண்டு பேசிவிட்டுப் போன மறுநாள் இரவு முழுதும் அவருக்குத் தூக்கம் இல்லை. வாசுதேவர் அந்திக்கடையில்வாங்கிய தந்தப்பெட்டி காணாமற்போனது முதல், தேவர் நாராயணசெட்டியாரிடம் வாங்கிய கல்லிழைத்த கணையாழி கருணாகரர் வீட்டில் பறிபோனது வரையில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளையெல்லாம் முறையே சிந்தித்து அவைகளுக்குரிய காரணங்களை அறிதற்கு முயன்று கொண்டிருந்தார்.

" முதலாவது, அரசகேசரி வாசுதேவரிடம் அவர் மகளை ஒப்புவிப்பதற்கு வந்தபோது, அவனும் அவனோடு வந்த ஸ்திரீயும், நாம் அனைவரும் சூழ்ந்திருக்கும் போதே, எவ்வாறாகவோ எல்லோர் கண்ணுக்கும் மறைந்து விட்டனர். இரண்டாவது கருணாகரர் கொலை செய்யப்பட்ட போது, அவர் வேலைக்காரன் வீட்டு வாயிலைவிட்டு அகலாதிருக்க அவன் கண்ணுக்குப் படாமல் யாரோ உள்நுழைந்து அலங்கோலமாய்க் கிடந்த சாமான்களையெல்லாம் சீர்ப்படுத்திவைத்துவிட்டு மறுபடியும் அவன் அறியாமலே-வேறு ஒருவர் கண்ணுக்குக் கூடப் புலப்படாமல்-மறைந்து போயி

ருக்கின்றனர். மூன்றாவது, கருணாகரர் வீட்டிலேயே, நல்ல தம்பி தேவரிடமிருந்து கணையாழியைக் கவர்ந்த சரஸ்வதி யுருவம்—அரசகேசரியின் ஆருயிர்க்காதலி—கடைக்கதவும் தாளிட்டபடியே இருக்க, அதைத் திறந்து சென்றால் அறிந் திருக்கக் கூடிய நல்லதம்பித்தேவர் இருக்கும்பொழுதே, எவ்வாறாகவோ மறைந்து விட்டாள். இந்த மூன்று விஷ யங்களையும் நோக்க அரசகேசரி வாசுதேவரைச் சந்தித்த வீட்டிலும், கருணாகரர் வீட்டிலும் பிறர் கண்ணுக்குப் புலப்படாத அந்தரங்க மார்க்கம் ஏதோ இருக்கவேண்டு மென்பதே யுக்திக்குப் பொருத்தமாக விருக்கிறது. இதில் சிறிதும் சந்தேகித்தற்கு இடமில்லை. ஆனால் இந்த இரண்டு வீடுகளையும் நாம் முற்றும் சோதித்துவிட்டோம். நமது கண்ணுக்கு ஒன்றும் புலப்படவில்லை. அது ஓர் ஆச்சரியமு மல்ல. பிறர் கண்ணுக்குத் தெரியக்கூடாதென்றே அந்த ரங்க மார்க்கங்கள் அமைப்பது வழக்கம். அந்த மார்க்கங் களைப் பிறர் தம் கண் உதவி ஒன்றையே கொண்டு கண்டு பிடித்து விடுவது அருமை அரசகேசரியின் ஆருயிர்க்காதலி—செல்லம்—மதிமுகி—சரஸ்வதி—இன்னாளென்று கண்டு பிடித்துவிட்டால் பிறகு யாவும் சுலபமாய் விளங்கிவிடும். நாராயண செட்டியார் வீட்டில் கொலுவைத்திருந்த சரஸ் வதியுருவமும் கருணாகரர் வீட்டில் சரஸ்வதி வேடத்தோ டமர்ந்திருந்த அரசகேசரியின் காதலியும் உருவினும் வடி வினும் சிறிது வேற்றுமையின்றி இருந்ததாக நல்லதம்பித் தேவர் கூறுகிறார். ஆகலால் அரசகேசரியின் காதலி—நமது மதிமுகி—செட்டியாருடைய சரஸ்வதிப் பிரதிமை யைப்போலவே இருக்கவேண்டும்.

"நாம் முன்னமேயே கொண்டிருக்கும் மற்றொரு கருத்து. செட்டியாருக்குச் சரஸ்வதிப் பிரதிமை யமைத்துக்

கொடுத்த சிற்பி தான்கண்ட ஒரு மெய்யுருவத்தை மனத்தில் வைத்துக்கொண்டு தான் அந்தச் சிலையை அமைத்திருக்க வேண்டுமென்பது. ஏனெனில் ஓவியன், சிற்பி, கவி ஆகிய இவர்கள் பெரும்பாலும் தாம் நேரிற் கண்டவைகளையே தம்மிடத்தே இயற்கையாகவே அரும்பி, பயிற்சியால் மலர்ந்த நுண்ணறிவுகொண்டு முறையே வனப்புற வரைவதும், அழகுற அமைப்பதும்; பொலிவுறப் பாடுவதும் இயல்பு. ஆதலால் சரஸ்வதிப் பிரதிமையை அமைத்த சிற்பி, அதை அமைப்பதன் முன்னம் அதைப் போன்ற அல்லது அதற்குப் பெரிதும் ஒற்றுமையுள்ள, ஒரு மெய்யுருவைக் கண்டிருக்கவேண்டும். அம்மெய்யுருவிற்கு இல்லாத சில நலங்களை ஒருகால் அவன் தனது மனோபாவக உணர்ச்சியால் (Imagination) இப்பொய்யுருவிற் தக் கூட்டியிருக்கலாம். அவ்வளவே, ஆகலால் அந்தச் சரஸ்வதிசிலையை அமைத்த சிற்பியைக்கண்டால் நல்லதென்று கருதினேன். செட்டியாரை அதைப்பற்றிக் கேட்டால் சந்தேகத்திற்கு இடமாகும். ஆனதுபற்றியே தேவரைக்கொண்டு, அப் பிரதிமையையே கொண்டுவரச் செய்தேன். இன்று சாயுங்காலம் அதைப் பரிசோதித்தபோது, அதன் உள்ளங்காலில் 'முத்தனாசாரி' என்று செதுக்கப் பட்டிருந்ததைக் கண்டோமாயினும், 'முத்தனாசாரி' என்பவனை எங்கு கண்டுதேடுவது? அப்பெயருள்ள எவரையும் நமக்குத் தெரியாதே? பங்காருவிடம் சொல்லிக் கண்டுபிடிக்கச் சொன்னேனம். அவனால் முடிகிறதோ இல்லையோ? அவன் கண்டுபிடித்து விட்டதாகவே வைத்துக் கொள்வோம். பிறகு நாமே அந்தச் சிற்பியை நெருங்கி நமது காரியத்தை முடித்துக்கொள்வது எப்படி?'

இவ்வாறு கோபாலர் சிந்தித்துக் கொண்டிருக்கும் போது படுக்கை யறையிலிருந்த கடியாரம் ஒன்று பன்னி ரண்டு மணியடித்தது.

"ஆ! இந்நேரம் வரைக்குமா கண்விழித்திருந்து விட் டேன். சரி, மேல் செய்யவேண்டிய காரியங்களைப் பொ ழுது விடிந்து யோசித்துக் கொள்வோம்" என்று தமக்குத் தாமே கூறிக்கொண்டு கோபாலர் கண்களைமூடினர். சிறிது நேரத்திற்கெல்லாம் அயர்ந்த நித்திரையில் ஆழ்ந்துவிட்டார்

* * * *

உலக முதற்காரணனான ஒரு முழுமுதல்வனை அணுக வொட்டாது ஆன்மாவினைச் சூழ்ந்திருக்கும் அஞ்ஞான இருள் அகல, ஞான ஒளி பரப்பி எழுந்த ஞானசாரியர் போல, உலகைக் கவிந்திருந்த காரிருள் நீங்கச் செங்கதிர்ச் செல்வன் வெண்ணுரை கொழிக்கும் தெண்கடல் கிழித் தெழுந்தான். கோபாலரும் படுக்கையை விட்டெழுந்தார்.

மணி ஒன்பதாயிற்று. பங்காரு கோபாலர் வீட்டிற் குள் சென்றார். அவரைக்கண்டதும் கோபாலர் "என்ன, பங்காரு! போனகாரியம் ஜயந்தானா!" என்று வினவினர்.

"ஜயந்தான் என்றார்" பங்காரு.

"ஆனால் சரி. உட்காரும். சங்கதியைச் சொல்லும்,

"திருவல்லிக்கேணியில், காத்தா பிள்ளைசந்தில் உள்ள ஒரு சிறு வீட்டில் முத்தனசாரி என்றொரு தச்சன் இருக்கி றான். அவன் மிகக் கைதேர்ந்த வேலைக்கார னென்றே எல்லோரும் சொல்லுகிறார்கள். கோயில்கள் பலவற்றிற் குப் பொம்மைகள் செய்து கொடுப்பது அவன்றானும். அவ னுக்கு நல்ல வரும்படி வருகிறதாம். ஆயினும் மிகவும்

ஏழ்மையான நிலையில் இருக்கிறான். அதற்குக் காரணம் என்னவென்று கேட்டபொழுது அவன் தானே பல உரு வங்களை அமைக்கவும் சித்திரிக்கவும் வல்லவனாயிருந்த போதிலும், பிறர் எவர் என்ன படங்கள் எழுதியிருந்த போதிலும், அவை என்ன விலையாயிருந்தபோதிலும், வாங்கிவைத்துக் கொள்கிறானாம்—''

"சரி, அவ்வளவு போதும். நீ நாளைய மத்தியானம் பன்னிரண்டு மணிக்கு இங்கு வா. நாம் இருவருமாக அங்குப் போகவேண்டியிருக்கும்" என்று சொல்லி பங்காருவை அனுப்பிவிட்டு நல்லதம்பித்தேவர் வீட்டை நோக்கிச் சென்றார் கோபாலர்.

* * * *

தேவர், கோபாலரைக் கண்டதும் முகமலர்ச்சியோடு 'வாருங்கள், வாருங்கள்' என்று கூறி அழைத்து ஓர் ஆசனத்தில் இருக்கச் செய்து, "உங்களுடைய விசாரணை எம்மட்டிலிருக்கிறது?" என்று வினவித் தொடர்ந்து பரிகாசமாக "எட்டுநாள் கெடு குறித்திருக்கிறீர்கள். ஞாபகமிருக்கட்டும்! இன்றையதினம் நான்காவது நாள்'' என்றார்.

"இன்னும் நான்கு நாட்கள் இருக்கின்றன அல்லவா? இதற்குள் எவ்வளவோ காரியம் முடித்துவிடலாம். அது கிடக்கட்டும். தாங்கள் எனக்கோர் உபகாரம்செய்யவேண்டும்."

"என்ன?"

"நாளைக்காலை எட்டு மணிக்குள்ளாக, இந்தச் சரஸ்வதி உருவத்தைப்போலவே—கொஞ்சமும் வித்தியாசமின்றி—நல்ல சித்திரக்காரன் ஒருவனைக்கொண்டு, ஒரு படம் எழுதித் தரவேண்டும்.

தேவர் சற்று யோசித்தார்.

"அவ்வளவு சீக்கிரத்தில் முடியுமா?"

"முடியவேண்டுமே. தாங்கள் மனம் வைத்தாற் கூடவா முடியாது?"

"சரி" என்று கூறிச் சற்றுத் தயங்கிப் பின் திடத்துடன் "சரி, எப்படியாவது முடித்துவிடுகிறேன். பணத்தை உருட்டி விட்டால் எல்லாம் நடக்கிறது" என்றார் தேவர்.

"உண்மை. இனி எனக்கு உத்தரவு கொடுக்கிறீர்களா?"

"நல்லது போய் வாருங்கள். நாளைக்காலையில் படத்துக்கு நீர் இங்கு வரவேண்டியதில்லை. நான் யாரிடமாவது கொடுத்து உங்கள் வீட்டிலேயே கொண்டுவந்து கொடுக்கச் செய்கிறேன்."

"சரி; போய்வருகிறேன்."

"செய்யுங்கள்."

* * * * *

மறுநாள் காலை சுமார் ஒன்பது மணியிருக்கும். நல்லதம்பித்தேவருடைய வேலைக்காரன் ஒருவன் கோபாலரிடம் காகிதத்தால் மூடப்பெற்ற ஏதோ ஒரு பொருளைக்கொண்டு வந்து கொடுத்தான். கோபாலர் அதை வாங்கிப் பிரித்துப் பார்த்தார். அதனுள் இருந்த பொருள் எதுவாயிருக்கும்? சரஸ்வதி உருவப் படமே. அதைக்கொண்டுவந்த வேலைக்காரனை அனுப்பிவிட்டுக் கோபாலர் படத்தை உற்றுற்று நோக்கினர். நோக்க நோக்க அவர் முகம் மலர்ந்தது. அதைச் சித்திரித்த ஓவியன் மிகவும் சாமார்த்தியசாலி என்பதிற் சிறிதும் சந்தேகமில்லை. பிரதிமைக்கும் சித்திரத்திற்கும் சற்றும் வேறுபாடில்லை.

கோபாலர் படத்தை நோக்கி மனங்களித்துக்கொண்டிருக்கும்போது பங்காருவும் வந்து சேர்ந்தார்.

"ஏது இவ்வளவு சீக்கிரம் வந்துவிட்டது?'' என்றார் கோபாலர்.

"குறித்த நேரத்திற்கு இரண்டுமணி முன்னதாகவே சித்தமாயிருப்பது நல்லதாயிற்றே என்று கருதிவந்தேன்'' என்றார் பங்காரு.

"ஆனால்சரி, சற்றிரும். இதோ வந்துவிட்டேன்'' என்று கூறிக் கோபாலர் வீட்டினுள் சென்றார், சற்று நேரத்திற்கெல்லாம் ஒருவர் வர்த்தகன்போல் வேடம் பூண்டு வந்தார், அவர் கையில் பெரிய காகிதச்சுருள் ஒன்றிருந்தது.

அவரைப் பார்க்கவும் பங்காருவுக்கு அடக்கமுடியாத சிரிப்பு வந்துவிட்டது. அதைக்கண்ட கோபாலர்: "என்ன ஐயா, சிரிக்கிறீர்? படம் விற்றுப் பிழைக்கிறவனைக் கண்டால் உமக்குச் சிரிப்பாயிருக்கிறது போலிருக்கிறது. உம்மைப் போலப் போலீஸ் உத்தியோகத்தில் நுழைந்து மேலதிகாரிகள் எதிரில் திட்டவும், ஊரார் மறைவில் திட்டவுமாய்ச் சிரிப்பாய்ச் சிரிக்கவேண்டும் போலிருக்கிறது! போதும் அந்தப் பாழும் உத்தியோகத்தைவிட்டு என்னோடு இந்தப் படங்களை எடுத்துவாரும் ஐயா; பிழைத்துப் போகலாம். ஏன் இந்தப் பகல் வேஷமெல்லாம்? இடுப்பில் ஒரு சாயத்துண்டு, தோளில் ஒரு மலையாள முண்டு போதாதா?'' என்று கூறிக்கொண்டே அழுக்குக் கூடையிற் கிடந்த ஒரு சாயவேஷ்டியையும் அழுக்கேறிய சிறு துண்டு ஒன்றையும் எடுத்து அவரிடம் கொடுத்து, "இந்தாரும்; இந்த சாய வேஷ்டியை இடுப்பிற் கட்டிக் கொண்டு, இந்த முண்டைத்

தோளில் போட்டுக்கொள்ளும். அந்தப் பகல்வேஷ உடுப்புகளையெல்லாம்களைந்து ஒருபுறமாய் வைத்துவிடும்" என்றார்.

பங்காரு சிரித்துக்கொண்டே தாம் உடுத்திருந்த உடுப்பைக் களைந்து வைத்து விட்டுக் கோபாலர் கட்டளைப்படி அவர் கொடுத்த சாயவேஷ்டியை இடுப்பில் தரித்துச் சிறு துண்டைத் தோளிற் போட்டுக் கொண்டார். பிறகு கோபாலர் தம் கையில் வைத்திருந்த காகிதச்சுருளை பங்காரு கையில் கொடுத்து "இந்தச் சுருள் என்ன தெரியுமா?" என்றார்.

"தெரியும். படங்கள்" என்றார் பங்காரு.

"ஆம் விற்கக் கொண்டு போகிறோம். யாரிடத்தில் விற்கத் தெரியுமா?"

"தெரியும். முத்தணுசாரியிடத்தில்."

"ஆ அம், விடாதீர். ஆகலால் நீர் இப்போதுபோக வேண்டிய இடம் எது தெரியுமல்லவா?"

"தெரியும். அந்த முத்தணுசாரியிடத்தில் தான்."

ஆ அம்; போம், போவோம்."

இருவரும் வெளியே சென்றனர்.

---

# ஒன்பதாம் அத்தியாயம்.

## லக்ஷ்மீ காந்தர்.

---

"ஐயா!"

"யார் அது?" என்று கேட்டுக் கொண்டு, நரைத்த தலையும், திரைந்த மேனியும், இளைத்த உடலும் உடைய ஒரு வயோதிகர் வந்து கதவைத் திறந்தார்.

"படங்கள் வாங்குகிறீர்களா? நல்ல நல்ல படங்கள் கொண்டுவந்திருக்கிறேன். ரிஷபவாகன ரூடராய் ஆர்த்த

நாரீச்வர மூர்த்தமாயுள்ள சிவபெருமான் பட மிருக்கிறது; வெண்ணெய் திருடுங் கண்ணன்பட மிருக்கிறது ; ஐந்தலை நான்முகன் படமிருக்கிறது ; மோஹினி படமிருக்கிறது ; ஷோக் சுந்தர லேடிபட மிருக்கிறது———"

4188.

"இப்படி உள்ளே கொண்டுவாரும் பார்க்கலாம்."

படவர்த்தகர்—கோபாலர்—தம்மோடு படங்களெடுத்துவந்த ஆளை—பங்காருவை—நோக்கி, "இப்படி வா அப்பா. ஐயா உள்ளே கொண்டுவரச் சொல்கிறார்" என்று கூறி உள்ளழைத்துக்கொண்டு சென்றார்.

முத்தனாசாரி—அவர்தாம் வயோதிகர்—ஓர் இருக்கையில் அமர்ந்து படவர்த்தகரை நோக்கி, "எங்கே ஐயா, உட்கார்ந்து உம்முடைய படங்களை எடும் பார்ப்போம்" என்றார்.

கோபாலர் அங்ஙனமே உட்கார்ந்து, பங்காருவிடமிருந்த படச் சுருணை வாங்கி விரித்து ஒவ்வொரு படமாக எடுத்து வயோதிகருக்குக் காட்டினார். வயோதிகர் ஒவ்வொரு படத்தையும் பார்த்து விட்டு ஒவ்வொன்றும் தம்மிடம் இருப்பதாகக் கூறிக் கொடுத்துவிட்டார். கோபாலர் கொண்டு சென்ற படங்களில் ஒன்றொழிய மற்றவை யாவும் காட்டியாயிற்று.

"என்னிடம் உள்ளவை இவ்வளவுதான். ஒவ்வொன்றும் தங்களிடம் உள்ளதாயிருக்கிறது. என்னசெய்கிறது?" என்று கூறிக் கோபாலர் படங்களை யெல்லாம் சேர்த்துச் சுருட்டத் தொடங்கினார்.

தாம் பாராத படம் ஒன்றிருப்பதைக் கவனித்த வயோதிகர், அந்தப் படத்தைச் சுட்டிக் காட்டி, "அதென்ன படம் ஐயா ? அதை நீர் காட்டவில்லையே. எங்கே எடும்

பார்ப்போம். அந்த ஒன்றாவது என்னிடமில்லாத படமாயிருக்கக்கூடாதா ?' என்றார்.

" அந்தப்படம் விற்பதற்கல்லவே'' என்றார் கோபாலர்.

" விற்பதற் கல்லாவிட்டால் வேறெதற்காக ?"

" ஒருவரிடத்திற் கொடுக்கும்படியாக, ஒருவர் கொடுத்தார்.''

" ஆனால் சரி, அதைப் பார்த்து விட்டுத் தருகிறேன்'' என்றும் பார்ப்போம்.

" அதற்கென்ன பாருங்கள்'' என்றுகூறிக் கோபாலர் சரஸ்வதி உருவப்படத்தை எடுத்து முத்தனாசாரி கையில் கொடுத்துவிட்டு, அவர் முகத்தைக் கவனமாய்ப் பார்த்துக் கொண்டிருந்தார்.

படத்தை விரித்துப் பார்த்ததும் வயோதிகர் முகத்தில் ஒருவகை ஆச்சரியக்குறி தோற்றியது. அவர்கண்ணைச் சுருக்கிச் சரஸ்வதியின் முகத்தை உற்று நோக்கினார்; பார்வை மேலேறச் சிறிது நேரம் ஏதோ சிந்தித்தார்; மீட்டும் படத்தை நோக்கினார். பிறகு கோபாலரைப்பார்த்து "இதை யாருக்குக் கொண்டு போகிறீர்?'' என்று கேட்டார்.

" யாரிடமோ கொடுக்கச் சொல்லிச் சொன்னார். அதைத்தான் ஐயா அடியோடு மறந்துவிட்டேன்'' என்று ஏதோ யோசிப்பவர்போல முகக்குறி காட்டிக் கூறினார் கோபாலர்.

" கொடுத்தவர் யார்?''

" அதை எழுதியவரே கொடுத்தார்.''

" அது யார்.''

" சித்திரக்காரனல்லதம்பி என்றொருவர். ஒரு பெண்ணைப் பார்த்து இந்தப் படத்தை அவர் எழுதினாராம்.''

"உயிரோடுள்ள பெண்ணைப் பார்த்தா ?"

"ஆம், அந்தப் பெண்ணின் தகப்பனாருக்காகத் தான் அதை எழுதினாராம். அவரிடந்தான் அதை கொடுக்கும் படிக் கொடுத்தார். அவர் பெயரும் விலாசமும் கூடச் சொன்னார். அது ஞாபகத்திற்கு வரமாட்டேனென்கிறது" என்று கூறித் தலையைச் சொரிந்துகொண்டு யோசித்தார் கோபாலர்

முத்தனாசாரி தம் கையில் வைத்திருந்த படத்தைமீட்டும் உற்று நோக்கித் தமக்குள் "அப்படிதா னிருக்கும்" என்று சொல்லிக் கொண்டார்.

அதைக்கேட்ட கோபாலர் இதுதான் சமயமென்று, "எப்படித்தானிருக்கு மென்கிறீர்கள் ? ஆனால் தாங்கள் அநதப் பெண்ணைப் பாாத்திருப்பீர்கள் போலிருக்கிறது. தயவுசெய்து அப்பெண்ணின் தகப்பனார் யாரென்று சொல் வீர்களானல் நான் அந்தப் படத்தை அவரிடம் கொண்டு போய்க் கொடுத்து விடுவேன்" என்றார்.

"எந்தப் பெண்ணின் தகப்பனார் ?"

"இந்தப் படத்தில் எந்தப் பெண்ணைப்போல எழுதி யிருக்கிறதோ, அந்தப் பெண்ணின் தகப்பனார்."

"தாங்கள் சற்றுமுன் "அந்தப் பெண்ணைப் போலத் தான் இருக்கிறது என்று சொன்னீர்களே ?"

"அப்படியா சொன்னேன் ? இருக்கலாம். நான் அப் படி நினைக்கிறேனே யொழிய எழுதியவர் எந்தப் பெண் ணைப் பார்த்து எழுதினாரோ ? ஆயினும் குற்றமில்லை. நீர் ஒன்று செய்யும்; மைலாப்பூரில் கோவிந்த நாயக்கன் வீதி 26-வது கதவிலக்கமுள்ள வீட்டில் லக்ஷ்மிகாந்தர் என்

ஞெருரு சீமான் இருக்கிறார். அவரைப் போய்ப் பார்த்து 'சரஸ்வதியைப் படத்தில் எழுதித் தரும்படித் தாங்கள் யாருக்காவது கட்டளையிட்டதுண்டா?'' என்று கேளும். அவர் உண்டென்றால் பிறகு இப்படத்தைக் கொடும்'' என்றார் முத்தனுசாரி.

“அதென்ன, சரஸ்வதியைப் படமெழுதுவதென்றால் தெரியவில்லையே? சரஸ்வதிப்படம் என்பதற்குத்தான் அப்படிச் சொல்கிறீர்களோ?''

“இல்லை. அவருக்குச் சரஸ்வதி என்றொரு புத்திரியிருக்கிறாள். அவள் அநேகமாய் இந்தப்படத்திலுள்ள உருவைப்போலத்தான் இருப்பாள் அவளைப் படத்தில் எழுதச் சொல்லியிருக்கலாமென்று அப்படிச் சொன்னேன்.''

“ஓகோ, அப்படியா? எனக்கு அந்தத் தெரு தெரியாது. அது எவ்விடத்தில் தயவுசெய்து சொல்லி விடுங்கள்; புண்ணியமாகும்.''

“வீரராகவ முதலித் தெரு தெரியுமா?''

கோபாலர் சற்று யோசிப்பது போற் பாவனை செய்து “தெரியும்போலிருக்கிறது'' என்றார்.

“அந்தத் தெருவுக்குப் பக்கத்துத் தெரு. வழியில் யாரையாவது விசாரித்தாலும் சொல்கிறார்கள். லட்சுமி காந்தர் வீடெதென்றால் யாவரும் சொல்வார்கள்.''

“அவர் என்ன அவ்வளவு பிரபலமானவரா?''

“பிரபலமானவர்தாம். இப்பொழுது அவ்வளவில்லை. சுமார் இருபது இருபத்தைந்து வருஷங்களுக்கு முன்னே

இவர் தகப்பனார் சங்கர நாராயணர் என்றொருவர் இருந்தார். அவருக்கு மயிலாப்பூர் முழுவதும் அரசுசெல்லும், திரண்ட சொத்திருந்தது. அவருக்கு நாலு பிள்ளைகள். அவர்களுள் இந்த லக்ஷ்மிகாந்த ரென்பவர் தாம் மூத்தவர். இவருக்கு இளையவர் மூவர். அவர்கள் மூவரும் இறந்து போய்விட்டார்கள். அந்தக் காலத்தில் அவர்கள் இருந்த அந்தஸ்தும் 'போக்கும் வரத்தும்' என்னென்கிறது! சங்கர நாராயணர் இந்த நான்கு பிள்ளைகளுக்கும் நான்கு வீடுகள் கட்டிக்கொடுத்து, அவர்களுள் ஜேஷ்ட புத்திரர் வீட்டில் தாமும் வசித்து வந்தார். இவர் நாட்டுப் பெண்கள் நால்வரும் நான்கு ரதிகள் என்று சொல்லும்படியாய் அவ்வளவு அழகாய் இருந்தார்கள். அந்தப்பெண்களை விவாகமாகும் போது ஊரார் பார்த்திருப்பார்களேயொழிய பிறகு பார்த்திருக்க மாட்டார்கள். அவ்வளவு அருமையாய் வீட்டுள்ளேயே இருந்தார்கள். என்ன காலம் பாரும். அந்தப் பெண்களுள் ஒருவர்கூட இப்பொழுதில்லை நால்வரும் ஒருவர்பின் ஒருவராய் இறந்து விட்டார்கள். இவர்களுள் லக்ஷ்மிகாந்தர் மனைவி மகா ரூபவதி. அவளுக்கு ஒரே ஒரு பெண். அந்தப் பெண்தான் சரஸ்வதி என்பவள்."

"ஓகோ அப்படியா? இந்தப் பெண்ணுக்கு விவாகமாய்விட்டதா?" என்று வினவினார் கோபாலர்.

"இல்லை" என்று கூறி முத்தனாசாரி தொடர்ந்து கூறுகின்றார். "விவாகம் இது வரையில் முடிந்திருக்கும்; தக்கவான் எங்கும் கிடைக்கவில்லை. அந்தப்பெண் கல்வியில் சரஸ்வதியென்றே சொல்லலாம். ரூபமும் அப்படி. ஆனால்

வெளியில் எவரும் பார்த்திருக்கமாட்டார்கள். அந்தக் குடும்ப கௌரவம் கெடாமலிருக்க வேண்டு மென்று அப் பெண் வீட்டைவிட்டு வெளிவருவதில்லை.''


"லக்ஷ்மிகாந்தர் ஆஸ்தியெல்லாம் இந்தப் பெண்ணுக் குத்தானே?''

"ஆம், ஆம். ஆனால், இந்தப்பெண் அவ்வளவு அதிர்ஷட முள்ளதல்ல. இதன் தாயார் உயிரோடிருக்கும் பொழுது இருந்த ஆஸ்தியில் பத்தில் ஒரு பங்கு கூட இப் பொழுது இராது. லக்ஷ்மிகாந்தர், தாம் வசிக்கும் வீடொன் றைத்தவிர, தம் சகோதரர்கள் இருந்த மற்ற மூன்று வீடு களையும் விற்றுவிட்டார். வீடாவது வீடு, ஒவ்வொன்றி லும் எவ்வளவு வேலைப்பாடு! சகோதரர்கள் நால்வரும் நாலு வீடுகளில் இருப்பதாகப் பெயரேயொழிய நாலுவீடும் ஒரு வீடுபோல, ஒருவர் வீட்டுக்கொருவர் போகவர அவ்வளவு அற்புதமான ஏற்பாடுகளோ டிருந்தன.''

இங்கே கோபாலருக்குச் சிறிது ஐயம் உண்டாயிற்று. 'நாலு வீடுகளும் ஒரு வீடு' போல இருப்பது எப்படி?— ஒன்றுக்கொன்று அந்தரங்க மார்க்கங்கள் இருந்தாலொழிய.

"நாலு வீடுகளும் சேர்ந்தாற் போலவே இருந்தன வோ?'' என்றார் கோபாலர்.

"இல்லை நாலு வீடுகளும் நாலுதெருவுகளில் இருந் தன. ஆயினும் இவைகளுக்குச் சம்பந்தம் உண்டு'' என்று கூறி முத்தனாசாரி தரையில் காலால் பின் வருமாறு கோடு களிழுத்து விளக்குவாராயினர்.




இந்த கோவிந்த நாயக்கன் தெருவில் உள்ளது தான் லக்ஷ்மிகாந்தர் தற்போதிருக்கும் வீடு. இந்தத் தெருவிற் கடுத்த வீரராகவ முதலித் தெருவில் இரண்டாவது பிள்ளையின் வீடு. இந்த இரண்டு தெருவுகளை அடுத்து வடபுறத்திலும் தென்புறத்திலுமாய்ச் செல்லும் பெரியதெரு, பெருமாள் முதலித் தெரு என்னும் இரண்டு தெருவுகளில் மற்ற இருபிள்ளைகளுக்கும் இரண்டுவீடுகள். இந்த நான்கு வீட்டின் புறக்கடைகள் சந்திக்கு மிடத்தில் ஓர் ஆகன்ற முக்தம் போல் இருக்கும். புறக்கடைச் சுவர்கள் நான்கிலும் நான்குவாயில்கள் வைத்திருந்தபடியால் ஒரு வீட்டிலிருந்து ஒரு வீட்டுக்குப் போகவர எளிதாயிருந்தது.''

" இந்த வாயில்களெல்லாம் இப்பொழுதும் அப்படியே இருக்கின்றனவோ ?"

"இப்பொழுது இருக்கமுடியுமா? அப்பொழுது நாலு வீடுகளும் சகோதரர் வசத்திலிருந்தன. ஆதலால் அவ்வாறு வைத்திருந்தார்கள். இப்பொழுதுதான், அவற்றுள் மூன்று வீடுகளை யாரோ மூன்று வெவ்வேறு பேர்வழி

களுக்கு விற்றுவிட்டேன். ஆதலால் அந்த மூன்று வீடுகளின் புறக்கடைவாயில்களை அடைத்துச் சுவரெழுப்பி யாயிற்று. அதெல்லாம் நான்தான் கொல்லத்துக்காரர்களைக்கொண்டு செய்தேன்.''

"அப்படியா ? அந்தக் குடும்பம் தங்களுக்கு மிகவும் பழக்கம் போலிருக்கிறது."

"ஆம். லக்ஷ்மிகாந்தர் தகப்பனார் நாளிலேயே எனக்குப் பழக்கம். அவர்கள் எந்த வேலைக்கும் என்னைத்தான் கூப்பிடுவார்கள். பாவம் ! லக்ஷ்மிகாந்தர் தம் மனைவியிடத்தில் மிகவும் பற்றுதலாயிருந்தார். இந்தச் சாஸ்வதி என்னும் பெண்ணுக்கு ஐந்து வயது நடக்கும்பொழுது அந்தம்மாள் இறந்துபோய் விட்டாள். அது முதல் லக்ஷ்மிகாந்தர் அவள் மீதே நினைவாய் ஏக்கமுற்று மிகவும் வருந்துகிறார். மனைவி இறந்த இரண்டாவது மாதம் எழுந்து நடமாடக் கூடமுடியாமல் அவ்வளவு மெலிந்துபோய்விட்டார். நான் அதைக்கண்டு, அவர் மனைவியைப்போலவே ஒரு பிரதிமை செய்து அவரிடம் காட்டினேன். அவர் அதைப் பார்த்து மிகவும் சந்தோஷப்பட்டு அதைத் தம் அறையில் வைத்துக்கொண்டார். ஆனால் இப்பொழுதும் அவருக்கு அந்த விசனம் மாறவில்லை. நான் செய்து கொடுத்த பிரதிமைக் கெதிரே ஒரு சாய்மான நாற்காலியில் சாய்ந்துகொண்டு சதா அந்த உருவத்தைப் பார்த்தபடியே இருக்கிறார். பித்துப்பிடித்தவர் போலாய்விட்டார். ஸ்நானம் முதலிய செய்ய, சாப்பிட, அவ்விடத்தை விட்டு வருவதேயன்றி மற்றக்காலங்களில் அதைவிட்டு நீங்குவதில்லை.''

"இவர் இப்படி இருந்தால் குடும்ப காரியங்களையெல்லாம் யார் பார்க்கிறது ?''

"அதற்கு ஒரு காரியஸ்தனைச் சம்பளங் கொடுத்து வைத்திருக்கிறார்."

"அப்படியா? அவர் மகள் சரஸ்வதி யென்றால் சரஸ்வதிபோலவே இருக்கிறாளே!"

"ஆம். நல்ல ரூபவதி. குடும்பவழக்கப்படியே தான் வெளியில் தலைகாட்டுவதில்லை. மிகுந்த அடக்கம். அந்தப் பெண்ணின் பெயர் சரஸ்வதி, என்றிருக்கிறதே, அதற்கேற்க அவளைச் சரஸ்வதி வடிவாகச் செய்ய விரும்பியே, நான் அவளைப்போல், ஆனால் சரஸ்வதி வடிவாய் ஒரு பிரதிமை செய்து அதை லக்ஷ்மி காந்தரிடம் காட்டினேன். அவர் அதைப்பார்த்து மிகவும் பிரியப்பட்டு அது தம்மிடத்திலேயே இருக்கட்டும் என்றார். நல்லதென்று கொடுத்துவிட்டேன். அதை அவர் தமது பத்தினியின் பிரதிமைக்கருகே சிலநாள் வைத்திருந்தார். பிறகு, 'உயிரோடிருக்கும் பெண்ணின் உருவத்தை இறந்தவர் உருவோடு வைப்பது அசுபமாக இருக்கிற' தென யாரோ கூறினார்களென்று அதை எடுத்து எங்கேயோ கண்ணுக்கு மறைவாய் வைத்துவிட்டாராம்."

"உருவப் பிரதிமை இல்லாவிட்டாலும் படமாவது வீட்டிலிருக்கட்டும் என்று கருதித்தான் போலிருக்கிறது, இந்தப் படத்தை எழுதச் சொல்லி யிருக்கிறார்" என்று கூறித் தமது கையிலிருந்த படத்தைப் பார்த்தார் மூத்தாசாரி.

கோபாலர் "இருக்கலாம், தாங்கள் இவ்வளவு தூரம் எனக்கு இந்தக் கதையெல்லாம் விவரமாய்க் கூறியதற்கு மிகவும் வந்தனம். நான் வந்து வெகு நேரமாய்விட்டது. தயவுசெய்து உத்தரவு கொடுக்கவேண்டும்" என்றார்

"ஆம், ஆம்! நேரமாய் விட்டது. புதிதாய் ஏதாவது படங்கள் கிடைத்தால், இங்கே கொண்டுவாரும்" என்று கூறி முத்தனுசாரி தமது கையிலிருந்த படத்தைக் கோபாலரிடம் கொடுத்தார். கோபாலர் அதை வாங்கி மற்றப் படங்களோடு வைத்து சுற்றிக் கட்டிக்கொண்டு சிற்பியின் வீட்டைவிட்டுப் புறப்பட்டு வெளிச்சென்றார். பங்காருவும் உடன் சென்றார்,

சிறிது தூரம் போனபிறகு கோபாலர் பங்காருவை நோக்கி "என்னப்பா, ஒருபடம்கூட விற்கவில்லையே?" என்று கூறிப் புன்னகை செய்தார்.

"அதற்கென்ன ? போதுமான லாபம் கிடைத்து விட்டதல்லவா ?" என்றார் பங்காரு.

"அது மெய்தான். இவ்வளவு எளிதில் காரியம் முடியுமென்று நான் எதிர்பார்க்கவில்லை" என்று சொல்லிக் கொண்டு கோபாலர் விரைந்து நடந்தார்.

அன்றையதினம் சரஸ்வதி பூஜைக்கு ஐந்தாவது நாள்!

---

# பத்தாம் அத்தியாயம்.

## ஜகதீசர்.

---

லக்ஷ்மிகாந்தர் தமது வீட்டுக்கூடத்தில் ஒரு சாய்வான நாற்காலியிற் சாய்ந்துகொண்டிருந்தார். அப்பொழுது வேலைக்காரன் ஒருவன் அவரிடம் வந்து "யாரோ ஒருவர் தங்களைப் பார்க்க வேண்டுமாம். வெளியில் நிற்கிறார்" என்றான்.

"அதற்கென்ன, வரச்சொல்" என்றார் லக்ஷ்மிகாந்தர். வேலைக்காரன் வெளியே சென்று தன் எஜமானைப் பார்க்க

வந்தவரை அழைத்துக் கொண்டுபோய் லக்ஷ்மிக்காந்தரின் முன் விட்டான்.

வந்த அந்நியர் லக்ஷ்மி காந்தரைக்காணவும் தம் கையில் வைத்திருந்த ஒரு கடிதத்தை அவரிடம் கொடுத்தார். காந்தர் அதை வாங்கிப் பிரித்துப் பார்த்தார். அதில் பின்வருமாறு எழுதியிருந்தது.

"எஜமான் அவர்களுக்கு,

நான் ஓர் அவசர காரியமாக வெளியூர் செல்கிறேன். திரும்பி வருவதற்கு இன்னும் நாலைந்து நாட்கள் செல்லும். அதுவரையில் எனக்குப் பிரதியாக இருந்து ஆகவேண்டிய காரியங்களைப் பார்ப்பதற்கு இக்கடிதம் கொண்டுவரும் ஜகதீசர் என்பவரை அனுப்பியிருக்கிறேன். இவர் எனக்கு மிகவும் பழக்கமுடையவர். யோக்கியர். ஆதலால் தயவுசெய்து இவரை வைத்துக்கொண்டு நாலைந்து நாட்களைக் கடத்துவதோடு, நான்நேரில் வரக்கூடாமைபற்றி என்னை மன்னிக்கக் கோருகிறேன்.

இங்ஙனம்:
தங்கள் காரியஸ்தன்,
பலராமன்"

இதைப் பார்த்துவிட்டு லக்ஷ்மிகாந்தர், "அம்மா, சரஸ்வதீ!" என்று கூப்பிட்டார். ஒன்றும் பதில் இல்லை. மீட்டும் ஒருமுறை "அம்மா, சரஸ்வதி, சரஸ்வதீஇ !" என்று அழைத்தார்.

"இதோ வந்தேன்" என்று சொல்லிக்கொண்டு ஓர் இளமங்கை ஓடிவந்து லக்ஷ்மிகாந்தரண்டை நின்றாள்.

"அறைக்குள் சும்மா என்ன பண்ணுகிறாய் ? கிடக்கட்டும். பலராமர் இன்னும் நாலைந்து நாளைக்கு வரமாட்டா

ராம். அதுவரையில் இதோ வந்திருக்கும் இவர்” என்று ஜகதீசரைச் சுட்டிக்காட்டி, “—இவர் பெயர் ஜெகதீசர்— நமது வீட்டுக் காரியங்களைப் பார்த்துக் கொள்வார். ஆக வேண்டிய காரியங்களுக்கு அவரிடம் சொல்” என்றார் லக்ஷ்மிகாந்தர்.

சரஸ்வதி, தன் தந்தை காட்டிய ஜெகதீசரை, தான் பார்ப்பது அவருக்குத் தெரியாமல் பார்த்தாள். அவர்க்குச் சற்றேறக்குறைய நாற்பதுவயதிருக்கலாம். தலைமயிர் சிறிது நரைத்திருந்தது; உடல் சற்றுப் பருத்திருந்ததாயினும், உடம்பின் உயர்ச்சியால் அது அவ்வளவாகத்தெரியவில்லை. அவர் முகத்தில், அவர் நுண்ணறிவு நன்றாய்விளங்கிற்று. இந்த ஜகதீசர் யரோ வென்று நமது வாசகர்கள் ஐயுறவேண்டாம். இவரே கோபாலர்.

முத்தனுசாரி மூலமாகச் சரஸ்வதியின் இருப்பிடத்தை அறிந்த கோபாலர், அவளை நேரிற்கண்டு அவள் செயல்களைக் கவனித்து வரவேண்டுமென்ற கருத்துடன், லக்ஷ்மிகாந்தரின் காரியஸ்தரைக் கண்டுபிடித்து, அவரைத் தமக்கு உதவியாக்கிக்கொண்டு, அவர் வேலையைச் சிலநாள் தாம் பார்ப்பதாக ஏற்றுக்கொண்டார்.

கோபாலருக்கும் தாம் மேற்கொண்ட காரியம் பெரும்பாலும் கைகூடி வருவதைப்பற்றிச் சிறிது திருப்தி யுண்டாயினும், நல்லதம்பித் தேவர்க்குக் குறித்த தவணை நெருங்கிவிட்டதே என்ற கவலை ஒரு புறத்திலிருந்தது. அன்றைய தினம் ஏழாம் நாள் ! இன்னும் ஒரே நாள்தான் இருக்கிறது! அந்த ஒரு நாளைக்கு மற்றக் காரியங்கள் யாவும் முடிந்துவிடுமா ? ‘ஊக்கம் குறையாமல் முயன்றால் உள்ளபடி ஆகிறது’ என்றெண்ணிக்கொண்டு சரஸ்வதியைக் கவனியாததுபோலக் கவனித்தார்.

ஆ, என்ன சுந்தரமான வடிவு! கருமணல்போன்ற கேசமும், புடைத்துச் சரிந்த தோள்களும், சங்கைப் பழித்த கழுத்தும், ஒடுங்கிய இடையும், மெல்லிய பாதங்களும்—இவை யாவற்றையும் விட—மாம்பிஞ்சையும், குமிழம் பூவையும், கோவைப் பழத்தையும், முல்லை யரும்பையும் பெற்ற ஒரு மதியம் போன்ற முகமும் சீரிய சொற்கவிவாணர் தம் கூரிய அறிவுகொண்டு நேரிய உவமை கண்டு பாடுவதற்கும் ஏலாதவாறு அவ்வளவு அருமையாய் அமைந்திருந்தன!

"அந்தக் கருங்குழலும் மதிமுகமும் அவளையே நினைவூட்டுகின்றன. பிரதிமையின் முகத்திற்கும் இவள் முகத்திற்கும் பேதமில்லை. இத்துணை அழகுடன், இவ்வளவு கௌரவமான குடும்பத்திற்பிறந்த இவள், அத்துணைக் கொடிய செய்கைகளைச் செய்திருப்பாளா? ஏன் இருக்கக்கூடாது? அரசகேசரி சம்மந்தப்பட்ட விஷயங்களில் எச்செயலும் அதிசயமென்று கருதக்கூடாது. இருக்கட்டும், இவள் செயல்கள் ஒவ்வொன்றையும் விடாது கவனித்து வந்தால் யாவும் எளிதாய் விடும்."

இவ்வாறு யோசித்துக்கொண்டு கோபாலர்—ஜகதீசர்—நிற்கும்போது லக்ஷ்மிகாந்தர் தம் மகளைநோக்கி, "அம்மா, சரஸ்வதி! இவருக்கு நமது பலராமர் இருந்து வேலை செய்யும் இடத்தைக்காட்டி செய்யவேண்டிய வேலைகள் இன்னவென்றும் சொல்லிவிடு" என்றார்.

சரஸ்வதி அங்ஙனமே ஜகதீசரைத் தன்னுடன் வரும்படி குறிப்பித்துத் தான் முன் சென்றாள். ஜகதீசர் அவளைத் தொடர்ந்து சென்று அவள் காட்டிய ஓர் இடத்தில் அமர்ந்து, தாம் செய்யவேண்டிய வேலைகளை அவள் காட்டத் தெரிந்து செய்து கொண்டிருந்தார்.

* * * * *

மாலை ஆறுமணி ஆயிற்று! கோபாலர் தமது புது உத்தியோகத்தை முடித்துவிட்டு எழுந்து லக்ஷ்மிகாந்தரிடம் சென்று, தம் இல்லம் செல்ல விடை பெற்றேகினர்.

ஆனல், அவர் உண்மையில் வீட்டைவிட்டு வெளிச் செல்லவில்லை. சரஸ்வதியின் செயல்களைக் கவனிக்க வேண்டியே அங்கு வந்தவராதலால், அங்குதானே ஒரு மறைவிடத்திற் பதுங்கியிருந்தார்

மணி ஆறரையாயிற்று! லக்ஷ்மிகாந்தர் வீட்டிற்கு ஒரு யௌவனர் வந்தார். அவரைக் காணவும் லக்ஷ்மிகாந்தர் புன்முறுவல் பூத்து "வாருங்கள்! வாருங்கள், இப்படி உட்காருங்கள்" என்று கூறித் தம் எதிரிலிருந்த நாற்காலியைச் சுட்டிக்காட்ட, யௌவனர் அதில் அமர்ந்தார். பிறகு லக்ஷ்மிகாந்தர் தம் மகளை அழைத்து "குழந்தாய்! விஜயசுந்தரம் வந்திருக்கிறார். தாகத்துக்குக் கொண்டுவந்து வை" என்றார்.

சரஸ்வதி வந்தமர்ந்த யௌவனரைக் கடைக் கண்ணால் பார்த்துக்கொண்டே உட்செல்லத் திரும்பினள்

அது கண்ட யௌவனர் "வேண்டாம், வேண்டாம். எனக்கு இப்பொழுது தாகத்துக்குவேண்டாம். சற்றுமுன் தான் சிற்றுண்டியருந்தி வந்தேன்" என்றார். "ஆனல் சரி" என்று சொல்லிக்கொண்டு சரஸ்வதி திரும்பிவந்து தன் தந்தையருகே நின்று கொண்டிருந்தாள். அங்ஙனம் நின்ற பொழுதெல்லாம் அவள் பார்வை யௌவனர்மீதே யிருந்தது. யௌவனர் லக்ஷ்மிகாந்தரோடு வார்த்தையாடிக்கொண்டிருந்தாராயினும், இடையிடையே அவர் கண்கள் சரஸ்வதியின் கண்களைச் சந்தித்தன. அங்ஙனம் சந்திக்கும்போதெல்லாம், சரஸ்வதி தன் கண்ணாற் கூறிய விஷயங்கள் பல. யௌவனர்

தம் இடைவிட்ட பார்வையாற் புலப்படுத்திய விஷயங்களும் பல.

" கண்ணொடு கண்ணிணை நோக்கின் வாய்ச்சொற்கள்
என்ன பயனு மில "*

என்ற பொய்யாமொழி பொய்யாதன்றோ ?

லக்ஷ்மிகாந்தர் இல்லத்தின் இரண்டாங் கட்டிற்குச் செல்வதற்கு அமைக்கப்பட்டிருந்த வாயிலில் தொங்கிய ஒரு பட்டுத்திரை ஒரு புறமாகச் சுருக்கப் பெற்றிருந்தது. அத் திரை மறைவில் நின்றுகொண்டு கோபாலர் கூடத்தில் அமர்ந்திருந்த யௌவனரை உற்று நோக்கிக் கொண்டிருந்தார். அப்பொழுது அவருக்கு ஓர் உண்மை வெளியாயிற்று. அதாவது, விஜயசுந்தரம் என்ற யௌவனர் உண்மையில் அரசகேசரி என்பதே !

" ஆ, எவ்வளவு சாமார்த்தியமாய் அவன் தன் உருவை மாற்றுகிறான் ! இந்த இடத்தைவிட்டு வேறோர் இடத்தில் இவனைக் கண்டிருப்பேனானால், இவன் அரசகேசரியாயிருக்கலாம் என்றுகூடச் சந்தேகிக்க மாட்டேனே ! எனக்கே அவ்வாறுகுமானல் பிறர்க்குக் கேட்பானேன் ? என்ன தைரியம் ! தன் மாயவலைக்குட்படுத்திய ஒரு பேதைப்பெண்ணைத் தீயசெயல்களுக்குத் துணையாக்கிக் கொண்டதுமன்றி மகாயோக்கியன்போல அவன் தந்தையிடத்திலும் பழகிவருகிறானே ! லக்ஷ்மிகாந்தரிடம் அவன் நெருங்குவதற்குக் காரணம் யாதாயிருக்கும் ? ஆ ! என் நெஞ்சம் பதைக்கிறது ! இப்பொழுதே அவனைப் பிடித்துப் பிணித்துச் சிறைக்கூடத்திற்குக் கொண்டு போய்விட்டால் என் மனம் அமைதி

---

* திருக்குறள். இதன் பொருள்:—காதலர் இருவர் கண்கள் ஒன்றையொன்று நோக்கினால், வாயைத் திறந்து சொல்லும் சொற்களால் ஒரு பயனுமில்லை. வாய்ச்சொல் வேண்டுவதில்லை என்பது கருத்து.

யுறும். ஆனல்—இதுவல்ல சமயம். இன்னும் சிறிது பொறுப்போம். நமக்கு இன்னும் ஒரு நாள் இருக்கிறது. அதற்குள் பதறவேண்டாம்.”

இவ்வாறு கோபாலர் சிந்தித்துக்கொண்டிருக்கும்போது யெளவனர் தம் இருக்கைவிட்டெழுந்து, லக்ஷ்மிகாந்தரை நோக்கி, “நேரமாகிறது. நான் போய்வருகிறேன்” என்ருன்.

“நல்லது” என்றனர் லக்ஷ்மிகாந்தர்.

யெள்வனர் சென்றனர். சரஸ்வதி தன் தந்தையை நோக்கி, “என் அப்பா, தங்களுக்குச் சாப்பாடு தயார்செய்யட்டுமா?” என்ருள்.

“இன்னும் நேரமாகவில்லையே?”

“என், இதோ மணி ஏழடிக்கப்போகிறது சாப்பிட்டு முடிய எட்டாய் விடாதா?”

“ஆனல் சரி” என்ருர் லக்ஷ்மிகாந்தர்.

லக்ஷ்மிகாந்தர் வீட்டில் எரிந்து கொண்டிருந்த விளக்குகள் யாவும் மின்சார விளக்குகள். அவைகளைப் பொருத்துவதற்கும் அணைப்பதற்கும் உரிய திருகாணிகள் ஒவ்வொரு விளக்குக்கும் தனித்தனியே அமைக்கப்பட்டிருந்தன. அங்ஙனமே, கூடத்தில் பிரகாசித்த விளக்கின் திருகாணி கூடத்துச் சுவரில் அமைத்திருந்தது. சரஸ்வதி தனது தந்தையிடம் வார்த்தையாடிக்கொண்டு நின்ற இடம் அத்திருகாணிக்கு அருகாமையே. “ஆனல் சரி” என்று லக்ஷ்மிகாந்தர் கூறியபோது, சரஸ்வதி அந்த மின்சாரவிளக்கின் திருகாணியைத் திருகினள். உடனே கூடத்தில் பிரகாசித்துக்கொண்டிருந்த விளக்கு அணைந்துபோயிற்று.

“என் அம்மா அது?” என்ருர் லக்ஷ்மிகாந்தர்.

சரஸ்வதி குலுக்கென்று சிரித்து, "சும்மா இந்தத் திருக்காணியைத் தொட்டேன், வேறொன்றுமில்லை, இதோ திருப்பிவிடுகிறேன்" என்று கூறி ஆணியைத் திருப்பினாள். விளக்கு முன்போலப் பிரகாசித்தது.

விளக்கு அணைந்தபோது ஆச்சரியமுற்ற கோபாலர் மீட்டும் விளக்கு பிரகாசித்தபோது "ஏன் இவள் இப்பொழுது விளக்கை அணைத்தாள்" என்று தமக்குள் கூறிக்கொண்டு சரஸ்வதியை உற்று நோக்கினார்.

அவர் கண்கள் கண்ட காட்சி அவர்க்குப் பேரதிசயத்தை விளைத்தது. 'இது உண்மையா யிருக்கக்கூடுமா அல்லது நமது சித்தபிரமையா' என்றெண்ணிக் கண்களைக் கசக்கிப் பார்த்தார், ஆம் உண்மையே. வெளியே செல்வது போல நடித்துச்சென்ற விஜயசுந்தரம்—அரசகேசரி—சரஸ்வதியின் கரத்தைப்பற்றி நின்றான்! கோபாலர் நெஞ்சம் கொதித்தது. கண்கள் கூசின. 'பொன் வள்ளத்திற்பெய்த அமுதத்தை நஞ்சுடைய நாகந் தீண்டுவதுபோல, அரிய கல்விக்கு உரிய தெய்வத்தின் பெயர் வாயந்து, அதற்கேற்ற உருவம் வாய்ந்த இந்தப்பேதைப் பெண்ணின் கரத்தை இப்பாதகனா தீண்டவேண்டும்' என்று கோபாலர்மனம்நொந்தார்.

நாற்காலியிற் சாய்ந்திருந்த தன் தந்தைக்குப் பின் புறத்தே சரஸ்வதி நின்றமையால், லக்ஷ்மிகாந்தர் தம்மகளைப் பார்க்க இடமில்லை.

"சாப்பாடு சிததம் செய்கிறேன், அப்பா" என்று கூறிவிட்டுச் சரஸ்வதி தன்காத்தைப் பற்றிய அரசகேசரியோடு இரண்டாங்கட்டுக்குச் சென்றாள். அக்கட்டின் வாயிலைக் கடக்கும்போது அரசகேசரி, தாம் நின்ற இடத்திற்கு

இரண்டடி தூரத்தில், செல்வதைக்கண்ட கோபாலர், அப்படியே அவன்மீது பாய்ந்து அவன் கழுத்தைப் பிடித்து நெரித்து விட்லாமா என்றெண்ணினுர்.

அரசகேசரியும், சரஸ்வதியும் அங்கிருந்ததோர் சோபாவின்மீது அமர்ந்தனர். உடனே சரஸ்வதி முகம் வாடி, நெட்டுயிர்த்து, சோபாவின்மீது சாய்ந்தாள், அரசகேசரி அவளைத் தழுவி எடுத்து, "என் உயிரே! ஏன் அயர்கின்ருய்?" என்ருன்.

சரஸ்வதி மீட்டும் நெட்டுயிர்த்து அரசகேசரியின் முகத்தை ஏறிட்டுப் பார்த்தாள்.

"அன்பே! எனது ஒரு விருப்பம் நீ மனம் மகிழ்ந்திருக்கவேண்டுமென்பதே" என்ருன் அரசகேசரி.

"நான் மனம் மகிழ்ந்துதானிருக்கிறேன்."

"இல்லை. மனம் மகிழ்ந்திருந்தால் இந்தவாட்டம் ஏன்? முகச்சோர்வு ஏன்? கண்ணே! உனது மதிவதனம் ஒளி மழுங்கக்கண்டால் என் உள்ளம் பிளக்கிறது! உனக்குற்ற குறையென்ன?" என்று கேசரி கேட்க, அவள் அவன் முகத்தை நோக்கி "ஒன்றுமில்லை" என்று கூறிப் புன்னகை செய்தாள். ஆ! அப்புன்னகை எவ்வளவு விசனகரமாயிருந்தது! அரசகேசரி அவள் மோவாயைத் தொட்டு, "கண்மணீ! வேண்டாம். காரணமின்றி வருத்தாதே முகம் மலர்ந்திரு, நீ வருந்த நான் சகியேன்" என்ருள்.

சரஸ்வதி, தனது தாமரைக்கையை நீட்டி, "அன்ப! இந்தக் கை, தாங்கள் தொட்டு முத்தமிடும் இந்தக் கை, என்னை அன்பாய் வளர்த்த தந்தைக்கு உணவு பரிமாறும் இந்தக் கை, ஈசன் திருவடிகளைத் தொழுதற்குப் படைக்

கப்பட்ட இந்தக் கை, என்னுடையதாய் இருக்கும் வரையில் எனக்கு மகிழ்ச்சி எங்கிருந்து வரும்?" என்ருள்.

"ஏன், ஏன் அப்படிச் சொல்கிருய்?"

"இது—உயிர்க்கொலை செய்திருக்கிறதே!"

அரசகேசரியின் முகம் வேறுபாடுற்றது.

"போதும், உரக்கப் பேசாதே! ஏன் அதைப்பற்றியெல்லாம் நினைக்கிருய்? போனது போய்விட்டது. அதைப்பற்றி நினைத்துப் பயனில்லை. உன் தந்தைக்கு உணவு தயார் செய்வதாகக் கூறி வந்தனையே அதைப்பார். அவர் காத்திருப்பார்" என்று கூறி அவன் அவள் கையைப்பற்றிப் பன்முறை முத்தமிட்டான். அப்பொழுது அவள் முகம் சிறிது சிறிதாய் மலர்ந்தது.

அவள் அவனைநோக்கி, "காதலா! தங்கள் காதல் ஒன்றிருந்தால் அதுவே எனக்குப்போதும். தாங்கள் என்னைக் காதலிக்கத் தவறக்கூடாது. என்னைப்போல் வேறெந்தமங்கையும் தங்களைக் காதலிக்கமாட்டாள், நான் செய்தனவெல்லாம் தங்கள் மனதைச் சந்தோஷப்படுத்தவேண்டியே. இன்னும் செய்வன வெல்லாம்—காதலா!—தங்கள் கட்டளைப்படியல்ல, தாங்கள் வாய்திறந்து கூருத மனே விருப்பத்தின்படியாகும். தங்கள்பொருட்டு, என் இயற்கைக்கு மாருகவும், என் மனசாட்சிக்கு விரோதமாகவும்பல காரியங்களைச் செய்கிறேன்—என்னையும் அறியாமற் செய்கிறேன்......எதையும் முன்பின் யோசியாதுசெய்கிறேன், ஏன்எனில், அது தங்களுக்கு உதவியாயிருக்கும்—தங்களுக்கு விருப்ப முள்ளதாயிருக்கும்......இதுவரையில் மட்டுமல்ல, இனியும், நாளைக்கும், என்றைக்கும் அவ்விதமே செய்யச் சித்தமாயிருக்கிறேன்" என்ருள்.

அரசகேசரி பெருமூச்செறிந்து, "ஆ! சரஸ்வதி! உன்னை ஏன் நான் எனது விசித்திரவாழ்க்கையிற்கலந்தேன்? நீ மூன்று வருஷங்களுக்கு முன்னே காதலித்த விஜயசுந்தரமாகவே நான் இருந்திருக்கவேண்டும். எனது மற்றொரு—வாழ்க்கையை நீ அறியச்செய்தது தவறு" என்றான்.

"ஏன், அந்த மற்றொருவரையும் நான்காதலிக்கிறேன்" என்று கூறித்தொடர்ந்து "நான் எதைப்பற்றியும் வருந்துவதில்லை—சற்றும் வருந்துவதில்லை—எப்பொழுது? தங்களருகிருக்கும் பொழுது. எனது கண்கள் தங்களைக்காணும் போது, குற்றம் என்பது ஒன்றில்லை, பாவம் என்பது ஒன்றில்லை. தாங்கள் இல்லாதபொழுது நான் எப்படியிருந்தால் தான் என்ன?—என் செயல்களைக் குறித்து மனம்வருந்திக் கண்ணீர்விட்டுக் கதறினால்தான் என்ன?—ஒன்றும் பாதகமில்லை! தங்கள் காதல் எல்லாவற்றையும் போக்கி விடுகிறது......நான் எதையும் செய்யச் சித்தமாயுள்ளேன்..... ஆனால் ஒன்று தாங்கள் என்னைக் காதலிக்க வேண்டும்!" என்றாள் சரஸ்வதி.

"நான் உன்னைக்காதலிப்பது கட்டாயத்திற்காகவல்ல, என் ஆருயிரே! உன் பொருட்டே—உன்மீது கொண்ட காதலின்பொருட்டே உன்னைக் காதலிக்கின்றேன். நான் உன்னிடம் பல விஷயங்களைப்பற்றிப் பேசக்கருதிவந்தேன். ஆனால் நேரமாகிவிட்டது. உன் தந்தைக்கு உணவு சித்தஞ்செய் நான் போகிறேன். இரவு பத்து மணிக்குமேல் அங்குவா, பேசிக்கொள்வோம்" என்று அரசகேசரி எழுந்து இரண்டாங்கட்டின் எல்லைச் சுவரின் நடுவே அரை வட்டமாக இருந்த ஒரு தூணை நோக்கிச்சென்றான்.

திரைமறைவிலிருந்து நடந்தவற்றை யெல்லாம் கவனித்துக்கொண்டிருந்த கோபாலர் அரசகேசரி வெளியே

செல்வதை விட்டுக் கற்சுவரைநாடிச் செல்லக் காரண மென்ன வென்று கவனித்துக் கொண்டிருந்தார்.

கல்தூணிற்கருகே சுவரில் ஒரு டஅறு ஆணி அடித் திருந்தது. அரசகேசரி அதைப்பிடித்துத் திருப்பினான். உடனே அரைவட்டமாகக் காணப்பட்ட கற்றாண் சுழன்று புடைப்பான அரைவட்டமும் மறைந்து, நடுவே பிளக்கப் பட்ட மூங்கிலைப்போலக் குடைவான உட்புறம் மட்டும் தோன்றும்படி நின்றது. கேசரி அதனுட்சென்று வெளிப் புறம் நோக்கி நின்றுகொண்டு, முன் திருப்பிய ஆணியை முன்னிருந்தவாறே திருப்பினான். உடனே தூண் எப்புற மாகச் சுழன்றதோ அதற்கு எதிர்ப் புறமாக மீட்டும் சுழன்று ஆதியிலிருந்தவாறே வந்து நின்றது; மறுகணத்தில் அது மேலேறியது போலும் மீட்டும் இறங்கியது போலும் தோற்றியது.

“ஆ, இதுவே அந்தரங்கவழி, இப்பொழுது அறிந்து கொண்டேன். கருணாகரர் வீட்டிலும் இவ்வாறு அரை வட்டக் கற்றாண் ஒன்றுள்ளது வாசுதேவர் அரசகேசரி யைச்சந்தித்த வீட்டிலும் ஒன்றுள்ளது. அந்த ஆணியை முன்னம் கவனியாதிருந்து விட்டோம். இனி யாவும் ஜயமே” என்று தமக்குள் சொல்லிக்கொண்டார்.

கோபாலர் இவ்வாறு சிந்தனைசெய்து கொண்டிருக்க, சரஸ்வதி உணவு சித்தஞ்செய்து தன் தந்தைக்குப் பரிமாறி விட்டுத் தானும் உண்டாள்.

* * * *

இரவு மணி ஒன்பதாயிற்று. லக்ஷ்மிகாந்தர் படுத் துறங்கிவிட்டார். சரஸ்வதியும் மின்சார விளக்குகளை அணைத்துவிட்டுப் படுக்கைக்குப் போய்விட்டாள். கோபா லர் திரை மறைவிலிருந்து மெல்ல வெளிவந்து, தெருவாயிற்

படிக்கதவை அரவப்படாமல் திறந்துகொண்டு வெளிச் சென்றார். அடுத்த அரைமணி நேரத்தில் லக்ஷ்மிகாந்தர் வீட்டு வாயிலில் ஒரு மோட்டார்வண்டி அதிக அரவப்படா மல் வந்து நின்றது. அதிலிருந்து கோபாலராகிய ஜகதீசர் இறங்கி, முன் வெளிவந்த விதமாகவே உட்சென்று சரஸ்வ தியின் படுக்கையறையுட் புகுந்து கதவடியில் ஒளிந்திருந் தார்.

மணி பத்தடித்தது. சரஸ்வதி கட்டிலினின்றும் இறங் குவதாகக் கோபாலருக்கு ஓர் உணர்ச்சி தோன்றியது. அவர் தம் சட்டைப்பையிலிருந்து ஒரு சிறு மின்சாரவிளக் கை எடுத்து அதில் அமைக்கப்பட்டிருந்த ஒரு குமிழை அழுத்தினர். பளிச்சென்று ஒரு வெளிச்சமுண்டாயிற்று. அவ்வெளிச்சத்தில், தாம் உணர்ந்தது சரிதானே என்று கட்டிலை நோக்கினர். உணர்ந்தது உண்மையே! கட்டிலி னடியில் சரஸ்வதி நின்று கொண்டிருந்தாள். கோபாலரைக் காணவும் அவள் அறிவு மயங்கினள். கோபாலர் அவளை நெருங்கி அவள் கையில் ஒரு கடிதத்தைக் கொடுத்தார்.

சரஸ்வதி மிகுந்த கோபத்தோடு அவரை நோக்கி ஏதோ சொல்ல வாயெடுத்தாள். கோபாலர் சைகையால், வாய்திறவாது கடிதத்தைப் பார்க்கும்படிக் குறிப்பித்தார். சரஸ்வதி சற்று நிதானித்துக் கடிதத்தைப் பிரித்துப் பார்த் தாள். அதில் பின்வருமாறு எழுதப் பெற்றிருந்தது:—

" சரஸ்வதி,

'அல்லவை செய்தார்க்கு அறங்கூற்ற' மெண்பதைக் கருதாது, அரசகேசரியின் மீதுகொண்ட மூடக்காதலால், அறிவிழந்து, உன்னுடைய பிறப்புக்கும், கல்விக்கும், அழ குக்கும், பெயருக்கும் பொருத்தமில்லாத கொலை, களவு

முதலிய கொடிய செயல்களைச் செய்யத் துணிந்துவிட்டாய். நீ செய்தன யாவும் ருசுவோடு வெளியாய்விட்டன. இனி அவைகளை மறைப்பது இயலாது. உன்னை மகா சற்குண புத்திரியென்று கருதியிருக்கும் உன் தந்தைக்கெதிரே, நீ குற்றஞ் சாட்டப்பட்டு அவமானமுற விரும்பா யென்றெண்ணுகிறேன். உனது தந்தையிடத்தில் விஜயசுந்தரம் என்ற பெயரோடு வந்து பழகிக்கொண்டிருக்கும் உன் காதலன் சிறைப்படுவது நிச்சயம். நீ கருணாகரரைக்கொண்டு பெற முயன்றதும், நல்லதம்பித்தேவரைப் பயமுறுத்திப் பெற்றதுமான நீலக்கல் மோதிரம் உன்னிடமிருந்தால் கொடுத்துவிடு. அல்லது, அது யாரிடமுள்ள தென்று தெரிவித்து, அவரிடமிருந்து அதை நான் பெறுவதற்கு உன் கைப்பட ஒரு கடிதம் கொடு. இந்த இரண்டில் ஒன்று உடனே செய்யாவிட்டால் இவ்விடத்திலிருந்தே உனது தந்தையை அழைத்து அவரிடம் உனது உண்மை நிலையைக் கூறிவிடுவேன்.

அன்றியும் இன்றிரவு நீ நான் கொண்டுபோய் வைக்குமிடத்தில் சிறை யிருக்கவேண்டியது. ஆனால் பொழுது விடிவதற்குள் உன்னை இங்கு கொண்டுவந்து சேர்த்து விடுவேன்.

யோசித்து உடனே பதில் தெரிவிக்கவும்.

இங்ஙனம்
கோபாலர்
போலீஸ் அதிகாரி."

சரஸ்வதி இக்கடிதத்தைப் பார்த்ததும் ஒன்றுந்தோற்றாது கோபாலரை வெறிக்க வெறிக்கப் பார்த்துக்கொண்டு நின்றாள். பிறகு ஏதோ ஒரு தீர்மானத்துக்கு வந்தவள் போல அங்கிருந்த ஒரு மேஜையருகு சென்று ஒரு கடிதத்

தை எடுத்து அதில் ஏதோ எழுதி அதைக் கோபாலரிடம் கொடுத்தாள். கோபாலர் அதை வாங்கிப் பார்த்தார். அதின் உள்ளுறை வருமாறு:—

" சரஸ்வதி தன் தந்தையின்மீது மிகவும் பிரியம் உள்ளவள். ஆனால் தந்தையினும் அதிகமாய் அவள் நேசிக்கும் ஒருவருமுண்டு. அவரைச் சிறைப்படுத்தவே நீர் முயல்கிறீர். அவர் உம்மைப்போன்ற எத்தனை போலீஸ் உத்தியோகஸ்தர்களாலும் சிறைப்படுத்தப் படக்கூடியவர் அல்லர் என்பதை நீர் நினைக்கவில்லை. என்னைச் சிறைப்படுத்தி அதனால் அவரைச் சிறைப்படுத்த எண்ணியிருக்கும் உமது எண்ணத்திற்கு அவள் இணங்காள்.

" நீர் வேண்டுவது நீலக்கல் மோதிரம். அதைவேண்டுமானால் கொண்டுபோம். இதே அறையில உள்ள கருங்காலி மரப்பெட்டியின் பூட்டுவாயருகேயுள்ள தந்தக்குமிழை அழுத்தினால் அப்பெட்டி தானே திறக்கும். அதற்குள் நீலக்கல் மோதிரம் காணப்படும். அதை எடுத்துக்கொண்டு செல்லும். அதற்குமேல் எதற்கும் பிரயத்தனம் செய்ய வேண்டாம். அப்படிப் பிரயத்தனம் செய்தாலும் அது பலியாது.

" சரஸ்வதியின் மீது கொலைக் குற்றஞ் சாட்டினீர். அது அடாது. அவள் கருணாகாரரைக் கொன்றது உண்மையாயினும், அச்செயலை அவள் தன் மனமாரச் செய்யவில்லை. கருணாகரர் தூங்கும்போது அவர் கரத்திலிருந்த கணையாழியைக் கழற்றச் சென்றாள். அச்சமயம் அவர்க்கு அடிக்கடி உண்டாகும் சித்தப் பிறழ்ச்சி உண்டானது. அதைக்கண்டு அவள் பயந்து தன்னையும் அறியாமல் அங்கிருந்த ஒரு கத்தியால் அவரைக்......அதை நினைத்து அவள் பிறகு மிகவும் வருந்தினாள். இதை அறியவும்.

"இதற்குமேல் அவள் கூறக்கூடியது ஒன்றுமில்லே. மற்ருெரு முறையும் அவள் உமக்கு அறிவிப்பதாவது: நீர் நாடி வந்த நீலக்கல் மோதிரத்தை எடுத்துக் கொண்டு பேசாமல் வந்த வழியே செல்வதே உசிதம்."

இதைப் பார்த்துவிட்டுக் கோபாலர் அவன் எழுதிய படியே அங்கிருந்த கருங்காலிப் பெட்டியின் தந்தக்குமிழை அழுத்தினர். அதை அழுத்துவதால் வேருேரிடத்துள்ள மணி ஒன்று அடிக்கும் என்பதை அவர் அறியார். பெட்டி தானே திறந்து கொண்டது. அதற்குள் ஒரு சிறு தந்தப் பெட்டியிருந்தது. அதுவே வாசுதேவர் அந்திக் கடையில் வாங்கிய பெட்டி! கோபாலர் அதைத் திறந்தார். அதற்குள் நீலக்கல் மோதிரம் பிரகாசித்தது! மிகவும் சந்தோஷத்தோடு அதை எடுத்துத் தம் சட்டைப்பையுள் பத்திரப்படுத்திக்கொண்டார். பிறகு பெட்டியை மூடிவிட்டுச் சரஸ்வதியை நோக்கினர். அவள் அறைவாயிற் கதவை நோக்கிச் செல்ல எத்தனிப்பது கண்டு அவளேக் கையால் மறித்தார்.

அப்பொழுது துப்பாக்கி சுடும் சத்தம் ஒன்று அவர் அருகே கேட்டது. அவர் ஆச்சரியமுற்றுத் திரும்பினர். சரஸ்வதி அவர் கையைத் தள்ளிவிட்டு முன்செல்ல விரைந்தாள். அதே கணத்தில் அவள் மார்பில் ஒரு குண்டு பாய்ந்தது. "ஆ!" என்று மார்பைப் பிடித்துக்கொண்டு கீழ் விழுந்தாள் சரஸ்வதி.

"ஆ! சரஸ்வதி!" என்று அலறிக்கொண்டு அறைவாயிலினின்றும் ஒருவர் குதித்தோடி வந்து அவளேத்தூக்கி. மார்போடணேத்துக்கொண்டு, "கண்மணி! மோசம் போனேன்?" என்ருர்.

கோபாலர் அவரை உற்றுநோக்கினர். யார் அது? அரசகேசரி!

சரஸ்வதி அரசகேசரியின் முகத்தை இரண்டு மூன்று முறை விழித்து விழித்துப் பார்த்துவிட்டுக் கண் சோர்ந்தாள். பேச முயன்றாள். அவள் நாவெழவில்லை. முகம் கோரமுற்றது.

"கண்ணே! பாவி நான் என்ன காரியஞ் செய்தேன்! நீ அடித்த ஆபத்து மணியைக்கேட்டு இங்கு வந்தபோது, இந்தப் பாழும் கோபாலர் கை உன்மீது படும் போலிருந்தது. உன்னைத் தீண்டத் துணிந்த அவர் கரத்தைச் சுடவெண்ணி, என் கைத்துப்பாக்கியாற் சுட்டேன். அச்சமயம் நீ என்னைக்கண்டு ஆவலோடு வந்தமையால் அந்தக் குண்டு உன்மீது பட்டுவிட்டது. ஆ இதற்கென் செய்வேன்! காதலி! உன்னை இழந்து நான் எவ்வாறு உயிர் வாழ்வேன்'' என்று அரசகேசரி புலம்பிக்கொண்டிருக்கையில் சரஸ்வதி ஒருமுறை கண்விழித்துக் கோபாலரைப் பார்த்தாள். பின் அரசகேசரியைப் பார்த்தாள், மீட்டும் கோபாலரைப் பார்த்தாள். பின் கண்மூடினாள். அவ்வளவு தான்! நிலையான அவள் ஆன்மா நிலையில்லா அவள் அழகிய உடலைவிட்டுப் பிரிந்தது.

அவள் உயிர்விடுந் தருணத்தில் கோபாலரையும் அரசகேசரியையும் மாறி மாறிப் பார்த்த பார்வை "கோபாலரே! அரசகேசரியைக் காப்பாற்றும்'' என்று சொல்வது போலிருந்தது. அந்தப் பார்வையால் கோபாலர் மனம் இளகியது. உயிர் நீத்த அவள் முகத்தைப் பார்த்தார். அவர் உணர்வு கலங்கியது. அப்படியே முகத்தை மூடிக்கொண்டு கருங்காலிப்பெட்டிமீது சாய்ந்தார்!

* * * *

சுமார் பத்து நிமிஷ நேரம் சென்றிருக்கும். கோபாலர் தன்னுணர்வு பெற்றுக் கண்விழித்துப் பார்த்தார்.

றந்த சரஸ்வதியும் அங்கில்லை. அவளைத் தாங்கியிருந்த ரசகேசரியும் அங்கில்லை!

உடனே கோபாலர் தாம் முன் பார்த்த அரைவட்டக் ற்றாணடியிற் சென்று அதற்கருகே யிருந்த ஆணியைத் திருப்பினார். தூண் சுழன்றது. அதன் குடைவுட்சென்று அதைமுன்போல் திருப்பிக்கொண்டு அதனுள் அமைத்திருந்த ஓர் ஆணியை அழுத்தினார். அக்கணமே தூண்மேலெழுந்தது. சிறிது தூரம் சென்று நின்றது. அது நின்றவிடம் ஒரு மாடியாகக் காணப்பட்டது, கோபாலர் தூண்விட்டு வெளிவந்து மாடியில் அடிவைத்தார். அங்கு யாதொரு வகையான சாமானும் காணப்படவில்லை! மாடியினின்று இறங்குவதற்கான படிக்கட்டு ஒன்று காணப்பட்டது. அதன் வழியே கோபாலர் கீழ் இறங்கினார். மாடியின் கீழும் யாதொரு வகையான சாமானும் காணப்படவில்லை. ஆனால் அவ்வீட்டை அதற்கு முன் பார்த்ததுபோல அவருக்கு ஒரு ஞாபகமுண்டாயிற்று. உற்றுக் கவனித்தார். தெருவாயிலைப் பார்த்தார். ஆம்! நன்றாய் ஞாபகமிருக்கிறது. அது நாராயண செட்டியார் வசித்த வீடே! கோபாலர்க்கு இப்பொழுது யாவும் நன்றாய் விளங்கின. நாராயண செட்டியாராய் நடித்தவர் அரசகேசரியின் கூட்டத்தைச் சேர்ந்தவரே! சரஸ்வதியின் உருவப் பிரதிமை அவரிடம் வந்தவகையும் இப்பொழுது தெளிவாயிற்று. ஆ! அரசகேசரி நீ ஓர் அதிசயப் பிறவியா யிருக்கிறாய். உன் செயல்களெல்லாம் ஒரு நவீனகமாகும் போலிருக்கிறதே. இவ்வுலகமாகிய நாடகமேடையில் நீ ஓர் அபூர்வ பாத்திரமாக நடிக்கிறாய். இம்முறையும் உன்னைவிட்டுவிட்டேன். தொலை. இனி என் வழியே வராதே. இருந்தும் இறந்தவனாக எங்காவது உன் காலத்தைக் கழித்துவிடு"

என்று கூறிக்கொண்டு கோபாலர் நாராயண செட்டியார் வசித்த வீட்டின் வாயிற்கதவைத் திறக்கப் போனார். கதவு வெளிப்புறம் பூட்டப்பெற்றிருந்ததால், மீட்டும் மாடிமீதேறி கற்றாண்வழியே லக்ஷ்மிகாந்தர் வீட்டை அடைந்தார். சரஸ்வதி தன் காதலனாலேயே கொலையுண்ட அறையைப் பார்க்கவும் அவர் மனம் நடுங்கியது. அவ்விடத்தை விட்டு வெளிச்சென்றார். லக்ஷ்மிகாந்தர் தன் படுக்கையில் அயர்ந்து நித்திரைசெய்து கொண்டிருந்தார். "பாவம்!" என்று சொல்லிக்கொண்டு கோபாலர் தெருவாயிலை அடைந்தார். அங்கு காத்துக்கொண்டிருந்த மோட்டார் வண்டியிலேறித் தம் இல்லம் சென்றார். மிகவும் அயர்ந்திருந்ததால் உடனே படுக்கையிற்சென்று படுத்து நித்திரை போயினர்.

* * * *

மறுநாள் பொழுது விடிந்தது! அன்றையதினம் சரஸ்வதி பூஜையின் எட்டாவது நாள்!

கோபாலர் காலைச் சிற்றுண்டி யருந்தி, தாம் முன்னாள் இரவு கொண்டு வந்த நீலக்கல் மோதிரத்தை எடுததுக் கொண்டு, நல்லதம்பி தேவர் வீட்டை நாடிச் சென்றார்.

நல்ல தம்பிதேவர் கோபாலரைக் கண்டதும் வாரும், வாரும், இன்றையதினம் எட்டாம்நாள் அல்லவா?" என்றார்.

கோபாலர் தாம் கொண்டு சென்ற நீலக்கல் மோதிரத்தை அவரிடம் கொடுத்து "தாங்கள் செட்டியாரிடம் வாங்கிய மோதிரம் இதல்லவா?" என்றார்.

"ஆம்" என்றார் தேவர். 4188.

முற்றிற்று.